
# கோகுலம்

GOKULAM

ஏப்ரல் '90 விலை ரூ. 3/–




காட்டுக்கு நீங்க ராஜாவா இருக்கலாம் — நம்ம வீட்டுக்கு நான்தான் ராணி! ஞாபக மிருக்கட்டும்!

# கோகுலம்

1990 ஏப்ரல் மாத இதழ்
மலர் 8 ○○ இதழ் 3




## என தருமைத் தம்பியரே, தங்கையரே!



எத்திக்கும் புகழ்பரப்ப எழுந்து வாரும்
 எனதருமைத் தம்பியரே, தங்கை மாரே!
சித்திரைநாள் பிறக்கிறது, புதிய ஆண்டின்
 செய்தி என்ன? சிந்தையிலே ஏற்கவாரீர்!
பத்திரிகை உலகினிலே பாலர்க் காகப்
 பண்பூட்டி, அன்பூட்டி, அறங்கள் சேர்த்து
சத்தான அறிவியலும் சான்றோர் வாக்கும்
 சார்ந்திடவே பரிமாறி வருகின் றோம்நாம்!

புதிதாகப் புத்தாண்டுச் செய்தி என்று
 புனைந்துரைக்க எதுவுண்டு? இருந்தபோதும்
விதையாக இருக்கின்ற நீங்கள் நாளை
 விளைவுக்கும் செழிப்புக்கும் தருக்கள் ஆவீர்!
அதனாலே சொல்லுகிறோம்: அவ்வப்போது
 ஆன்றோர்கள் மூதுரையை உரமாய் எண்ணிப்
பதிவாக்கிக் கொள்ளுங்கள் நெஞ்சக் குள்ளே.
 பயன்பெருகும், பண்புயரும், உலகம் உய்யும்!

சென்றதினி மீளாது, சிந்தை நோகும்
 செயல்வேண்டாம்; முயன்றிட்டால் வெற்றி கிட்டும்;
என்றென்றும் சத்தியமே வென்ற துண்டு;
 இன்பமுற அன்பொன்றே துணையாய் நிற்கும்;
ஒன்றென்ற இறையுணர்வு நெஞ்சில் கொண்டால்
 உயர்வுண்டு, பகையில்லை, துயரம் தீரும்!
இன்றுனது எண்ணமெலாம் நாட்டின் மேலே
 இருந்தாலே நாடாள வருவாய் நாளை!

அன்பு அண்ணன்,

கௌரவ ஆசிரியர்.

## இந்த இதழில்...

பக்.



# அதிக மதிப்பெண்

பள்ளி இறுதியாண்டு மற்றும் பத்தாம் வகுப்பிற்கான பொதுத் தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் படிப்பில் பிரகாசமான சில மாணவ, மாணவிகளைச் சந்தித்து அவர்கள் தங்களைத் தேர்வுக்கு எப்படித் தயார் செய்து கொள்கிறார்கள் என்று கேட்ட போது —

சிறு வயது முதல் இன்று வரை எப்போதுமே வகுப்பில் முதலாவதாக வரும் அடையாறு, பாரத் பள்ளி பத்தாம் வகுப்பு மாணவி செல்வி ஷோபனா ராதாகிருஷ்ணன்:

ஆரம்பத்திலிருந்தே நான் வகுப்பில் முதல் மாணவியா இருக்கேன்னா அதுக்குக் காரணம் என் அண்ணன்தான்! அவன் ரொம்ப நல்லா படிப்பான். நானும் எப்போதும் நல்லா படிச்சு முதல்ல வரணும் என்ற எண்ணம் எனக்குள் வேரூன்றி வளர அவன்தான் பெரும் தூண்டுதலாக இருந்தான். அது மட்டும் அல்ல; படிப்பு சம்பந்தப்பட்ட எல்லாச் சந்தேகங்களையும் கொஞ்சமும் பொறுமையிழக்காமல் சொல்லிக் கொடுத்துத் தெளிவுபடுத்துவான்.

வருஷ ஆரம்பத்திலிருந்தே அன்றைய பாடங்களை அன்றே படித்து விடும் பழக்கம் எனக்கு உண்டு. அதனால் தேர்வு நேரத்தில் பயமோ, உதறலோ வராது. சும்மா ரிவிஷன் தான் செய்வேன். இப்பவெல்லாம் காலையில் மூன்று மணி நேரமும் மாலையில்



* ஷோபனா ராதாகிருஷ்ணன்

# வெற்றி அனுபவங்கள்



* நிதின் மோகன்தாஸ்

பாரத் பள்ளியில் பிளஸ்டு படிக்கும் நிதின் மோகன்தாஸைச் சந்திக்க அவன் வீட்டிற்குச் சென்றபோது நிதின் வீட்டில் இல்லை. நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாட அருகில் உள்ள மைதானத்துக்கு ச் சென்றிருப்பதாகக் கூறிய நிதினின் அம்மா, அவனை அழைத்துவர ஆள் அனுப்பினார். நிதின் பள்ளியில் முதல் மாணவன்! இன்னும் சில நாட்களில் பொதுத் தேர்வு வருகிறது. ரொம்பவும் அக்கறையுடன் படித்துக் கொண்டிருக்கும் மாணவனைத் தொந்தரவு செய்யப் போகிறோமோ என்று நினைத்த எனக்கு, "சாரி அங்கிள், இதோ, இரண்டே நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்," என்று நெற்றி வியர்வை நிலத்தில் விழ விளையாடிவிட்டு வந்த நிதின் எனக்கு ஓர் ஆச்சரியமானான்! அவன் சொன்னான்:

எனக்குப் படிக்கிறதோடு விளையாடறதும் ரொம்பப் பிடிக்கும். ஒரு நாளைக்கு அதிகமாய்ப் போனால் இரண்டு மணி நேரம் மூன்றரை மணி நேரமும் முழு கவனத்துடன் பாடங்களைப் படிக்கிறேன். எனக்கு ரொம்பவும் பிடித்த பாடங்கள் பௌதிகமும் கணிதமும்தான்.

என்னைப் பொறுத்தவரை எந்த ஒரு புதிய பாடமோ அல்லது புரியாத கஷ்டமான பாடமாக இருந்தாலும் காலையில் எழுந்து படித்தால் சுலபமாகப் புரிவதோடு எளிதில் மறப்பதும் இல்லை. ரிவிஷன் நேரத்திலும், படிப்புக்கான விடுமுறை நாட்களிலும் எந்தெந்தப் பாடங்களை எவ்வளவு நேரம் படிக்க வேண்டும் என்று அட்டவணை போட்டு, கூடியவரை அதன்படிதான் படிக்கிறேன்.

விளையாட்டிலும், பள்ளியில் மற்றப் பாடங்களிலும் எனக்கு ஆர்வம் அதிகம். நான் நிறைய ஆங்கிலக் கவிதைகள் எழுதியுள்ளேன். நிறையப் பரிசும் வாங்கியுள்ளேன்.

புத்தகங்கள் படிப்பதுதான் என் பொழுதுபோக்கு. செய்தித் தாள்களில் விளையாட்டுச் சம்பந்தப்பட்ட விஷயங்கள்தான் ரொம்பவும் பிடிக்கும். பொது அறிவுக்காக, நாட்டு நடப்புகளையும், அரசியல் மாற்றங்களையும் படித்துத் தெரிந்து கொள்வேனே தவிர, அதில் கொஞ்சமும் ஆர்வம் இல்லை. எப்போதாவது டீ.வி. பார்ப்பேன். கால்பந்து ஆட்டம் நான் நேரிலும், டீ.வி.யிலும் விரும்பிப் பார்க்கும் ஓர் விளையாட்டு.

பாடப் புத்தகங்களுடன் தனியார் வெளியிடும் கைடுகளும் குறிப்புக்களும் படிப்பில் ரொம்பவும் உதவும். சில சமயம் குறிப்பிட்ட ஒரு கேள்விக்கான பதில் தெரிந்திருந்தாலும், அதை எப்படி வெளிப்படுத்த வேண்டும், எவ்வளவு சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள இந்த கைடுகள் உதவும். எல்லாவற்றுக்கும் மேலாக, படித்ததை அப்படியே மனப்பாடம் செய்வதை விடப் புரிந்து கொண்டு படிப்பதுதான் நல்லது. அப்போதுதான் படித்த வரிகள் மறந்து போகாமல் நாம் புரிந்து கொண்டதைக் கொண்டு நாமே எழுதலாம். எவ்வளவு கஷ்டமான பாடமானாலும், அதைப் புரிந்து கொள்ளாமல் படிப்பது வீண்தான்.

பாடங்களில் எந்தவொரு சந்தேகம் ஏற்பட்டாலும் பள்ளியில் ஆசிரியர்களிடமும், வீட்டில் பெற்றோர் அல்லது உடன் பிறந்தவர்களிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளத் தயங்கக் கூடாது. நன்றாகப் படித்து ஒரு கம்ப்யூட்டர் தொழில் நுட்ப வல்லுனராக வர வேண்டும் என்பதுதான் என் ஆசை.

படங்கள், பேட்டி: ராஜா பொன்சிங்



மஞ்சு – பிரியாந்தி

நான் படிப்பேன். அதுவும் குறிப்பிட்ட நேரம் எதுவுமில்லை. எப்பப் படிக்கனும் என்று தோன்றுகிறதோ அப்போ படிப்பேன். எனக்கு ரொம்பப் பிடிச்ச சப்ஜக்ட் கெமிஸ்ட்ரிதான். ஆனால் அதிகம் மார்க் வாங்கறது பௌதிகத்திலும் கம்ப்யூட்டர் சயன்ஸிலும்தான்.

என்னை விட வயதில் பெரியவர்களும், வாழ்க்கையில் ரொம்ப நல்ல நிலையில் இருக்கிற இளைஞர்களும்தான் என்னோட நண்பர்கள். அவங்கதான் எனக்கு வழிகாட்டிகள். அவர்கள்தான் என்னைப் படிப்பு என்பது ஒரு பயங்கரம் இல்லை; படிக்கும் நேரத்தில் புரிந்து கொண்டு கொஞ்சமும் கவனம் சிதறாமல் படிக்க வேண்டும்; நாம் எவ்வளவு நேரம் படிக்கிறோம் என்பது முக்கியமல்ல, எப்படிப் படிக்கிறோம் என்பதுதான் முக்கியம் என்பதை உணர வைத்தவர்கள்.

நான்தான் எங்கள் பள்ளியின் மாணவர் தலைவன். இந்தத் தலைமை எனக்குள் என்னைப் பற்றிய நம்பிக்கை வளரவும் பொது வாழ்க்கை பற்றிய பயம் அகலவும் காரணமாய் இருந்தது. இருக்கிறது.

பள்ளிகளுக்கிடையே வரும் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, மற்றும் வினாடி வினா ஆகியவற்றில் கலந்து கொண்டு நிறையப் பரிசும் வாங்கியுள்ளேன். சிறுவனாய் இருந்தபோதிலிருந்தே வீட்டில் வளர்க்கும் பிராணிகளான நாய்கள், பூனைகள் மீது எனக்கு ஆசை அதிகம். அதனால் ஒரு கால்நடை மருத்துவராக வர வேண்டும் என்று நான் நினைத்ததுண்டு. ஆனால் இப்போது எனக்கு ஒரு சிறந்த இரசாயனப் பொறியாளராக வர வேண்டும் என்பதிலும், எப்படியும் சென்னை ஐ. ஐ.டி. யில் சேர்ந்து படிக்க வேண்டும் என்பதிலும் ஆர்வம் திரும்பியிருக்கிறது.

பாடப் புத்தகங்களுடன் சில கைடுகளும் காம்படிஷன் சக்ஸஸ் அகர்வால் கரஸ்பான்டென்ஸ் கோர்ஸ் ஃபார் ஐ. ஐ. டி., ஜே. இ. இ. போன்ற வெளியீடுகளும் என்னை ஒரு தன்னம்பிக்கையுள்ள மாணவனாக ஆக்கியுள்ளது என்றால் மிகையாகாது.

**சர்ச் பார்க் ப்ளஸ்டு மாணவிகள் மஞ்சு மற்றும் பிரியாந்தி இவர்களை ஒரே நேரத்தில் விசாரித்த போது :—**

"தினமும் ரொம்ப நேரம் படிக்கிறதும் எப்போதும் படிப்பின் சிந்தனையில் இருப்பதும் சின்ன வயதிலிருந்தே பழகி விட்டது. அதனால் இப்போ தினம் குறைந்தது 12 மணி நேரமாவது படிக்கிறோம்." என்று தொடங்கிய பிரியாந்தியைத் தொடர்ந்தாள்

மஞ்சு.

''எங்களோட தேர்வு முறையில் அதிக மதிப்பெண்கள் – அதாவது 95% அல்லது 96% சராசரி எடுக்கவில்லை என்றால், நாங்கள் விரும்பும் தொழில் முறைக் கல்லூரிகளில் மருத்துவமோ, பொறியியலோ படிக்க முடியாது. அதனால்தான் ரொம்பவும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியிருக்கிறது.'' என்று கூறி நிறுத்தினாள் மஞ்சு.


பிரியாந்தி:''எங்களுக்கேபிடிக்கலேன்னா கூட அதிக மார்க் எடுக்க வேண்டுமானால் பாடப் புத்தகங்களை அப்படியே மனப்பாடம் செய்து, பின்னர் தேர்வில் எழுதத்தான் வேண்டும். ஏன்னா எங்களோட தேர்வு முறை அப்படிப்பட்டது. புரிந்த பாடங்களை எங்கள் பாணியில் எழுதினால் முழு மதிப்பெண் கிடைக்காது.''

மஞ்சு: ''எங்களுக்குப் பிடித்த பாடம் கணிதம்தான். விளையாடுவதற்கு நேரம் இல்லாவிட்டாலும் கால்பந்து, டென்னிஸ், ரொம்பவும் பிடிக்கும். எப்பவாவது டீ.வி.யில் பார்ப்போம். பொழுதுபோக்குன்னா புத்தகம் படிக்கிறதுதான்! தினப் பத்திரிகையில் விளையாட்டுச் செய்திகளை விரும்பிப் படிப்போம்.

பிரியாந்தி: நாங்க நல்லா படிக்கிறதற்கு முதல் காரணம் எங்களுக்கு மிகவும் நன்றாகச் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்களும் எங்களுக்குத் தேவையான நோட்ஸ், கைடுகள் வாங்கிக் கொடுப்பதுடன் வீட்டில் நாங்கள் நிம்மதியுடன் படிக்கிற சூழ்நிலையை உருவாக்கித் தரும் பெற்றோரும்தான்!''

மஞ்சு: ''இப்பெல்லாம் ஒரு ஐந்து நிமிஷம் டீ.வி. பார்த்தாலும் அதிலே மனப்பூர்வமா ஈடுபட முடியலே. எப்பப் பார்த்தாலும் தேர்வு ஞாபகம்தான். என்னதான் ரிலாக்ஸ்டா இருக்க நினைத்தாலும் மனசுல தேர்வு பற்றிய ஒரு பயம் இருக்கத்தான் செய்யுது. காரணம் எங்க வாழ்க்கையையே நிர்ணயம் பண்ணுகிற தேர்வு ஆயிற்றே இது!''

''தனியே ம்ணிக்கணக்கில் படிப்பதை விட இரண்டு மூன்று பேர் சேர்ந்து படிக்கும் போது கால நேரம் விரயமாவது போல் தோன்றினாலும், ஒருத்தருக்கு ஒருத்தர் விஷயங்களைப் பரிமாறிக் கொள்ளும் போது பாடங்கள் நன்றாக மனத்தில் பதிவதோடு எளிதில் மறப்பதும் இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, குறிப்பிட்ட பாடம் புரியாத ஒரு தோழிக்கு அதைச் சொல்லித் தரும் போது, நமக்கே நம்மைப் பற்றி நம்பிக்கை வருவதோடு தெரிந்த பாடத்தை ஒரு தரம் திரும்பப் படித்த உணர்வும் உண்டாகிறது.'' என்றவர்கள், ''நாளைக்குச் செய்முறைத் தேர்வு இருக்கிறது.'' என அடிக்கொருதரம் கடியாரத்தைப் பார்க்கவே, அவர்களுக்கு வழி விட்டு விட்டு அங்கிருந்து நகர்ந்தேன்!

# நல்லவர் பகையும் நலம் புரியும்



நட்பு என்பது ஒரு முக்கியமான குணம். நட்பு என்ற ஒன்று திருவள்ளுவருக்குப் பத்துக் குறள் கொண்ட ஓர் அதிகாரத்தில் அடங்கவில்லை. அவர் தவம், பெருமை, ஊழ் முதலியவைகளுக்கெல்லாம் ஒவ்வோர் அதிகாரமே அமைத்தார். நட்புக்கு மட்டும் ஐந்து அதிகாரங்கள் அமைத்துக் கொண்டார். நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீ நட்பு, கூடா நட்பு என்ற ஐந்து அதிகாரங்களில் ஐம்பது குறட்பாக்களால் நட்பினை நலம்பெற நவின்றார் செந்நாப் போதார்.

இந் நட்பின் தகைமையை ஔவையாரும், 'நல்லாரைக் காண்பதுவும் நன்றே,' 'தீயாரைக் காண்பதுவும் தீதே,' என்ற இரு வெண்பாக்களில் இருவித நட்பினை எடுத்துக் காட்டியுள்ளார்.

இனி உத்தம குணம் பொருந்திய நல்லவர் பகைப்பினும் நலமே புரிவர் என்பதனைப் பின்வரும் வரலாற்றினால் அறிக:

நாகநாதன் என்றொரு வேதியன் இருந்தான். அவன் வறியவன். ஒரு குறுநில மன்னனிடம் சென்று வேத வேதாந்தங்களைக் கூறி மகிழ்வித்தான். வேதியனுடைய கலை நயங் கண்டு களிகொண்ட அம் மன்னவன் சிறந்த மாணிக்கம் ஒன்றைப் பரிசாக வழங்கினான். அதனை எடுத்துக் கொண்டு பூசுரன் புறப்பட்டான். ஆகுகன் என்ற வேடன் நல்ல உள்ளம் படைத்தவன். 'இந்த மறையவன் சில நேரம் ஏதோ கூறி விலைமதிக்க முடியாத மாணிக்கத்தைப் பெற்றுப் போகின்றானே; நான் சென்று அதனைக் கவர்வேன்,' என்று கருதி வேதியனைத் தொடர்ந்து சென்றான்.

மாலை நேரம்; பெருங் காடு.

வேடன், ''ஏ வேதியனே! நில்,'' என்றான்.

வேதியன் திடுக்கிட்டான். மனங் கலங்கி நின்றான். 'அந்தோ! என் உயிர் பிரியுமே! என்செய்வேன்?' என்று ஏங்கினான். வேடன் நெருங்குவதற்கு முன் மாணிக்கத்தை வாயில் போட்டு விழுங்கி விட்டான்.

வேடன் வேதியனை நெருங்கி, ''மாணிக்கத்தைக் கொடு,'' என்றான்.

''அப்பா! என்னை இடர்படுத்தாதே; இதோ பார், மாணிக்கம் என்பால் இல்லை.''

''மாயவித்தை கற்ற மறையவனே! மன்னவன் தந்த மாணிக்கம் எங்கே சென்றது? உன் உயிரை மாய்ப்பேன். உண்மையை உரை வயிற்றைப் பிளப்பேன்.''

''உத்தம குணம் பொருந்திய வேடனே! என்பால் மாணிக்கம் இல்லை. என்னை வருத்தாதே.''

இவ்வாறு இருவரும் வழக்காடி நிற்கும் தருணம் அங்கு நான்கு கள்வர்

திருமுருக கிருபானந்த வாரியார்

கள் வந்தார்கள். அவர்கள் கத்தியும் கட்டாரியும் தாங்கிக் கால தூதர்கள் போல் நின்றார்கள்.

"ஏய்! இருவரும் நில்லுங்கள். மாணிக்கம் யாரிடம் உள்ளது? உண்மையை உரையுங்கள். இல்லையேல் உங்களைச் சித்திரவதை புரிவோம்," என்றார்கள்.

வேடன் உள்ளம் உலைந்தது. 'அந்தோ! இவ் வேதியன் வேதம் ஓதினவன். இவனை நம்பி இவன் குடும்பம் இருக்குமே! நம்மால் இவன் இறக்க நேர்கின்றதே. இந்தப் பாவத்துக்கு நாம்தானே காரணம்?' என்று எண்ணி இரங்கினான்.

"கள்வர்களே! உங்களுக்கு வணக்கம். மாணிக்கம் வயிற்றிலிருக்கக் கூடியதா? இதுவரை எங்காவது எவர் வயிற்றிலாவது மாணிக்கத்தைக் கண்டிருக்கின்றீர்களா? இவரும் நானும் நண்பர்கள். நட்புரிமையால் விளையாட்டாக மாணிக்கம் வயிற்றிலிருப்பதாக உரையாடினோம். உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் என் வயிற்றைக் கிழிப் பாருங்கள். என் வயிற்றில் மாணிக்கம் இல்லையாயின் இவர் வயிற்றிலும் இல்லையென்று எண்ணிக் கொள்ளுங்கள். வீணாக இருவரையும் கொல்லுதல் வேண்டாம்," என்றான்.

கள்வர்கள் கத்தியெடுத்து வேடன் வயிற்றைக் கிழிப் பார்த்தார்கள்; குருதியும் குடலும் உணவு மிச்சமும் தான் இருந்தன. வேடன் இறந்தான்.

வேதியனைப் பார்த்து, "ஏய்! இங்கு நில்லாதே. ஓடிப் போ," என்று விரட்டி விட்டார்கள்.

வேதியன், 'ஆ! இப்படியும் ஓர் உத்தமன் உலகத்தில் உளனோ? நம்மிடம் உள்ள மாணிக்கத்தைக் கவர வந்த இவ்வேடன், நம்மைக் காக்கும் பொருட்டுத் தன்னுயிரைத் தந்தான். இவன் மனிதருள் மாணிக்கம்,' என்று வேடனது நற்குணத்தை எண்ணியெண்ணிக் கண்ணீர் வடித்துச் சென்றான்.

ஆதலால் நல்லவர்கள் பகைக்கினும் நலமே புரிவார்கள்.

தீயவர் நட்பாக இருப்பினும் அவர்களால் நமக்குத் தீமையே விளையும். இதனை விளக்கும் பின்





வரும் வரலாறு:

ஒரு மன்னவன் ஒரு குரங்குடன் நட்புக் கொண்டு அதனை அரண்மனையில் சீருஞ்சிறப்புஞ் செய்து வைத்துக் கொண்டிருந்தான். குரங்குக்கு நல்ல சொக்காய், தொப்பி, அணிகலன்கள், இனிய உணவு யாவும் தந்து அன்புடன் பழகி வந்தான்.

ஒருநாள் மன்னவன் பகலில் அரண்மனையில் அம்சதூளிகா மஞ்சத்தில் படுத்திருந்தான். குரங்கை அருகில் ஒரு நாற்காலியில் அமர்த்தி வைத்தான். காவலன் கண்ணுறங்கி விட்டான்.

மன்னவன் கழுத்தில் ஓர் ஈ வந்து அமர்ந்தது. ராஜபக்தியும் நட்புரிமையும் பூண்ட குரங்குக்குப் பெருஞ் சினம் மூண்டது. 'ஆ! ஆ! என்ன அநியாயம்? அசுத்தத்தின் மீது அமர்கின்ற இந்த ஈ நம் மன்னவருடைய கழுத்தின் மீது அமர்ந்திருக்கின்றதே. அரசருடைய வாழ்விலும் பெருமையிலும் கவனமுள்ள நான் கண்டு சும்மா இருக்கலாமா? நமக்குப் பல நன்மைகளும் தந்த பார்த்திபனுக்கு நாம் நன்றி செலுத்த இதுவே தருணம்,' என்று எண்ணி, அரசன் அருகில் இருந்த கூரிய வடிவாளை எடுத்து, அரசர் பெருமானுடைய கழுத்தில் இருந்த ஈயை ஓங்கி வெட்டியது.

குரங்கினுடைய அரச பக்தி அரசனை எமபுரத்துக்கு அனுப்பி விட்டது.

அறிவில்லாத அற்பக் குரங்கின் நட்பு அரசன் உயிருக்கு இறுதியைத் தந்தது.

எனவே, தீயவர் நட்பு நமக்குத் தீமையே பயக்கும். மூடர்கள் நலம் கருதிச் செய்யும் செயல் பெருங் கேட்டினைத் தரும் என உணர்க.

இந்த இரு வரலாறுகளையும் அடியில் வரும் நீதிவெண்பா நமக்கு உணர்த்துகின்றது.

அறிவன் பகையேனும் அன்புசேர் நட்பாம்;
சிறுவன் பகையான் செறிந்த—அறிவுடைய
வென்றி வனசரன்றான் வேதியனைக் காத்தான்முன்
கொன்றதொரு வேந்தைக் குரங்கு.

# ஏப்ரல் விழா

**ப**ர்மாவில் ஏப்ரல் மாதம் என்றால் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் ஏக குஷிதான்.

ஏப்ரல் மாதத்தில் அங்கு பருவ மழை ஆரம்பித்து விடும். அதன் வருகைக்கு முன்பு பர்மியர்கள் ஒரு பெரிய விழா கொண்டாடுவார்கள்.

அங்கிருக்கும் மக்களுக்கு, இந்த விழாவின் ஆரம்பமாக ஏப்ரல் மாதத் துவக்கத்தில் அந்தப் பக்கக் காடுகளில் பூக்கும் மஞ்சள் பூவே அதற்கறிகுறியாகும். இதைக் கண்டவுடன் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சந்தோஷத்துடன் குதித்து, தங்கள் உற்சாகத்தை வெளிப்படுத்துவார்கள். ஆம் அவர்களுக்குப் புது வருடம் பிறக்கப் போகிறது.

இந்த விழாவை அவர்கள் 'திங்கயான்' என்று அழைக்கிறார்கள். அன்று வீடு, ஆலயங்கள், பொது இடங்கள் யாவும் சுத்தமாகக் கழுவப்படும். நண்பர்கள், சுற்றத்தினர் யாவரும் ஒருவரின் மேல் ஒருவர் வாளி வாளியாகத் தண்ணீரை ஊற்றுவார்கள் வண்ணப் பொடி தூவிக் கொள்ளும் ஹோலிப் பண்டிகை போல.

ஆனால் யாரும் எதுவும் கேட்டுக் கொண்டு சண்டை பிடிக்க மாட்டார்கள். அவர்கள் காத்திருப்பதே அந்த வேடிக்கை விளையாட்டுக்குத்தானே.

தலைநகரான ரங்கூன் ஏகமாய் அமர்க்களப்படும். தெருவெல்லாம் வண்ணத் தோரணங்கள் மூலை முடுக்குகளிலிருந்து ஹோஸ் பைப்பின் மூலம் தண்ணீரைப் பீய்ச்சுவார்கள்.


மக்கள் திக்குமுக்காடிப் போனாலும் அன்று அந்தக் களியாட்டத்தில் புது ஆடைகள் நனைவதை லட்சியம் செய்ய மாட்டார்கள்.

பாட்டு, நடனம், கேளிக்கைகளுடன் அன்றைய பொழுதை முடித்துக் கொள்வார்கள். அடுத்த நாள் கோவிலில் வழிபாடு, தான தருமங்கள் எல்லாம் நடக்கும். புது வருடத்தில் தங்கள் அக அழுக்கை அகற்றிப் புது வாழ்வைத் தொடங்க ஆயத்தம் செய்து கொள்வார்கள். ஆம், முந்தைய நாள் தண்ணீரால் கழுவப்பட்டது தங்கள் உடலை மட்டுமல்ல, உள்ளத்தையும் தான் என்ற நம்பிக்கையை அவர்கள் முகத்தில் காணலாம்.

— மாலதி சந்திரசேகரன்.



# இதோ, ஒரு குட்டி



**ப**ம்பாயில் 'சாகித்திய சக வாஸ்' ஓர் அடுக்கு மாடிக் குடியிருப்புப் பகுதி. கீழே ஒரு பெரிய மைதானம். அதன் ஓரத்தில் நாற்புறமும் வரிசையாக மரங்கள் சூழ்ந்திருக்கும். அழகான இடம். எப்போது பார்த்தாலும் மனத்துக்கு இதமாக நிழல் குளுகுளு என்றிருக்கும். அந்தக் குடியிருப்பில் வசிக்கும் குழந்தைகள் எல்லாம் பகல் முழுவதும் அங்குதான் ஓடியாடி விளையாடி லூட்டியடிப்பார்கள். சிலர் கோலி விளையாடுவார்கள். சிலர் கிட்டிப்புள் விளையாடுவார்கள். வேறு சிலர் ஊஞ்சலாடுவார்கள். ஸீஸா பலகையில் அமர்ந்து மேலும் கீழும் போவார்கள். வேறு சிலர் கிரிக்கெட் ஆடிக் கொண்டிருப்பார்கள். இப்படி அந்த மைதானம் முழுவதும் சதா சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும். அந்தக் குழந்தைகளின் பெற்றோர் மேலே மாடியிலிருந்து அடிக்கடி தமது குழந்தைகளைக் கண்காணித்துக் கொண்டிருப்பார்கள்.

ஸசினின் அப்பா பெயர் ரமேஷ் தண்டுல்கர். அவர் பம்பாய், கீர்த்தி கல்லூரியில் மராத்தி மொழித்துறையின் தலைவராகப் பணியாற்றுகிறார். தாயின் பெயர் ரஜினி தண்டுல்கர்.

இந்தத் தம்பதிக்கு நான்கு குழந்தைச் செல்வங்கள். மூத்தவர் நிதின் தண்டுல்கர். விமானத்தின் 'ஃப்ளைட் பர்ஸராக' உள்ளார். அத்துடன் அவர் ஒரு மராத்தி மொழிக் கவிஞரும் கூட. 'பாவுஸார்' — அதாவது 'மழைக்காலம்' என்ற காவியம் ஒன்றை எழுதியுள்ளார். இரண்டாவது பெண் ஸவிதா. திருமணமாகி விட்டது. மூன்றாவது பையன் அஜித் தண்டுல்கர். நான்காவதுதான் ஸசின் தண்டுல்கர்.

ஸசின் எப்போதும் கிரிக்கெட் விளையாடும் இடத்தில்தான் இருப்பான். அவன் முதன்முதலில் கிரிக்கெட் மட்டையைக் கையில் எடுத்தது அவனுடைய இரண்டரையாவது வயதில். காலையில் நான்காவது மாடியிலிருந்து கீழே இறங்கி விட்டால் மீண்டும் வீட்டுக்கு மேலே ஏறுவது, மாலையில் விளக்கு வைத்த பிறகுதான். மைதானத்தின் புழுதியைச் சட்டையிலும் உடம்பிலும் ஒட்டிக் கொண்டு சதா கிரிக்கெட் ஆட்டம்



• காவஸ்கர்

# காவஸ்கர்!



• ஸசின் தண்டுல்கர்

தான். உணவு கொள்வது பற்றிய சிந்தனை கூட இருக்காது. பால் குடிக்கும் நேரம் வந்ததும் மாடியிலிருந்து அம்மா அழைப்பாள்.

அந்த அழைப்பு அவன் காதில் விழும். ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்தவே மாட்டான். அவர்கள் வீட்டில் ஓர் ஆயா இருந்தாள். அவள் பெயர் லட்சுமி. உடனே அவள் சொல்வாள். "ஏன் அம்மா, குழந்தை விளையாடிக் கொண்டிருக்கும்போது இடையில் இப்படிக் கூப்பிட்டுத் தொந்தரவு செய்யறீங்க...? பாலை என்னிடம் கொடுங்க, நான் கீழே போய்க் கொடுத்துட்டு வர்றேன்" என்று.

பாலை வாங்கிக் கொண்டு, நான்காவது மாடியிலிருந்து ஓட்டமும் நடையுமாகக் கீழே ஓடி வருவாள். ஒரு மரத்தடியில் மறைவாக நின்று கொண்டு, ஜாடை காட்டி, ஸசினை வருமாறு அழைப்பாள். அதன் பிறகும் கூட ஸசின், 'இதோ இன்னும் ஒரே ஒரு ஆட்டம்,' என்று லட்சுமியைச் சிறிது நேரம் காக்க வைத்துவிட்டுத்தான் வருவான். அவன் ஃபீடிங் பாட்டிலை வாயில் வைத்து உறிஞ்சிக் குடிடபதையே பார்த்துக் கொண்டிருப்பாள் லட்சுமி. அவன் குடித்து முடித்ததும் வாயைத் துடைத்து விடுவாள்.

பிறகு, "ஸசின்க், போய் விளையாடு," என்று மீண்டும் விளையாட அனுப்புவாள். அந்த ஸசினுக்கு — இ ப் போ து வயது இனிமையான பதினாறு. ஸ்வீட் சிக்ஸ்ட்டீன்! இந்தச் சிறிய வயதில் டெஸ்ட் கிரிக்கெட் வீரராகி உள்ளதுடன், துவக்கத்திலேயே பெரிய சாதனை ஒன்றையும் புரிந்துள்ளார். கடந்த ஆண்டு பாகிஸ்தான் சென்ற இந்திய டெஸ்ட் அணியினரில் அவரும் ஒருவர்!

ஸசின் அப்படியெல்லாம் பால் குடித்த நிகழ்ச்சி எப்படித்தான் பாகிஸ்தான் ரசிகர்களுக்குத் தெரிந்ததோ தெரியவில்லை. இதையே உதாரணம் காட்டிக் கேலி செய்யத் தொடங்கி விட்டனர். எப்படித் தெரியுமா?

ஸசின் மட்டையை எடுத்துக் கொண்டு விளையாட வந்ததுதான் தாமதம். உடனே அவர்கள் தம் கையில் தயாராக வைத்திருந்த நீண்ட துணிக் கொடியை எடுத்துப் பிரித்துக் காட்டினார்கள். அதில் எழுதியிருந்த வாக்கியத்தையே உரக்கக் கூறிக் கூச்சலிடவும் செய்தனர். அதில் என்ன எழுதி இருந்தது தெரியுமா?

அதில், 'ஸசின், திரும்பிப் போ. போய்ப் பால் குடி,' என்று எழுதியிருந்தது. அந்தக் கொடியை அடிக்கடி தூக்கிப் பிடித்துக் காட்டிக் கிண்டல் செய்தனர்.

ஆனால் ஸசின் தான் 'டீன் ஏஜ்' சிறுவனாக இருந்தாலும், 'என்னாலும் சாதனை புரிய முடியும்' என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார். அவர் செய்த சாதனை என்ன தெரியுமா?

1988 நவம்பர். பெஷாவரில் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. ஸசின் துடுப்பெடுத்து ஆடத் தொடங்கினார். அவருக்குப் பந்து வீசியது யார் தெரியுமா? அப்துல்

ஜானகி மணாளன்

காதிர். பாகிஸ்தானின் தலைசிறந்த சுழல் பந்து வீச்சாளர். பெரிய பெரிய ஆட்டக்காரர்கள் கூட அவரது பந்து வீச்சு என்றால் சற்றுக் கலங்கிப் போவார்கள். ஆனால் ஸசின் சிறிதும் கலங்கவில்லை. உங்களுக்கும் தெரிந்திருக்கும். கிரிக்கெட்டில் ஓர் ஓவர் என்பது ஆறு பந்து வீச்சுக்கள் கொண்டது. அப்துல் காதிர் முதலாவது பந்தை வீசினார். ஓங்கி அடித்தார் ஸசின். பந்து பறந்தது. அதில் ஆறு ஓட்டங்கள் — சிக்ஸர். கரகோஷம் விண்ணைப் பிளந்தது. காதிர் அடுத்த பந்தை வீசினார். அதிலும் ஒரு சிக்ஸர்! மூன்றாவது பந்து பாய்ந்து வந்தது. அதிலும் ஒரு சிக்ஸர். நான்காவதில் நான்கு ஓட்டங்கள். ஐந்தாவதிலும் நான்கு ஓட்டங்கள்... ஆறாவது பந்தில் ஒரு ரன். ஒரு பந்தில் கூட ரன் இல்லாமல் இல்லை. ஆக, 27 ரன்கள். அத்தனையும் ஒரே ஓவரில். ஒரு பந்தில் கூட ரன் இல்லாமல் இல்லை. இந்த வயதில் எவரும் புரியாத அற்புதச் சாதனை! ஒரே நாளில் ஸசினின் புகழ் இமாலய அளவுக்கு உயர்ந்துவிட்டது. அதைவிட ஓங்கி உயர்ந்தது நமது இந்தியாவின் பெருமை! அதுவே 'டெஸ்ட்' ஆட்டமாக இருந்திருந்தால் ஸசினின் புகழ் இன்னும் எங்கெல்லாமோ எட்டியிருக்கும்!

ஒன்பது வயது வரையில் ஸசின் வாயில் விரல் போட்டுச் சூப்பிக் கொண்டு இருப்பானாம். அத்தனை சிறு பிள்ளைதான் இன்று உலகம் புகழும்கிரிக்கெட்வீரனாகியுள்ளான். எல்லாரும் ஸசினைக் 'குட்டிக் காவஸ்கர்' என்கிறார்கள்.

**ஸ**சின் காவஸ்கரிடமே பாராட்டும் புத்திமதியும் பெற்ற நிகழ்ச்சியும் உண்டு. 1987 — இல் தலைசிறந்த ஜூனியர் கிரிக்கெட் ஆட்டக்காரன் என்ற பட்டம் தனக்குக் கிடைக்கும் என்று ஸசின் மிகவும் நம்பிக்கையோடு இருந்தான். ஆனால் ஏமாந்து விட்டான். வாட்டம் வந்து கவ்விக் கொண்டது. அப்போது ஒரு நாள் திடீரென்று ஒரு கடிதம் வந்தது. எழுதியிருந்தது யார் தெரியுமா? காவஸ்கர்தான்.

'ஸசின்! மனம் தளர்ந்து விட்டாயா? தளராதே. எனக்கும் கூடத்தான் அந்த ஜூனியர் ஆட்டக்காரப் பட்டம்கிடைக்கவில்லை.நான் என்ன குறைந்தா போய்விட்டேன்? இன்று நான் புரியாத சாதனைகளா? உன்னாலும் அப்படி எதிர்காலத்தில் சாதனை புரிய முடியாதா? மனம் தளராதே. அத்துடன் இன்னொன்று. பரிசுகளின் மீது ஆசை வைக்காதே. அந்த ஆசையை விட்டுவிட்டு, ஆட்டத்தின் மீது கவனம் வை. அதே குறிக்கோளாக இருந்து ஆடு. வெற்றி உன்னைத் தேடிவரும்,' என்று முடிந்திருந்தது கடிதம்.

அது ஸசினுக்குத் தெம்பை ஊட்டியது. இதுபற்றிப் பேசும் போது, என் வாழ்வில் முதன் முதல் மிகவும் மகிழ்ச்சிகரமான நேரம் என்று சொன்னால், காவஸ்கரிடமிருந்து கடிதம் வந்த அந்த நேரம்தான் என்கிறார். அதற்கு அடுத்ததாக மிகவும் மகிழ்ந்த நேரம் எது? டெஸ்ட் கிரிக்கெட் அணியில் தன் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்ற செய்தி தனக்குக் கிடைத்த நேரம் என்கிறார் ஸசின்.

சியால் கோட்டில் ஒரு நிகழ்ச்சி. நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் நடந்தது. அது மற்ற ஆட்டக்காரர்கள் ஸசினிடம் எந்த அளவு உயிரையே வைத்திருந்தனர் என்பதை விளக்குகிறது. பாகிஸ்தானின் வகார் யூனுஸ் பந்து வீசினார். ஸசின் மட்டை



• அப்துல் காதிர்


எடுத்து ஆடிக் கொண்டிருந்தார். அப்போது ஓர் அசம்பாவிதம் நடந்து விட்டது. தொலைக்காட்சியில் ஆட்டம் பார்த்தவர்களுக்குத் தெரிந்திருக்கும். ஓங்கி வீசப்பட்ட பந்து. விர்ரென்று சீறிப் பாய்ந்து வந்து ஸசினின் மூக்கைப் பதம் பார்த்து விட்டது! அவரது உள்மூக்கு உடைந்து விட்டது. கையால் முகத்தைப் பொத்திக் கொண்டு அப்படியே கீழே உட்கார்ந்து விட்டார் ஸசின்.

உடனே அம்பயர் ஓடி வந்தார். கூட விளையாடிய ஆட்டக்காரர்கள் எல்லாம் ஓடி வந்தார்கள். ஸசினின் மூக்கிலிருந்து ரத்தம் அருவியாகக் கொட்டியது. டாக்டர் ஓடி வந்தார். ரத்தத்தைத் துடை.த்து விட்டார். மருந்து வைத்துப் பிளாஸ்திரி போட்டு ஒட்டினார். இதில் வேடிக்கை என்ன தெரியுமா? 'ஸசின் சின்னப் பையன். மூக்கில் அடி என்றதும் பயந்து போய், ஆட்டத்தை அத்துடன் முடித்துக்கொண்டு பெவிலியனுக்குத் திருப்பி விடுவார்' என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் ஸசின் அவ்வாறு செய்யவில்லை. சிறிதும் கலக்கம் இன்றித் தொடர்ந்து ஆடினார். அதுமட்டுமல்ல. அன்று அவர் எடுத்த ஓட்டங்கள் 56. அதாவது அரைச் சதத்துக்கு மேல். இது ஒரு சாதனை இல்லையா?

மூக்கில் அடிபட்டது என்றதும் ஸசினின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி ஒன்றையும் சொல்ல வேண்டும். அப்போது ஸசினுக்குப் பத்து வயது. சாரதாஸ்ரம் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு விக்கெட் கீப்பராக விளையாட வேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை.

எனவே, ஒரு நாள், ம ற் ற ப் பையன்களிடம் கெஞ்சிக் கூத்தாடி விக்கெட் கீப்பர் ஆகி விட்டான். ஜம்மென்று அந்தக் கையுறையை அணிந்துகொண்டுவிளையாடினான்.

அப்போது ஓர் ஆபத்து. விர்ரென்று பறந்து வந்த பந்து. அவனது மூக்கைத் தாக்கிவிட்டது. உடனே ரத்தம் கொட கொடவென்று கொட்டியது. எல்லா மாணவர்களும் பயந்து விட்டனர். ஒருவன் ஓடிச் சென்று




தனது சைக்கிளை ,எடுத்து வந்தான். அதில் ஸசினைப் பின்னால் அமர்த்திக் கொண்டு, வீட்டுக்கு விரைந்தான். 20 நிமிட தூரம். வழியெங்கும் ரத்தம் சொட்டிக் கொண்டே சென்றது. ஸசினின் தாய் பயந்து விட்டாள். அவனை டாக்டரிடம் தூக்கிப் போனாள். உள் மூக்கு உடைந்து போயிருந்தது. அப்போது உடைந்த இடத்துக்குச் சற்று மேலேதான், இப்போதும் சியால் கோட்டில் மூக்கு எலும்பு உடைந்தது. டெஸ்ட் கிரிக்கெட் ஆட மட்டும்தான் பயிற்சியா..? மூக்கை உடைத்துக் கொள்ளவும் தான், என்பது போல் அந்நிகழ்ச்சி அமைந்து விட்டது.

பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தின் போது ஸசின் இரண்டு சதம் எடுத்தார். அப்போது எடுத்த மொத்த ரன்கள் 215. இந்தச் சிறிய வயதில் இதெல்லாம் பெரிய சாதனை அல்லவா? நியூஜிலாந்திலும் ஸசின் சிறப்பாக ஆடினார்.

காவஸ்கர் என்றதும், நமக்குச் சாதனைகள்தான் நினைவுக்கு வரும். இவரை எல்லோரும் 'குட்டி காவஸ்கர்' என்கிறார்கள். வருங்காலத்தில் இவரும் பல அற்புத சாதனைகளைப் படைப்பார் என்பது திண்ணம். விளையும் பயிர் முளையிலே என்பது போல் இவரது துவக்க சாதனைகள் அந்த நம்பிக்கையை நமக்குத் தருகின்றது. அவர் வெற்றி பெற வாழ்த்துவோம்!

# கார்கள் பலவிதம்!


ஆழி——





முதல் முதல் ஹென்றி ஃபோர்டு 1896-இல், அமெரிக்காவில் தயாரித்த கார் இதுதான். வேகம் மணிக்கு 5 கி.மீ.

இந்தக் காரின் பெயர்: ஃபெராரி



இத்தாலியில் 1983-இல் உருவாக்கப்பட்ட இந்தக் காரின் வேகம் என்ன தெரியுமா? மணிக்கு 305 கி.மீ. எதிர்காலத்தில் இதைவிட வேகமாக ஓடக்கூடிய கார்களையும் உருவாக்கக் கூடும்! விஞ்ஞானிகள் எவ்வளவோ சாதனைகள் செய்வார்கள்.




அமெரிக்காவில் 50 வயதுள்ள 'ஜேய் ஓர்பெர்க்' என்பவர் பலவடிவங்களில் சுமார் 500 கார்களைத் தயாரித்து விற்றிருக்கிறார். அவர் தயாரித்த 'சூப்பர் மெர்சிடெஸ்-450' என்னும் கார் உலகத்திலேயே மிக நீளமான கார். 30 மீட்டர் நீளம். 10 சக்கரங்கள் கொண்டது. அதில் சிறிய நீச்சல் குளம், டெலிவிஷன், மீன் காட்சித் தொட்டி, சமையல் அடுப்பு, குளிர் பதனப் பெட்டி — எல்லாம் உண்டு!

அவர் தயாரித்த மூக்கு நீளமான இந்தக்கார் படுக்கைவசதி கொண்டது. பெயர்: பிங்க் பந்தர்.




இதன் நீளம் 7 மீட்டர்.




ஜேய் ஓர்பெர்க் தயாரித்த 'பாக்மன் ரோட்ஸ்டெர்' என்னும் இந்த விநோத வடிவமுள்ள காரின் வேகம் மணிக்கு 160 கி.மீட்டர்கள்!


உலகின் முதல் டாக்ஸி சர்வீஸ் 1897, மே மாதம் ஜெர்மனியில் ஆரம்பமாயிற்று. அப்போது, குதிரை வண்டிகளுக்கு உள்ள கட்டணம் தான் டாக்ஸி களுக்கும் வசூலிக்கப் பட்டது.

ஒரு காரில் சுமார் 4000 பாகங்கள் இருக்கின்றன!



அவர் உருவாக்கிய இந்தக் காருக்கு இஞ்சின் புதுசுதான். ஆனால், பழங்கால வடிவமைப்பு. மேலே கட்டில் மெத்தை போன்ற அமைப்பு.


நிலக்கடலை எண்ணெயி னால் ஓடக்கூடிய புதிய சிறிய ரக்க் கார் ஒன்றை ஆஸ்திரேலியக் கம்பெனி ஒன்று உருவாக்கியுள்ளது. ௨½ மீ. நீளம் உள்ள இந்தக் காரில் இரண்டு பெரியவர் களும் ஒரு குழந்தையும் பயணம் செய்யலாம். 1 காலன் கடலை எண்ணெயில் 192 கி.மீ. ஓடும். வேகம் மணிக்குச் சுமார் 48 கி.மீ.



இந்த விநோத வடிவமுள்ள காரின் பெயர் 'அய்க்லோன்'. 1940-இல் ஜெனிவாவில் நடந்த கார் கண்காட்சி யில் இதற்குத்தான் பரிசு கிடைத்தது!

1897-இல் மோட்டார் சட்டம் என்ன தெரியுமா? பகலாக இருந்தால், ஒரு மனிதன் காருக்கு முன்னால் சிவப்புக் கொடியுடன் முன்னே நடக்க வேண்டும்; இரவாக இருந்தால், சிவப்பு விளக்கைப் பிடித்துக் கொண்டு முன்னே நடக்க வேண்டும்!


'கார்னிஸ்' என்னும் ரஷ்ய நிபுணர் தண்ணீரைக் கொண்டு ஓடக்கூடிய காரை உருவாக்கியிருக்கிறார்! அந்தக் காரை 720 கி.மீ. தூரம் ஓட்டினார். தண்ணீரில் உள்ள 2 மடங்கு ஹைடிரஜன், 1 மடங்கு ஆக்ஸிஜன் இவற்றைக் கொண்டு ஓடக்கூடியதாக உருவாக்கியிருக்கிறார் அந்தக்காரை!



சூரிய ஒளியிலிருந்து பெறப்படும் மின்சக்தியினால் இயங்கக்கூடிய சூரியக்காரதான் இது. மணிக்கு 100 கி.மீ. போகும். இருவர் பயணம் செய்யலாம். 100 கிலோ எடையுள்ள பொருள்களை ஏற்றிக் கொள்ளலாம். மேகமூட்டமாக இருந்தால், கார் செல்வதற்கு, சிலிகான் சூரிய பாட்டரி மூலம் சக்தி பெறக்கூடிய சிறிய எலக்ட்ரானிக் இஞ்சின் பொருத்தப்பட்டிருக்கிறது. ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டது. காரின் பெயர்: ஸிப்பி.


கலிபோர்னியாவில், நெடுஞ்சாலையில் ஓடிக்கொண்டிருக்கும் இந்தக் காரை, நெரிசல் அதிகமாக இருந்தால், இறக்கைகளையும், சுழற்காற்றாடிகளையும் இணைத்து விட்டு, வானத்தில் பறக்க வைத்து விடலாம்! தரையில் இதன் வேகம் மணிக்கு 110 கி.மீ. வானத்தில் பறக்கும் வேகம் மணிக்கு 200 கி.மீ. சாலையிலும் ஓடும், வானத்திலும் பறக்கும் விமானக் கார் இது. இதைக் கண்டுபிடித்தவர் 'மோல்ட்டன் பி டேலர்' என்னும் அமெரிக்கர்!





நீரில் நீந்துகிற, தரையில் ஓடுகிற, வானத்திலும் பறக்கிற 'த்ரீ-இன்-ஒன்' வாகனத்தை VFW-ஃபாக்கர் என்ற விமானத் தயாரிப்பாளர்கள் தயாரித்திருக்கிறார்கள். இதன் வேகம் மணிக்கு 150 கி.மீட்டர்கள். பயணத்தில் எந்தத் தடையும் இருக்காது; போய்க்கொண்டேயிருக்கலாம்.

'ஏரோ மோபைல்' என்னும் காரை, டாக்டர் வில்லியம் ஆர் பெர்ட்டல்ஸன் என்னும் அமெரிக்கர் கண்டுபிடித்திருக்கிறார். இதற்குச் சக்கரங்களே கிடையாது! கீழ்நோக்கி வீசும் காற்றை வெளியே செல்லவிடாமல் தடுத்து, காருக்கு அடியிலேயே அடைத்து விடுவதால், கார், தரையைத் தொடாமல், தரைக்குமேல் 30 செ.மீ. உயரத்தில் மிதந்தபடி செல்கிறது. இதன் வேகம் மணிக்குச் சுமார் 96 கி.மீ. நீரின் மேலும் இது போகும்!



# என் உயிர்த் தோழர்கள்!



ஹரிசிங்

நாய்கள் பின்தொடர வழக்கப்படி உள்ளே வந்தான் கம்ருஜான். ஆயா அவனை வரவேற்றாள்.

''என்ன ஆயா, சோறு எடுத்து வைச்சிருக்கியா? இல்லே வித்துட்டியா?''

''நீயும் உன் நாயும் என் வாடிக்கையாளர்களாச்சே கம்ருஜான்! உங்களுக்கு வைக்காமல் நான் விற்று விடுவேனா?'

''ஆயா,'' என்று கடுமையாக அழைத்த கம்ருஜான். ''இன்னொரு தடவை என் டைகரையும், ஹீராவையும் நாய்ன்னு சொன்னா, உன் கடைப்பக்கமே வரமாட்டேன்'' என்றான்.

''என்னவோப்பா, வாய்தவறி வந்துட்டது. இனிமே ஜாக்கிரதையா இருக்கேன்,'' என்று சிரித்த ஆயா, ஆமாம், நான் கேட்கறேனேன்னு கோபிச்சுக்காதே. நீ என்னதான் இவைகளைச் சொந்தத் தம்பிங்க மாதிரி கவனிச்சுக்கிட்டாலும் இதுங்க நாய் இனம்தானே?'' என்று உள்ளுக்குள் நடுங்கியபடி கேட்டாள்.

கம்ருஜான் முகத்தில் மீண்டும் கடுமை படர்ந்தது. ''ஆயா, என்னுடைய டைகரும், ஹீராவும் பிறப்பால் நாய்களாக இருக்கலாம். ஆனால் உணர்விலும், அறிவிலும் அவை நம்மைப் போன்ற மனிதர்களைவிட உயர்வானவை.''

''அப்படியா!''

''ஆமாம் ஆயா, நான் வராமல் இவை இரண்டும் சாப்பிடவே சாப்பிடாது. எவ்வளவு நேரமானலும் சரி, நான் வரும்வரை காத்திருக்கும். ஒரு வேளை என்னால் வர முடியாமல் போய்விட்டால் இவை இரண்டும் பட்டினி கிடக்குமே தவிர, யார் போட்டாலும் சாப்பிடாது.

'இன்னிக்கிக் கூட நீ வர லேட்டாச்சா. நான் இரண்டு தட்டில் சோறு போட்டு இவைகளுக்கு வைத்துப் பார்த்தேன். இரண்டும் தட்டு இருந்த பக்கம் கூடத் திரும்பலே!' என்று கம்ருஜான் சொன்னதை ஆமோதித்த ஆயா, சமையலறையிலிருந்து மூன்று தட்டுகளை எடுத்து வந்தாள்.

தங்களுக்கு முன்னால் வைக்கப்பட்ட தட்டை டைகரும் ஹீராவும் தொடாமல் கம்ருஜானின் முகத்தையே நோக்கின.

''பார்த்தியா ஆயா? என் கையால் தட்டை வைத்தால் கூட, நான் அனுமதி கொடுக்காமல் இரண்டுமே சாப்பிடாது! இந்த அதிசயத்தை வேறு எங்கேயாவது பார்த்திருக்கியா?''

கம்ருஜான் கேட்டதற்குப் பதிலளிக்கக் கூடத் தோன்றாதவளாக ஆயா அதிசயத்துடன் நாய்களையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ம், சரி. சாப்பிடுங்க. நானும் சாப்பிடறேன்,'' என்று கம்ருஜான் குரல் கொடுத்து விட்டுச் சாப்பிடத் தொடங்கினான்.

அதற்குப் பிறகுதான் இரண்டு நாய்களும் வாயைக் குழைத்தபடி சாப்பிடத் தொடங்கின.

அலமாரியைத் திறந்து ஒரு டப்

பாவை எடுத்த ஆயா, ''கம்ருஜான், இன்னிக்கு என் பேரனுக்கு ஆண்டு நிறைவு. இனிப்புப் பூரி பண்ணி னாங்க. நான் உனக்காக ஒன்று எடுத்து வைத்தேன். இந்தா,'' என்று பூரியை எடுத்துக் கொடுத்தாள்.

அதை வாங்கிக் கொண்ட கம்ரு ஜான், விண்டு ஒரு சிறிய துண்டைத் தன் வாயில் போட்டுக் கொண்டு, மீதியை இரண்டாக்கி நாய்களின் தட்டில் போட்டான்.

''சாப்பிடக் கூடிய பொருள் எதுவானாலும் என்னுடைய டைகருக்கும் ஹீராவுக்கும் கொடுக்காமல் நான் மட்டும் தின்னவே மாட்டேன்," என்று கூறிய கம்ருஜானை ஆயா வியப்புடன் பார்த்தாள்.

''என்னுடைய டைகரும் ஹீராவும் மனிதர்களைவிட மேலானவை. எனக்காக அவை தங்கள் உயிரையே தியாகம் செய்யக் கூடியவை. சமயம் வரும்போது இதை நிரூபித்துக் காட்டும்,'' என்று கூறிய கம்ருஜான் தட்டைக் காலி செய்து விட்டுக் கை கழுவிக் கொண்டான்.

கம்ருஜான் பத்தொன்பது வயது இளைஞன். ஒரு தொழிற்சாலையில் அவன் வேலை பார்த்து வந்தான். கடந்த ஆண்டு மழைக் காலத்தில் ஒரு நாள் இரவு அவன் வேலை முடிந்து களைத்துப் போய் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். பக்கத்தில் ஓடிக் கொண்டிருந்த ஓடைக்கு அருகே ஏதோ முனகல் சத்தம் கேட்டது. கம்ருஜான் டார்ச்சை அடித்துப் பார்த்தான். ஓடை நீருக்கு நடுவில் கிடந்த ஒரு பாறையின் மேல் மழை நீரில் நனைந்து உடல் நடுங்கியபடி இரண்டு நாய்க் குட்டிகள் முனகிக் கொண்டிருந்தன.

தலை முண்டாசை அவிழ்த்து நாய்க்குட்டிகளுக்குப் போர்த்தித் தன் வீட்டுக்கு எடுத்து வந்து விட்டான் கம்ருஜான். டைகர், ஹீரா என்று அவற்றுக்குப் பெயர் வைத்தான்.

கம்ருஜானுக்குத் திருமணம் செய்ய ஏற்பாடுகள் நடந்தன. அவன் பெண் பார்க்கக் கிளம்பினான். டைகரையும், ஹீராவையும் அழைத்துக் கொண்டு தான்! எல்லோரும் கேட்டுக் கொண்ட தன் பேரில், ''நான் வந்து அழைக்கும் வரை நீங்கள் இருவரும் இங்கேயே இருக்க வேண்டும்,'' என்று தனது நாய்களுக்கு உத்திரவிட்டு அவற்றைப் பெண் வீட்டுத் திண்ணையிலேயே இருக்கச் செய்து உள்ளே சென்றான் கம்ருஜான்.

பெண் வீட்டில் எல்லோருக்கும் சிற்றுண்டி கொடுத்தார்கள். கம்ருஜானின் மனத்தை நன்கறிந்த ஒருவர், ''டைகருக்கும் ஹீராவுக்கும் தனியாகக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்,'' என்று உறுதியளித்த பிறகும், மனமில்லாமல் சிற்றுண்டியைத் தின்றான் கம்ருஜான்.

பெண்ணைக் கம்ருஜானுக்குப் பிடித்துப் போயிற்று. அடுத்த வாரம்



நிச்சயதார்த்தம் செய்து கொள்ள முடிவு செய்தனர். விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்த கம்ருஜானுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

ஏதோ ஊசிய வாடை வீசியது. பிறகுதான் அந்த வாடை, தின்பண்டத் தட்டிலிருந்து வருவதை கம்ருஜான் கண்டு பிடித்தான். ஆமாம், அவன் உயிருக்கு உயிராக வளர்த்த டைகருக்கும் ஹீராவுக்கும் ஊசிப் போன போண்டாக்களை வைத்திருந்தார்கள்!

கம்ருஜானுக்கு ஆத்திரமான ஆத்திரம். "நான் உயிருக்கு உயிராய் மதிக்கும் என் டைகருக்கும் ஹீராவுக்கும் ஊசிப் போன தின்பண்டத்தை வைக்கும் அளவுக்கு மனிதத் தன்மை இல்லாத இந்த வீட்டில் பெண் எடுக்க நான் தயாராக இல்லை," என்று முடிவாக உறுதியாகக் கூறி வந்து விட்டான்! நிச்சயதார்த்தம் நடக்கவே இல்லை!

நாட்கள் ஓடின. குளிர்காலம் வந்தது. நாள் முழுவதும் கடினமாக உழைத்ததன் காரணமாக கம்ருஜான் அன்று இரவு அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். திடீரென்று அவனுக்கு விழிப்பு வந்தது. விடி விளக்கின் மங்கிய ஒளியில் தன் மார்பின் மேல் ஒரு கருநாகப் பாம்பு படமெடுத்துச் சீறிக் கொண்டிருப்பதை அவன் பார்த்தான். பயத்தால் நாக்கு ஒட்டிக் கொண்டது. எப்படியோ சிரமப்பட்டு நாக்குழற, "டைகர்!" என்று குழறியபடி அழைத்தான்.

கட்டிலுக்குக் கீழே படுத்திருந்த டைகர் உடனே விழித்துக்கொண்டது. தன் ஆருயிர் எஜமானின் நிலையை நொடியில் உணந்து கொண்ட அது, மின்னலாகச் செயல் பட்டது. அது பாய்ந்த வேகத்தில் பாம்பு மூலையில் சென்று விழுந்தது.

இப்பொழுது பாம்பு கம்ருஜானை விட்டுவிட்டு டைகரிடம் திரும்பியது. பாம்பு பாய்ந்து பாய்ந்து கொத்த, டைகர் அதன் தலையைக் கடிக்க முயல, இரண்டும் சளைக்காமல் தாக்கிக் கொண்டன. சத்தத்தைக் கேட்டு அறை வாசலில் படுத்திருந்த ஹீராவும் உள்ளே ஓடி வந்தது. நிலைமையே உணர்ந்து கொண்ட அது, டைகருக்கு உதவியாகத் தானும் களத்தில் குதித்தது.

கம்பைத் தேடிப் பிடித்து விட்டாலும் அதை வீசினால் எங்கே தவறிப் போய் நாய்கள் மேல் பட்டு விடுமோ என்ற பயத்தால், செய்வதறியாமல் திகைத்துப் போய் இருந்தான் கம்ருஜான்.



அதிசயமான அந்தப் பாம்பு — நாய்கள் சண்டை பதினைந்து நிமிடங்களுக்கு மேல் நீடித்தது. இரண்டு எதிரிகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் பாம்பு பின்னடைந்து ஓடி விடப் பார்த்தது. டைகரும் ஹீராவும் விடவில்லை. கடைசியில் பாம்பு பல துண்டங்களாகித் தன் முடிவைத் தேடிக் கொண்டது.

பாம்பு இறந்த அரைமணி நேரத்திற்குள் பாம்புக் கடியின் விஷத்தைத் தாங்காமல் டைகரும், ஹீராவும் கம்ருஜானின் மடியில் வாலைக் குழைத்தபடி தலைவைத்து உயிர் விட்டன!

கூடப்பிறந்த சகோதரனுக்குரிய மரியாதைகளுடன் கம்ருஜான் டைகரையும், ஹீராவையும் அடக்கம் செய்து வணங்கினான். கிராமத்தினர் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

தங்களை உயிருக்கு உயிராக நேசித்த தங்கள் எஜமானனது உயிரைக் காக்கத் தங்கள் இன்னுயிரையே ஈந்து தியாகிகளாகி விட்ட டைகர், ஹீராவை குதும்பனார் கிராமத்து மக்கள் இன்னும் நினைவுகூர்ந்து வருகிறார்கள். இந்தக் குதும்பனார் கிராமம், மத்தியப் பிரதேசத்தில் உள்ள குணா என்ற நகருக்கு அருகே உள்ளது. இது நிகழ்ந்தது 1981 ஆம் ஆண்டு, நவம்பர் 8.

---

## நீயாக இருந்தால்..?(2)

தொழிலதிபர் சின்னப்பர் வீட்டில் 'எடுபிடி' வேலைக்காக வரதன் என்ற சிறுவன் ஒருவன் இருந்தான். சின்னப்பர் மகன் ரமேஷ், தனது அறையில் கழற்றி வைத்த தங்க மோதிரத்தைக் காணவில்லை என்று தந்தையிடம் புகார் செய்தான். விசாரணையில், வரதன்தான் ரமேஷின் அறையைப் பெருக்கச் சென்றான் என்பது தெரிய வருகிறது. பள்ளியில் படிக்கும் தனது தம்பியை சுற்றுலா அனுப்ப இருபது ரூபாய் முன்பணம் தர வேண்டும் என்று முந்திய தினம் ரமேஷிடம் வரதன் கேட்டான். அவனுடைய நிலைக்கு இருபது ரூபாய் அதிகம் என்று ரமேஷ் புத்திமதி கூறினான். தம்பியிடம் உள்ள அன்பால் சுற்றுலாவுக்கு அவனை அனுப்பத் தேவைப்படும் பணத்துக்காக வரதன் மோதிரத்தைத் திருடியிருக்கக் கூடும் என்று ரமேஷ் எண்ணுகிறான்.

போலீஸ் வருகிறது. அவர்கள் கண்முன்பாகவே இன்ஸ்பெக்டா் செம்மையாக வரதனை அடிக்கிறார். அப்பொழுதும் கூட வரதன் தான் குற்றவாளி இல்லை என்று கதறி அழுகிறான். அவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துக் கொண்டு போகிறார்கள். விசாரணை நடக்கிறது. தீர்ப்பு அடுத்த வாரத்திற்கு ஒத்திப் போடப்படுகிறது.

அன்று தூசு நிறைந்த தனது அறையை ரமேஷ் சுத்தம் செய்கிறான். பிளாஸ்டிக் மலர்கள் நிறைந்த பூச்சாடியை எடுத்தபோது, பூங்கொத்தின் நுனியில் தங்க மோதிரம் பளபளக்கிறது. ரமேஷ் அதிர்ந்து போகிறான். தலைக்கு 'ஷாம்பு' தேய்த்துக் குளிப்பதற்காக மோதிரத்தைக் கழற்றிப் பூங்கொத்தில் மாட்டியது நினைவுக்கு வருகிறது.

ரமேஷின் நிலையில் நீ இருந்தால் மேற்கொண்டு என்ன செய்வாய் என்பதை 15 வரிகளுக்கு மேற்படாமல் உன் செயலை நியாயப்படுத்தி எழுதி, கீழுள்ள கூப்பனுடன் இணைத்து ஆசிரியர் கோகுலம், ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 32 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். பதில் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 30.4.90. தக்க பதிலுக்குப் பரிசு உண்டு. பரிசு பெற்றவர்களின் புகைப்படம் கோகுலத்தில் வெளியாகும்.



பெயர் : ..............................

முகவரி ..............................

..............................

..............................

..............................

பின் கோடு: ..............................

ஏப்ரல் 1990




### கதைக் குறள் நீதிகள்

(கவிஞர் தமிழ்முடி, எம். ஏ. — பக். 72 — ரூ. 7 — தமிழ்முடி நிலையம், எச். 10 கே. பொன்னம்பலம் காலனி, பொன்னம்பலம் சாலை, சென்னை — 600 078.)

அதென்ன, கதைக் குறள் நீதிகள்? கதை போல் உள்ள குறளை விரித்துச் சொல்லி, அதனால் பெறப்படும் நீதியையும் பொட்டில டித்தாற்போல் சுட்டிக்காட்டுகிறார் ஆசிரியர். அப்படி எட்டுக் குறட்பாக்களுக் கான விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார் புலவர் தமிழ்முடி. இட்டுக் கட்டிய கதைகளில் கற்பனைச் சுவையும் அடிப்படை அறிவியலும் சேரப் பின்னி, அதற்குப் பொருந்திய குறளை முடிவில் — அதுவும் எளிய பொழிப்புரையுடன் வைக்கும் போது மனத்தில் கிச்சென்று பதிகிறது.

### அறிவியல் மலர்கள்

ப. பா. குமரன் — பக். 88 — ரூ. 7.50 — விற்பனை உரிமை: பைலட் பப்ளிகேஷன்ஸ், 309, லிங்கி செட்டித் தெரு, சென்னை — 600 001.)

உங்களுக்கு அறிமுகமான டாக்டர் பக்கம் விளக்கம் சொல்பவர் தந்தை. சந்தேகம் கேட்கிறவர்கள் அவரது மகன் மணியும், மகள் மீனாவும். இந்த உரையாடல் உத்தியில் விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாற்றை, அவர்கள் தங்கள் கண்டுபிடிப்புக்களுக்காகப் பட்ட பாட்டைச் சுவைபடச் சொல்லியிருக் கிறார்.

இன்றைக்கு ரொம்பச் சர்வ சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் விஞ்ஞான உண்மைகளை முதன்முதலாக ஆராய்ந்து வெளியிட்டவர்கள் எத்தனை எத்தனை சோதனைகளைச் சந்தித்திருக்கி றார்கள்! உதாரணத்துக்கு: பூமியும் மற்று முள்ள எல்லாக் கோள்களும் சூரியனைச் சுற்றித்தான் வருகின்றன என்ற உண்மையை முதன் முதலாகக் கண்டுபிடித்த கோப்பர்னிக் கஸ் என்ற பாதிரியார், உயிருக்குப் பயந்து முப்பது வருடங்கள் வரை வெளியிடாமல் இருந்து, எழுபதாவது வயதில் தமது மரணப் படுக்கையில்தான் தமது சீடர் மூலம் புத்தக மாக வெளியிட்டு உயிரை விட்டாராம்! இதேபோல் இரத்தஓட்டத்தை அறிந்து வெளி யிட்ட வில்லியம் ஆர்வி, புவி ஈர்ப்புச் சக்தி யைக் கண்டுபிடித்த நியூட்டன், திரைப்படம் உருவாக்கிய வில்லியம் பார்சி க்ரீனி, தொலை பேசி கண்ட வில்லியம் கிரஹாம் பெல் ஆகி யோரைப் பற்றியும் குடும்பப்பாங்கான உரை யாடலுக்குள்ளேயே குவித்துத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

தெரிந்த உண்மைகளைத் தெரியாத விவ ரங்கள் சேர்த்துத் தந்திருக்கும் இந்த அறிவியல் நூல் சுவையும் பயனும் சேர்ந்தது.

### ஓவியம் வரையக் கற்றுக் கொள்ளுங்கள்

(பாகம் — 1, ஓவியம்: ராகி — பக். 70 — மணிமேகலை)

'மனுஷன் சிரிக்கிற, அழுற, கோபித்துக் கொள்கிற மாதிரிப் படம் வரைவதற்கே நம்ம ஓவியர்கள் திணறுகிறார்கள். இந்த ராகி இருக்கிறாரே மனுஷர் நாய், குரங்கு, பூனையெல்லாம் கூட சிரிக்கிற, அழுகிற, கோபிக்கிற மாதிரியெல்லாம் எப்படி வரை கிறார்?'' — இப்படி அமரர் ராகியைப் பற்றி அமரர் தமிழ்வாணன் பாராட்டக் கேட்டிருக் கிறேன்.

அந்த ராகி சொல்லிக் கொடுக்கும் ஓவிய வரிசையில் ஓர் உயிரோட்டம் தெரிகிறது. சாதாரண மேசை நாற்காலி போன்ற ஜடப் பொருள்களிலிருந்து ஆரம்பித்து, ராஜாஜி கார்ட்டூன் வரை தொட்டிருக்கிறார். ஓவியங் களில் ரசனை உள்ள அத்தனை பேருக்குமே நாமும் வரைந்து பார்க்கலாமே என்ற ஆசை யைத் தூண்டி விடும்.

### கிரிக்கெட் வினாடி வினா

(ஆசிரியர் குழு — பக். 192 ரூ. 18 — இரண்டு புத்தகங்களும்: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண்: 1447, 4, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை — 600 017)

அடேயப்பா! கிரிக்கெட் சம்பந்தமாய் இத்தனை கேள்விகள் கேட்க முடியுமா? கிரிக்கெட் என்சைக்ளோபீடியா என்றே சொல்லலாம்.

குறிப்பாக, கிரிக்கெட்டில் சாதனை படைத்த முன்னோடிகளைப் பற்றிய விஷயங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. பெரும்பாலும் பர்சனாலிடி பற்றிய செய்தி களாய் இருப்பதால் கிரிக்கெட் வீரர்களோடு நமக்கு ஓர் ஒட்டுறவு தோற்றிக் கொள்கிறது. கிரிக்கெட் ரசிகர்கள் இதை ஒரு 'ரெஃபரன்ஸ்' புத்தகம் போலவும் பயன் படுத்தலாம்.


— தே. ப.



எட்டுக்கு எட்டு
11
கமிஷனர் அறை —
கிழவன் திம்மையாவின் லட்சிய வெறிக்காக அவன் மகன்கள், அங்கிராமியும் சின்னானும் உழைக்கிறார்கள். இதற்கு முன் அவர்கள் குற்றம் செய்ததில்லை...
ஆமா சார்.. எங்கப் பாவும் சித்தப்பாவும் நல்லவங்க சார்.
ஆனா இப்ப அவங்க நல்லவங்க இல்லை வேலு! இதை நீ நம்பாட்டா எங்களுக்கு உதவ முடியாது. என்ன நம்பறியா?
நம்பறேன் சார். இப்ப நான் என்ன செய்யணும் சொல்லுங்க!
நீ எங்களைச் சந்திச்சது பற்றி யார் கிட்டயும் சொல்லாதே... கன்னையா இப்போ உன்னை ஊரில் கொண்டு போய் விட்டுட்டு வந்திடுவார். சரியா?
வேலு கன்னையாவுடன் ஜீப்பில் ஏறினான் —
இதை பார் வேலு, நாளைக்கு நாங்க உங்க ஊர் 'கெஸ்ட் ஹவுசி'லே மப்டியில் வந்து தங்குவோம். யாருக்கும் தெரியாம எங்களை வந்து பார், என்ன?
ஆகட்டும், சார்!


கமிஷனர் அறை—
இதுவரை ஏழு குழந்தைகள் காணாமல் போயிருக்கின்றன. இன்னும்...
யெஸ், ஒன்று பாக்கியிருக்கு, எட்டுக்கு எட்டு கிடைக்கிறவரைக்கும் அந்த ஏழுக்கும் எந்த ஆபத்துமில்லை.
நீ சொல்றதைப் பார்த்தா அந்த எட்டாவதை நீயே பிடிச்சுக் கொடுத்துடுவே போலிருக்கே?
யெஸ் சார்! என்னுடைய திட்டம் அதுதான்!
ரஞ்சித்!
பொறுத்திருந்து பாருங்க. எனக்கு வேலையிருக்கு. வரேன்.
அங்கிருந்து நேரே சசிவர்ணத்தின் வீட்டை அடைகிறான் ரஞ்சித்—
என்னங்க, யார் வந்திருக்காங்க பாருங்க!
வாங்க, சி.ஐ.டி சார்!


அசிவர்மாத்தின் மனைவி பத்மாவதி தன் கணவரிடம்-
நம்ம காருமேஷ், ராஜுவ பத்தி தகவல் தெரிஞ்சுதா, கேளுங்க...
அதுக்குத்தானம்மா வந்திருக்கேன்!...
அதுக்குத்தான்னா? சி. ஐ. டி. சார், எதையும் மறைக்காதீங்க. அவங்களுக்கு என்ன ஆச்சு?
ஒண்ணும் ஆகலே. பத்திரமா இருக் காங்க!
எங்கே... எங்கே? அங்கே இப்பவே எங்களைக் கூட்டிப் போங்க... ப்ளீஸ்!
வெய்ட். அவங்க எங்கேயோ பத்திரமா இருக்காங்கன்னு மட்டும் நிச்சயமாத் தெரியும். ஆனா அது எங்கேன்னு கண்டுபிடிக்க வேணும்னா உங்க...



...சொல்லுங்க, அதுக்காக என்ன ரிஸ்க் எடுக்கணும்னாலும் நாங்க தயாரா இருக்கோம். சொல்லுங்க மிஸ்டர் ரஞ்சித்... குமான்!
அந்த சமயத்தில் அவர்களுடைய மூன்றாவது குழந்தை சின்னராஜு அங்கு வருகிறான்—
உங்க ஒத்துழைப்புக்கு நன்றி!...ம்.. இப்ப... நீங்க உங்க குடும்பத்தோட ஒகேனக்கல் வரணும் — இப்பவே!
எனக்குப் பயமா இருக்கு. குழந்தையை இங்கேயே அத்தையம்மாகிட்டே விட்டுட்டுப் போலாம்!
இந்தக் குழந்தை இல்லாம நீங்க அங்கே வந்து பிரயோசனமில்லை. இவன்தான் முக்கியம்!
?
(தொடரும்.)




க. கோகுலகிருஷ்ணன், விசலூர்.

கே: அத்தி, ஆல், அரசு போன்றவை பூப்பதில்லையே என்ன காரணம்?

ப: விதையில்லாமல் மரமில்லை; மரமில்லாமல் பூவில்லை; பூவில்லாமல் காயில்லை; காயில்லாமல் கனியில்லை. இதோடு நிறுத்திக் கொள்வோம். அத்தி, ஆல், அரசு போன்றவற்றின் காய்கனிகள் உன் கைக்கும் எட்டி, சமயத்தில் வாய்க்கும் எட்டியிருக்கும். அட, உண்மையென்றால் அவற்றுக்குப் பூ இருப்பதும் சத்தியம். என்ன, வெளிப்பார்வைக்குப் பளிச்சென்று தெரியாமல் பதுங்கியிருக்கும். முனையில் பிரியும் இரு இலைகளுக்கு நடுவே பார்வையைக் கூர்மையாக்கி உற்றுப் பார். மொட்டுப் போல் சின்னதாய்ப் பூ தெரியும். அதுதான் அந்த வகைக் காய்களின் உற்பத்தி ஸ்தானம்.

* போ. கோபாலகிருஷ்ணன், சிந்தாமணி.


கே: வெண்மையான மலர்கள் பிற நிறம் கொண்ட மலர்களைக் காட்டிலும் அதிகமான மணம் கொண்டிருப்பதேன்?

ப: எந்த ஆதாரத்தை வைத்து இப்படியொரு கேள்வி கேட்டாய் என்று புரியவில்லை. பிற நிறங்கள் கொண்ட மலர்கள் தான் வெண்மையான மலர்களைக் காட்டிலும் மணம் கொண்டவை என்பதற்கு நான் இங்கே சில ஆதாரங்களை முன்வைக்கிறேன். சவால் உன்னால் இதை மறுக்க முடியுமா?

அபரிமிதமான மணம் கொண்ட ஒரு மலர் உண்டு. அதை நாசி நெருக்கத்தில் வைத்து நன்றாக உறிஞ்சினால் ரத்தமே வந்துவிடும் என்பார்கள். அந்தப் பூவைத் தெரியுமா உனக்கு? மனோரஞ்சிதம் என்று பேர். இதன் நிறம் இளம்பச்சை. இதே நிறத்தில் இதற்குத் தங்கை போன்றது ஒன்று உண்டு. சண்பகம். இலக்கிய ஆதாரத்தோடு இன்னொன்று சொல்லட்டுமா? 'மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்...' படித்திருப்பாயே! இந்த மகிழம்பூ இருக்கிறதே, இது தெருப் புழுதிப் பழுப்பு நிறம் கொண்டது. 'இதெல்லாம் மல்லிகை மணத்துக்கு ஈடாகுமா?' என்கிறாயா? இருக்கட்டும். மல்லிகையிலேயே ஜாதிமல்லி என்று ஒரு ரகம் உண்டு. இந்த மலரிலிருந்து ஜாஸ்மின் ஆயில் தயாரிக்கிறார்கள். இதன் நிறம் என்ன தெரியுமோ? இளஞ்சிவப்பு. போதுமா, இன்னும் வேண்டுமா?

* ஆர். செல்வராஜ், மாங்கரை.

கே: வானிலிருந்து சில சமயம் விண்மீன்கள் 'விர்' ரென்று கீழ்நோக்கிப் பூமியில் இறங்குவது ஏன்?



ப: நாசமாய்ப் போச்சு. விண்மீன்கள் பூமியை நோக்கி இறங்கினால் பூமியே காணாமல் போய்விடும். பூமியை நோக்கி எரிந்து கொண்டே இறங்குவது எரிகற்கள். அவை என்ன? பிரபஞ்ச வெளியில் இயங்கும் கோள்களின் சுழற்சி வேகத்தில் சிதறும் உதிரிகள் தாம். இவை புறப்பட்டு வரும்போது சாதாரணக் கற்கள் போலத்தான் இருக்கும். பூமண்டலத்தின் புவியீர்ப்பு எல்லையைத் தொட்டதும் இதன் வெம்மையில் அது பற்றிக் கொண்டு விடும். அதுதான் எரிந்து கொண்டே வரும் விண்மீன் போல் தோற்றம் தருகிறது. இந்த எரிகற்கள் பூமியைத் தொடுவதற்குமுன்னரே வெட்டவெளியில் சாம்பலாகி விண்ணில் கரைந்து மறைந்து போய் விடும். சில சமயங்களில் கோள்களிலிருந்து விலகும் பிரும்மாண்ட கற்கள் பூமியைத் தொடுவதும் உண்டு. அமெரிக்காவில் அப்படி விழுந்த விண்மீன் குஞ்சு ஒன்று கிட்டத்தட்ட 600 சதுர மீட்டருக்கு ஒரு பெரிய குழி பறித்திருக்கிறது. இதை ஒரு நினைவுச் சின்னம் போல் பாதுகாத்துக் காட்சிக்கு வைத்திருக்கிறார்கள். நீ என்றைக்கு அங்கு சென்று அதையெல்லாம் நேரில் தரிசிக்கப் போகிறாய்?

* ராஜீவ் பிரியன், தச்சநல்லூர்.

கே: பேய் பிசாசு என்பதெல்லாம் உண்மையா?

# சொல்லப்படும்!

## சின்ன அண்ணன்

ப: இதே கேள்வியை அமரர் நீதிபதி ஏ. எஸ். பி. ஐயரிடம் ஒருவர் கேட்டார். அதற்கு அவர் சொன்னார்: 'இது தேவையில்லாத விஷயம். நான் இல்லையென்று சொன்னேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அது எந்த மூலையிலோ இருந்து தொலைத்து அறைந்து வைத்தால் என்ன பண்ணுவது? எதற்கு வம்பு?'

அத்தனை பேரறிஞரே அப்படிச் சொல்லி விட்ட போது எனக்கு மனசில் பட்டதைச் சொல்லத் தயக்கமாய் இருக்கிறது என்றாலும் ஔவையார் பின்னால் ஒண்டிக் கொண்டு என் பதிலை முன் வைக்கிறேன். ஔவையார் ஒரு பாழடைந்த மண்டபத்தில் இரவு தங்க நேர்ந்த போது ஒரு பெண் பேய் அவரை அறைய வந்ததாம். அதை எதிர்த்து ஔவையார் பாடியதாக ஒரு பாடல்:


'வெண்பாவிரு காலில் கல்லானைக்
கண் பார்க்கக் கையால் எழுதத்
தெரியானை — பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப்
பெற்றாளே
எற்றோ மற்றெற்றோமற் றெற்று.'

எற்று என்றால் அறை என்று பொருள் இதிலிருந்து என்ன தெரிகிறது? எழுத்தறிவில்லாதவர்கள்தான் பேயினால் அறை படத் தக்கவர்கள் என்பதுதானே? இதையே கொஞ்சம் ஊன்றிக் கவனித்தால் பகுத்தறிவுள்ள படிப்பறிவுள்ளவர்கள் பேய், பிசாசு பயமுறுத்தலை நம்ப மாட்டார்கள்; படிப்பறிவற்ற மூடநம்பிக்கையாளர்கள்தான் அதை நம்பி, பாதிப்புக்கு ஆளாவார்கள் என்று தோன்றுகிறது. அதற்காக மேனாட்டுப் பேய்க் கதை சாட்சிகளையெல்லாம் சடசடவென்று கொண்டு வந்து அடுக்காதீர்கள். அதெல்லாம் எங்காவது எப்போதாவது நடந்திருக்கலாம். உங்களுக்கு அப்படி ஏதும் நேராது. அதையெல்லாம் நினைக்காமல் — தேர்வு நெருங்குகிறது — உங்கள் படிப்பிலே கவனத்தைத் திருப்பினால் ஏதோ உருப்பட வழியுண்டு.



* வி. கவிதா, முடிகொண்டான்.

? கே: யூகலிப்ட்ஸ் மரம் காற்றிலுள்ள ஈரப்பசையை உறிஞ்சிக் கொள்ளும் என்று சொல்கிறார்களே. உண்மையா?



ப: யூகலிப்ட்ஸின் நீண்ட அழகான இலைகளைக் கவனித்திருப்பாயே! மற்ற மரத்து இலைகளைக் காட்டிலும் இவை கனமாய் இருக்கும். அதற்குத் தேவையான எண்ணெய்ப் பசை ஊட்டச் சக்தியை, ஈரப் பசையை அடிவேர் பூமியிலிருந்து அபரிமிதமாய் உறிஞ்சிக் கொள்ளும். அதனால்தான் இந்த மரத்தைச் சுற்றி வேறு பயிர் பச்சைகள் சரியாய் வளருவதில்லை. அவற்றுக்குப் போய்ச் சேர வேண்டிய நீரையும் இவை அபகரித்துக் கொண்டு விடுகின்றன. காற்றில் ஈரத் தன்மை இருப்பது இந்த மரத்தின் வளமைக்கு அவசியம். அந்தக் காற்று வறட்சியாய் இருந்தால் இவற்றின் இலைகளில் உறையும் எண்ணெய்ப் பசையை உறிஞ்சிக் கொண்டு விடும். அதனால்தான் ஊட்டி, கொடைக்கானல் போன்ற குளுமையான மலைப் பிரதேசத்து யூகலிப்ட்ஸ் மரங்களிலிருந்து மட்டுமே தைலம் இறக்கி உன் தலைவலிக்கு மாற்றாக உபயோகப்படுத்திக் கொள்ள முடிகிறது. நம் பக்கங்களில் கீழே வளரும் யூகலிப்ட்ஸ் இலைகளிலிருந்து தைலம் எடுக்க முடிவதில்லை. இன்னொன்று: இந்த மரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட கூழிலிருந்து ஆரம்பத்தில் செயற்கை இழைகள் தயாரிக்கப்பட்டன. சிறுமுகையில் அந்தச் செயற்கை நூல் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இருந்தது. அந்த நூலுக்குப் பெயர் ரயான். இப்போது அதைவிட மலிவான வலுவான நைலான், நைலக்ஸ் போன்ற நூல் கண்டு பிடித்து விட்டதால் ரயானுக்கு மவுசு இல்லாமல் போய் விட்டது.

நில்! கவனி! புறப்படு!

# உயர்வினைத் தடுக்கும் தடைகளை வெல்!

ஒளிவீசும் இலக்கியத் தளிரே, உன் மடல் கண்டேன். வெற்றியை அடைய விடாமல் பல தடைகள் என்னை உருட்டுகின்றன; மிரட்டுகின்றன; விரட்டுகின்றன என எழுதியிருந்தாய்.

ஒவ்வொரு மாணவனின் உயர்வினையும் தடுக்கப் பல தடைகள் உள்ளன. குறிப்பிடத்தக்கவை இதில் எட்டாகும். உள்ளத்தை அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும். இதோ, அந்த எட்டுத் தடைகள்:

1. மடை திறக்கும் முயற்சியின்மை!
2. மனையகத்துச் செல்வமின்மை!
3. கடையவன் நான் என்ற எண்ணம்!
4. கைகூடாது என்ற அவநம்பிக்கை!
5. படையெடுக்கும் மறதி வேகம்!
6. பாய்ந்து வரும் துயில் மோகம்!
7. தடைகள் சில எழக்கண்டு மனம் மயங்கல்!
8. தவறு செய்வோர் உயர்வு கண்டு தினம் கலங்கல்!

### 1. மடை திறக்கும் முயற்சியின்மை

ஒரு மாணவன் டாக்டராக வேண்டும் என விரும்பினால் ஆறாவதிலிருந்தே உயிரியல், இயற்பியல், வேதியியல் பாடங்களில் போதிய ஆர்வம் காட்டிப் படிக்க வேண்டும். அல்லது, பொறியியல் இன்ஜீனியராக ஆசைப்பட்டால் கணிதம், இயற்பியல், வேதியியலில் தன் முழு கவனத்தையும் செலுத்த வேண்டும். சிறந்த மொழியியற் கலைஞனாக ஆக விரும்பினால் மொழியின் இலக்கணங்கள், இலக்கியங்களில் சிறு வயதிலேயே அக்கறை காட்ட வேண்டும். வரலாற்று மேதையாக விளங்க விரும்பினால் உலக வரலாறுகளை ஊன்றிப் படிக்க வேண்டும். இவ்வாறாக ஒரு துறையில் தலைவராக வேண்டுமானால் அதற்குரிய மடையை முன்கூட்டியே அறிந்து கொண்டு அதனைத் திறந்து வைத்து விட வேண்டும். அப்படி மடையைத் திறக்க முயற்சியின்றியோ, அல்லது தவறான மடையைத் திறந்து வைத்தாலோ உரிய தண்ணீர் வேறு வயல்களுக்கு ஓடும். அவ் வயலில் நமக்குத் தேவையான விதைகளையோ, நாற்றையோ வைத்திருக்கமாட்டோம். ஆக களைகளைத்தான் பயிராக்குவோம்.

### 2. 'மனையகத்தில் செல்வமின்மை

சாதனை படைத்த சரித்திர மேதைகளெல்லாம் செல்வங்கள் கொட்டிக் கிடக்கும் சீமான்கள் அல்ல; அவர்களில் ஏராளமான பேர் அன்றாடப் பிழைப்புக்கே அல்லாடுபவர்கள். ஆப்ரஹாம் லிங்கன் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்தான்.

புத்தகங்கள் வாங்கவே காசில்லாமல் இரவல் வாங்கிப் படித்தவர். தினமும் கூலி வேலை செய்து விட்டு 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நகரத்துப் பெரிய மனிதர்களிடம் புத்தகம் இரவல் வாங்கிப் படித்தவர். படிப்பதற்குக் கூட நேரமில்லாத இவர் 5 கிலோ மீட்டர் போகும் பொழுதும் வரும் பொழுதும் அந்தப் புத்தகத்தைப் படித்து முடிப்பார்.

பெஞ்சமின் ப்ராங்லினின் தந்தை ஒரு மெழுகு வியாபாரி. பத்து வயதிலேயே படிப்பை நிறுத்தியவர் பிராங்லின். தானும் கூலி வேலைக்குச் சென்றவர் அவர். மைக்கேல் பாரடே இரும்படிக்கும் கருமான் மகன். பதின்மூன்றாவது வயதிலேயே பேப்பர் விற்கும் தொழிலுக்குப் போய் விட்டார். எடிசனின் படிப்போ மூன்று மாதங்கள்தான். இரயிலில் பேப்பர் விற்கும் பையனாக மாறிப் பணம் சேர்த்துத் தன் அறிவை வளர்த்துக் கொண்டார். சாக்ரடிஸ் ஒரு சாதாரணச் சிற்பி. ரூஸோ பட்ட துன்பங்கள் ஏராளம். மேரிக்யூரி வேலை செய்து சம்பாதித்து அதன்பின் படித்தவர் கரிபால்டி தந்தையோ ஓர் ஏழைக் கப்பலோட்டி. சன்யாட் சென் ஒரு ஏழைக் குடியானவர் மகன். ஜோன் ஆப் ஆர்க் மாடு மேய்த்து வந்த சிறுமி.

ஆக, இப்படி எத்தனையோ மேதைகள் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்கள்தான். எனவே 'மனையகத்துச் செல்வமின்மை'யென்பது ஒரு தடையேயல்ல. அது உன் மனத்திலே பிரமையாக வளர்ந்து விடுவதால், பின்னால் அழிக்க முடியாத புற்றுநோயாக மாறி விடுகிறது.

### 3. கடையவன் நான் என்ற எண்ணம்

சில மாணவர்களுக்கு எப்பொழுதும் ஓர் அவநம்பிக்கை உண்டு. ஒரு வகுப்பில் ஐம்பது பேர் படித்தால் தான் 40லிருந்து 50க்குள் தான் வருவோம் எனத் தீர்மானித்து விடுவார்கள். இண்டர்வியூவோ, இசைப் போட்டியோ, பேச்சுப் போட்டியோ — இவர்கள் கலந்து கொள்ளும் பொழுதே, 'சும்மா பேருக்குத்தான் பேர் கொடுத்தேன்; எனக்காவது பரிசாவது!' என்ற எண்ணத்திலேயே இருப்பார்கள். நன்கு படித்த மாணவர்கள் கூட இந்த மாய வலைகளில் சில நேரம் சிக்கி மிகப் பெரிய வெற்றிகளை நழுவ விட்டு விடுகிறார்கள். 'என்னை விட்டால் யார் இருக்கிறார்கள் இந்த உலகத்தின் தலைமையேற்க?' என்ற எண்ணம் அவர்கள் இதயத்தில் ஊன்றி விட்டால் பிறகு வெற்றி மேல் வெற்றிதான்.

### 4. கைகூடாது என்ற அவநம்பிக்கை:

சில மாணவர்கள் 'அந்தச் செயலை அப்படிச் செய்திருந்தால் நிச்சயம் ஜெயித்திருப்பேன்; ஆனால் இப்படிச் செய்தேனல்லவா? இது வெற்றியடையாது என என் உள்ளுணர்வு சொல்கிறது.' என்று எண்ணியபடியே தொடங்குவார்கள். 'இந்தத் தேர்வு எனக்கு ஆகாத நாளான செவ்வாயில் வருகிறது. ஆகவே நான் எப்படிப் படித்து எழுதினாலும் நாற்பது மார்க்கைத் தாண்டாது,' என்று தீர்மானமாகக் கூறி விட்டு அதனை மனப்பூர்வமாக நம்பியபடியே படிக்கத் தொடங்குவார்கள். இப்படி, 'கைகூடாது இக்காரியம்,' என முதலிலேயே கணிப்பதை இவர்கள் என்று நிறுத்துகிறார்களோ, அப்பொழுதுதான் வெற்றி இவர்களைத் தேடி வரும்.





...டையெடுக்கும் மறதி வேகம்:

...ங்கள் படிக்கும் பாடங்களில் ...மையான சிரத்தையின்றிப் படிப் ... காரணமாகவே மறதி வரு... நாளைக்குப் போனால் ஆசிரி...ட்டுவாரே; படித்து ஒப்பித்து ...வோம்' என நெருக்கடியோடு ...கும், நாம், நாளை மறுநாள் ...ம் மறந்து போய் விடுவதைப் ...க் கவலைப்பட மாட்டோம். ...னில் ஆசிரியர் அதற்குப் பிறகு ... பாடம் போய் விடுவார். அது ...த் தந்தையிடம் சினிமாவுக்குக் ... கேட்டால், இந்தப் பாட்டை ...த்தால்தான் தருவேன் என் ...ர... சரி சரி, ஒப்பிக்கும் வரை ...ாமல் இருந்தால் சரி. என்ற ...னத்திலேயே ஒப்பிக்கிறோம். ...ா பார்க்கக் காசு கிடைத்தவு... நாம் படித்ததைப் பற்றிக் ...லப்படுவதில்லை. இப்படிப் ... காரணந்தான் மறதி நம் மீது ...யெடுத்து வருவதற்கு மூல கார

6. பாய்ந்து வரும் துயில் மோகம்

சிலருக்கு எவ்வளவு நேரம் தூங்கினாலும் சரி. தூக்கத்தின் மேலுள்ள மோகம் சற்றும் குறையாது. நாலு மணிக்கருக்கலில் எழுந்து படிக்க வேண்டும் என்ற நினைவோடு அலாரம் வைத்திருப்போம்; அலாரம் அடிக்கும். ஆனால் நாமோ இன்னும் பத்து நிமிடங்கள் கழித்து எழுந்திருக்கலாம் என்ற எண்ணத்தில் தூக்க மோகத்தில் அலாரத்தை நிறுத்தி விடுவோம். அப்புறமென்ன, காலை ஏழு மணிக்கு அப்பா எழுப்பி எழுப்பி அலுத்துப் போய், கடுமையாகக் கடிந்த பிறகுதான் எழுந்திருப்போம்.

நம் மனத்தை உறுதியாக வைத்துக் கொண்டால்தான் தூக்கத்தை வெல்ல முடியும். இல்லையேல் தூக்கம் நம் நேரத்தை, பொன்னான வாழ்வையே கொள்ளையடித்து விடும். எச்சரிக்கை தேவை.

**7. தடைகள் சில எழக்கண்டு மனம் மயங்கல்:**



சில மாணவர்கள் எழுச்சியோடும் ஊக்கத்தோடும் படிப்பார்கள். தினமும் இரவு 11 மணி வரையும் அதிகாலை 4 மணியிலிருந்தும் படிக்க வேண்டும் என்று தீர்மானமும் செய்வார்கள். எந்தத் தடையும் இவர்களின் குறுக்கே வராமல் இருந்தால் நிச்சயம் இவர்கள் சொன்னதை நிறைவேற்றி ஆண்டுத் தேர்வில் 90 மதிப்பெண்களும் பெற்றிருப்பார்கள். ஆனால் இவர்கள் தங்கள் கடமையைத் தொடங்கின இரண்டாம் நாளே மின்வெட்டு செயல்பட்டிருக்கும்; அல்லது கிராமப்புறத்திலிருந்து இவர்களின் உறவினர்கள் பிரசவம் போன்ற காரணங்களுக்காக இவர்கள் இல்லத்தில் தங்கி இவர்கள் படிக்கத் தடையாக இருப்பார்கள். இதைப் போன்று பல தடைகள் பலருக்கு வரக்கூடும். சிலருக்கு அவர்கள் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த ஆரம்பித்த சில நாட்களிலேயே உடல்நலக் குறைவு, திடீர் விபத்து போன்றவை நிகழக்கூடும். அதனால் அவர்கள் சில வாரங்கள் ஓய்வு எடுக்க வேண்டியிருக்கும். அத்துடன் அவர்கள் தங்கள் எழுச்சிகளை மூட்டைக் கட்டி வைத்து,பின்வாங்கி விடுவார்கள்.

இதே போன்றுதான் பேச்சுப் போட்டி, இசைப் போட்டி போன்றவைகளில் கலந்து கொள்வோருக்கும் திடீர்த் தடைகள் வரும். அவ்வளவுதான். அதற்குப் பிறகு, 'போட்டி பக்கமே போக மாட்டோம். நமக்கும் போட்டிக்கும் ராசியில்லை' என ஒதுங்கி விடுவோம்.

இவ்வாறு தடைகளைக் கண்டு மனம் மயங்கித் தடம் மாறி போவதை விட,புடம் போட்ட தங்கமாக மேலும் நாம் ஒளிர பூதமென நமை மிரட்டும் தடைகளையே படிக்கற்களாக்கி, படையெடுப்போம் நம் உன்னத இலக்கு நோக்கி; விடை கொடுப்போம் உளத்திலெழும் மயக்கங்களுக்கு!

**8. தவறு செய்வோர் உயர்வு கண்டு தினம் கலங்கல்:**

பெரும்பான்மையோரின் ஆக்கபூர்வமான வேகத்தை அடியோடு வீழ்த்துகின்ற இந்த அரக்கனிடம் சிறுவர்கள் மிக மிக எச்சரிக்கையோடு இருப்பது அவசியம்.

நம்மை விடக் குறைவான அறிவு கொண்டவன் — நாள் முழுக்க ஊர் சுற்றிக் கொண்டிருப்பவன் — ஏதேனும் தில்லு முல்லுகள் செய்து —



ஆசிரியர்: அசோகர் ஏன் சாலை ஓரங்களில் மரங்களை நட்டார்?

ராமு: சாலை நடுவே நட்டால் போக்கு வரத்துக்கு இடைஞ்சலா இருக்குமேன்னு தான்!

— எம். ஆனந்த்.

நம்மை விட அதிக மதிப்பெண்களை எடுத்து விடுகின்ற ஒரு வருத்தப்படக் கூடிய சூழ்நிலை இன்று உலகின் பல்வேறு நிலைகளில் அடிக்கடி உரு வாகிறது.

நாள் முழுக்க இரவு பகலாகப் படிக் கின்ற நம்மைக் கேலியும், கிண்டலும் செய்தபடி செல்லுகின்ற அடுத்த தெரு மாணவன் தினசரி சினிமா, நாடகம், தெருக் கூட்டம் எனப் பொழுது போக்குவான். கடவுள் சரியாகப் படிக்காத அவனுக்குத் தண்டனையளிப்பார் என தினமும் பதினைந்து மணி கஷ்டப்பட்டு படிக் கின்ற நாம் நம்மைத் திருப்திப்படுத் திக் கொள்வோம். ஆனால் இறுதி யில் என்ன ஆகும்? தேர்வு பெற்றோர் பட்டியலில் அந்த மாணவனின் பெயர் இடம்பெற்று விடும்; நம் பெயர் இருக்காது!

இப்படிப்பட்ட நிலை பேச்சுப் போட்டி, இசைப் போட்டி போன்ற வைகளிலும் நிகழக்கூடும். சிறந்த பேச்சாளனையோ, இசை மேதை யையோ, நாடகக் கலைஞனையோ தேர்ந்தெடுக்கும் பொறுப்பிலுள்ள நடுவர் குழு பணம், பதவி, செல் வாக்கு இவைகளின் காரணமாக திறமைக்குறைவானவர்களை முதற் பரிசுக்குரியவனாகத் தேர்ந்தெடுத்து விடும். இதுபோன்ற நிலைகளினால் உண்மையான திறமை படைத்தவன் உள்ளம் உடைந்து தன் திறமைகளை அன்று முதல் வெளிக்காட்டாமல் தன் மன ஆழத்துக்குள்ளேயே மக்கிப் போகச் செய்து விடுவான்.

இப்படி தவறு செய்வோர் உயர்வு கண்டு தினம் கலங்கி தங்கள் முயற் சியினை முளையிலேயே வெட்டிப் புதைத்து விடக் கூடாது. 'திறமை களை வளர்ப்பதை விட அதிகாரத் திலுள்ளோருக்கு வால் பிடித்தால் நிச்சயம் உயரலாம்' என்ற எண்ணம் அவர்கள் நெஞ்சில் எப்பொழுதும் எழக் கூடாது. இளம்தலைமுறை யினர் எது நேர்ந்தாலும் எதைக் கண்டாலும் மனம் இடிந்து போகா மல் 'நேர்மை, அறிவுக் கூர்மை' என் பதன் அடிப்படையில் தங்களை வளர்த்தபடியே இருக்க வேண்டும்.

அரிச்சந்திரனுக்கு அடுக்கடுக்கான சோதனைகள் வந்தபடியே இருந்தன. பகடைகள் சகுனியின் எண்ணப் படியே பாய்ந்து விழுந்தும் கூட தர்மன் தர்மத்தின் மீது உள்ள நம் பிக்கையைத் தளர விட்டு விட வில்லை. 'தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்; தர்மம் மறுபடி வெல் லும்' என உறுதியோடு இருந்தார் தர்மர்.

இத்தகைய போக்கினை இளைய தலைமுறையினர் தங்கள் நெஞ்சில் இனிய விளக்காக ஏற்றி வைத்துக் கொள்ள வேண்டும்! 'எந்தத் தடை யின் காரணமாகவும் நான் நாள் தோறும் படித்தல் என்ற வேள்வி யைக் கை விட மாட்டேன்' என ஆதி கால முனிவர்கள் போல மனத்தில் உறுதி பூண்டு யாகத்தீயை வளர்த்த படியே இருக்க வேண்டும்.

"தடைக்கற்கள் உண்டென்றாலும்
தடந்தோள்
உண்டென நீ சிரித்தாய்"

என்ற பாரதிதாசனாரின் உணர்ச்சிப் பெருமிதத்தை நெஞ்சில் ஏந்தி ரிக் வேதத்தில் கூறியுள்ளது போல,

'மேலே, மேலே, மேலே பறந்த படி உயரே, உயரே போக வேண் டும்; தாழ்வான எதனையும் துளியும் பாராதே!'' என்ற வகையில் அறி வொளியை நீ அன்றாடம் மேலும் மேலும் சுடர் விடச் செய்!

உன்னத இலக்கியமே, உறுதியோடு நடந்து போ. உனைத் தடுக்கும் தடை களை வெட்டி வீழ்த்து; உனைப் பகைக்கும் பகைகளை உடைத்து நொறுக்கு; இரும்புத் தளைகளை உருக்கித் தகர்த்து வெண்ணிலவாய் வெளிக் கிளம்பு. அதோ, வெற்றி தேவன் மாலையோடு நிற்கிறானே!

(தொடரும்)


என்ன இது! இரும்புத் துண்டை நக்கிப் பார்க்கிறே?
இது தேனிரும்புன்னு சொன்னாங்க. அதுதான் இனிப்பா இருக்கான்னு பார்க்கிறேன்.
சா.இராமணி
அந்த டாக்டருக்கு குழந்தை மனசுன்னு எப்படி சொல்றீங்க?
ஊசி குத்தும் போது அவரும் சேர்ந்து அழுறாரே....!
தத்தாத்ரேயன்
சிரிப்
அந்தப் பையன் பேசும்போது 10 செ.மீ, 15 செ.மீ.ன்னு சொல்றானே. என்ன அது?
அவன் எப்பொழுதும் வார்த்தையை அளந்துதான் பேசுவான்.
க.இராமலிங்கம்
என்ன இது, சோப்பு நுரையைக் குடிக்கறீங்க?
வயித்துலே நிறைய அழுக்கு இருக்குன்னு டாக்டர் சொன்னார்.
உங்க பையன் எப்பவும் புத்தகமும் கையுமா இருப்பானே. அவன் ஏன் பரீட்சை எழுதலை?

# ஒரு மரத்துப் பறவைகள்

5

மலர்மகள் உயர்நிலைப் பள்ளியில் இரண்டாவது நாளாக இன்ஸ்பெக்ஷன் நடந்து கொண்டிருந்தது.

ஆங்கிலப் பாடம் நடந்த போது மாவட்டக் கல்வி அலுவலர் பத்தாம் வகுப்பு 'அ' பிரிவுக்கு வந்தார். சிறிது நேரம் இருந்தார். சில கேள்விகள் கேட்டார். சிலருடைய நோட்டுப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தார்.

''இங்கிலீஷிலே இந்த வகுப்பிலே யார் முதல் மாணவி?'' என்று கேட்டார்.

இரண்டு பெண்கள் எழுந்து நின்றார்கள்.

''இரண்டு பேரா?'' என்று ஆச்சரியப்பட்டவரைப் போல் ஆசிரியை முகத்தை நோக்கினார்.

''ஆமாம் சார்! இவள் மாயா. அவள் மீனா. இங்கிலீஷ் பாடத்திலே ஒன்று இவள் முதல் மார்க் எடுப்பாள். இல்லையென்றால் அவள். இரண்டு பேருக்கும் பலத்த போர்ட்டி,'' என்றார் ஆங்கில ஆசிரியை.

''மற்ற மாணவிகள் எப்படி?'' என்று டி. ஈ. ஓ. கேட்டார்.

உடனே ஆசிரியை, தயாராக வைத்திருந்த பிராக்ரஸ் ரிப்போர்ட்டைப் பிரித்து அவருக்குக் காட்டினார்.

''தட்ஸ் குட். கீப் இட் அப்,'' என்று பாராட்டி விட்டுத் திருப்தியோடு சென்றார்.

ஆங்கில ஆசிரியையின் முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடியது. ''தேங்க் யூ சில்ட்ரன், எனக்கு நல்ல பேர் வாங்கிக் கொடுத்திட்டீங்க,'' என்று சிரித்தார் ஆசிரியை.

அப்போது பவித்ரா எழுந்து நின்றாள். ''எங்கள் வகுப்புக்கு எந்தப் பாட வேளையில் வந்தாலும் எங்களுக்கு நல்ல பேரே கிடைக்கும்,'' என்று பெருமிதமாகக் கூறினாள் பவித்ரா.

''வகுப்புத் தலைவி எவ்வழி, அவ்வழி மாணவிகள்,'' என்றார் ஆசிரியை.

''மேடம்! ஆசிரியை எவ்வழி, அவ்வழி மாணவி என்று கூறுவதுதான் அதைவிடப் பொருத்தமாக இருக்கும்,'' என்று சிரித்தாள் பவித்ரா.

''கற்பவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து கண்ணுங் கருத்துமாகக் கற்றால், கற்றுக் கொடுப்பவர்களுக்கும் பெருமை, கல்வி நிலையத்துக்கும் பெருமை. வீட்டுக்கும் பெருமை; நாட்டுக்கும் பெருமை,'' என்றார் ஆசிரியை.

ஆசிரியை கூறுவதையே எல்லோரும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''என்ன, உங்களுக்குத் தெரிந்ததைத்தானே சொல்கிறேன் என்று பார்க்கிறீர்களா? தெரிந்ததாக இருந்தாலும் சில சமயங்களில் அதை நினைவுபடுத்த வேண்டியதாக இருக்கிறது,'' என்றார் ஆசிரியை.

''எரிகிற திரியைத் தூண்டி விட்டுக் கொண்டே இருப்பதைப் போல,'' என்றாள் பவித்ரா.

''கரெக்ட்! ஆனால் சில சமயங்களிலே திரியைத் தூண்டி விடுவதாக நினைத்துச் செய்ய, அது அணைந்து போவதும் உண்டு. ஆல் ரைட்! வீ வில் ப்ரொஸீட் ஃபர்தர்,'' என்று விட்ட இடத்திலிருந்து பாடத்தைத் தொடர ஆரம்பித்தார் அவர்.

''மேடம், ஒரு விஷயம் தெரிய வேண்டும்,'' என்றாள் பவித்ரா.

''என்ன?'' என்றார் ஆசிரியை.

''இன்னும் கொஞ்ச நேரத்திலே,

பூவை அமுதன்



கல்வி அதிகாரி எங்களையெல்லாம் கூட்டி ஏதோ பேசப் போகிறாராம். அப்போது நாங்கள் ஏதாவது அவரிடம் கேட்கலாமா?'' என்று கேட்டாள் பவித்ரா.

''முதலில் அவர் என்ன பேசுகிறார் என்பதை நீங்கள் அமைதியாக இருந்து கேட்க வேண்டும். அதற்கப்புறம் அவருடைய அனுமதியைப் பெற்று நீங்கள் ஏதாவது கேட்கலாம். நீங்கள் கேட்பது அவருக்குச் சங்கடத்தை உண்டாக்கக் கூடாது. சந்தோஷத்தைத்தான் உண்டாக்கணும்,'' என்று கண்டிப்பான தொனியில் கூறினார் ஆசிரியை.

''எங்களுக்கு மேலான, ஆசிரியைகளுக்கும் மேலான அதிகாரி அவர். அவரிடத்தில் ஜாக்கிரதையாக அடக்கமாகத்தான் பேசுவோம். நியாயமான சில கோரிக்கைகளை நான் கேட்டால் அது தவறாகுமா?'' என்று கேட்டாள் பவித்ரா.

அப்போது வகுப்பு முடியும் மணி ஒலித்தது.

''இதற்கு நான் பதில் சொல்ல முடியாதும்மா. என்னை விட்டுடுங்கோ. ஆனால் நீங்கள் எல்லாம் புத்திசாலிகள். எல்லாருமே சராசரி அறிவுக்கு மேற்பட்டவர்கள்தாம். எதையும் யோசித்துச் செய்ய வேண்டும். அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்,'' என்று கூறிவிட்டு அவர் வேகமாகப் போய் விட்டார்.

வகுப்பு மாணவிகள் பவித்ராவைப் பிடித்துக் கொண்டார்கள். ஆளுக்கு ஒரு கேள்வியாகக் கேட்டுத் துளைத்தார்கள். பவித்ரா அதிகாரியிடம் என்ன கேட்கப் போகிறாள் என்பதை அவசர அவசரமாக அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் அவர்களுக்கு ஆர்வ வெள்ளம் அமைதி அணையை உடைத்து விடும் போல் பெருகி வந்தது.

''ப்ளீஸ்... கொஞ்சம் அமைதியாக இருங்க. நான் உங்கள் வகுப்புத் தலைவி. அதோடு, போன வாரம்தான் என்னை அவசர அவசரமா பள்ளி மாணவியர் தலைவியாகவே நியமித்திருக்கிறார் தலைமை ஆசிரியை. அதனாலே நான் நன்றாக யோசித்துத்தான் என்னுடைய கோரிக்கையை எழுப்புவேன். என்னுடைய கோரிக்கையென்றால்... அது என் சொந்த நன்மைக்காக அல்ல; நம் மலர்மகள் உயர்நிலைப் பள்ளியின் பொது நன்மைக்காக!'' என்று பேசிக் கொண்டே போனாள் பவித்ரா.

"அதுதான் என்ன?" என்று சின்னக் கேள்வியானாலும் பெரிய குரலில் நீட்டிக் கேட்டாள் திவ்யா.

"அதுதான் சஸ்பென்ஸ்!" என்று சுருக்கமாகச் சொல்லி விட்டாள் பவித்ரா.

அதையடுத்து அந்த வகுப்பில் கசமுச கசமுச என்ற ஓசையும் முணகல் ஒலியும் அடுத்த பாட வேளை ஆசிரியை வரும் வரையில் தொடர்ந்து கொண்டிருந்தது.

அப்போது மீனா எழுந்து பவித்ராவின் அருகில் வந்தாள். "டீச்சர் வருவதற்குள் உன்கிட்டே ஒரு விஷயம் பேசணும்," என்றாள் மீனா.

"வேணாடி; அப்புறம் பேசிக்கலாம். நீ பேச வந்தால் அப்புறம் ஒவ்வொருத்தியா பேச வந்திடுவாளுங்க. அப்புறம் வகுப்பிலே அமைதியிருக்குமா? லீடராயிருக்கிறதிலே இது ஒரு தொந்தரவு. சிநேகிதிக்குக் கூடச் சலுகை காட்ட முடிவது இல்லை," என்று இரகசியமாகச் சொன்னாள் பவித்ரா.

"இல்லே... நான் நேற்று உன்கூட வந்ததை எப்படியோ தெரிஞ்சிக்கிட்டாளுங்க. கமண்ட் அடிக்கிறாளுங்க," என்று சொல்லி விட்டுத் தன் இடத்துக்குத் திரும்பினாள்.

"என்ன தலைவியம்மா? அந்த சஸ்பென்ஸை உன் உயிர்ச் சிநேகிதியிடம் மட்டும் உடைச்சாச்சா?" என்று குத்தலாகக் கேட்டாள் திவ்யா.

"திவ்யாவுக்கு எப்போதுமே பவித்ராவை ஏதாவது சொல்லிக்கிட்டேயிருக்கணும். தலைவியா வர முடியாம போச்சேங்கிற ஏக்கமும் ஏமாற்றமும் இன்னும் குறைந்தபாடில்லை," என்று மீனா திவ்யாவைக் குத்தினாள்.

"எனக்கு ஒன்றும் அப்புடிப் பொறாமையும் இல்லை; எரிச்சலும் இல்லை. அவள் என் உறவுகாரப் பொண்ணுதான். உனக்குத்தான் நான் தலைவியா வந்திருந்தால் கஷ்டம்," என்றாள் திவ்யா.

"எனக்கு யார் தலைவியாக இருந்தாலும் கவலையில்லை. யார் தயவுக்காகவும் நான் காத்திருப்பதில்லே."

"ஓஹோ! அவள் தயவில்லாமலா அவள் கூடக் காரிலே போனே?" என்று காரமாகக் கேட்டாள் திவ்யா.

அவள் அப்படிக் கேட்டதும் மீனாவின் கண்கள் கலங்கி விட்டன. சிநேகிதியோடு அவள் காரில் போவது குற்றமா?

"நீ போவதாக இருந்து, உன்னை வர வேண்டாமென்றா சொன்னாள்?" என்று கண்ணீர் மல்கக் கேட்டாள் மீனா.

"அவள் என்னடி என்னை வேண்டாங்கிறது? அவள் அம்மாவும் என் அம்மாவும் கிளாஸ்மேட்ஸ். அது மட்டுமல்ல. நெருங்கிய உறவு கூட. அதைவிடு, நான் ஒன்றும் உன்னைப் போலஇல்லே. நினைச்சா நாளைக்கே காரிலே வந்து இறங்குவேன்," வார்த்தையில் சூடேற்றிப் பேசினாள் திவ்யா.

மீனா தலையை டெஸ்க்கின் மேல் கவிழ்த்துக் கொண்டு மௌனமாகக் கண்ணீர் உகுத்தாள்.

"சே! இந்தத் திவ்யா எப்பவுமே இப்படித்தான். அவளுக்குப் பிடித்துப் போனால் ரொம்பவும் ஒட்டிக்குவா. இல்லேன்னா ஒரேயடியா



வெட்டிக்கு வா," என்று சொல்லி மீனாவைச் சமாதானப்படுத்த முயன்றாள் அவள் பக்கத்தில் அமர்ந்திருந்த மாணவி.

அவ்வப்போது ஜாடை மாடையாகப் பார்த்துக் கொண்டிருந்த பவித்ராவுக்கு விஷயம் சுமாராகப் புரிந்து

விட்டது. அவள் திவ்யா அருகில் வந்தாள். ''திவ்யா! உன் சுறுசுறுப்பெல்லாம் கோள் மூட்டுவதிலும் குறை சொல்வதிலும்தான் இருக்கு. இது எல்லாருக்கும் தெரிஞ்சதுதான். வகுப்பிலே இதெல்லாம் என்ன கூத்து? உன் சொந்த விருப்பு வெறுப்பை எல்லாம் வெளியிலே வச்சிக்கோ. கொஞ்ச நேரம் சும்மா யிரு,'' என்று சிடுசிடுத்து விட்டுப் போனாள் பவித்ரா.

''யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன?'' என்று வீம்பு காட்டி விட்டு ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்து ஏடுகளை வேக வேகமாகத் தள்ளிக் கொண்டிருந்தாள். அந்தப் புத்தகம் அப்போது தலைகீழாக இருந்தது.

''என்னடி அப்படி ஒரு கோபம்? தலை எது வால் எதுன்னு கூடத் தெரியல்லே போலிருக்கே!'' என்று அந்தப் புத்தகத்தைச் சரியாகத் திருப்பிக் கொடுத்தாள் ரம்யா.



அப்போது ஓர் ஆசிரியை உள்ளே வந்தார். அமர்ந்திருந்த மாணவிகள் அத்தனை பேரும் எழுந்து நின்றனர், மீனாவைத் தவிர. மீனா அப்போது தலையைக் கவிழ்த்துக் கொண்டு சாய்வு மேசையின் மீது சாய்ந்திருந்த தால், ஆசிரியை வந்ததை அவள் கவனிக்கவில்லை.

''அது யார் எழுந்திருக்காமல் இருப்பது?'' என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தார் ஆசிரியை.

அப்போதுதான் திடுக்கிட்டு எழுந்து நின்றாள் மீனா.

''யாரு... மீனாவா? என்ன கண்ணெல்லாம் சிவந்திருக்கு? உடம்பு சுகம் இல்லையா?'' என்று அருகே வந்து அவள் கழுத்தருகே கையை வைத்துப் பார்த்தார் ஆசிரியை.

''ஒன்றுமில்லை டீச்சர். மன்னிச்சிக்குங்க. நான் வேண்டுமென்றே எழுந்திருக்காமல் இல்லை. வந்து... மன்னிச்சிக்குங்க டீச்சர்... இனிமே இது மாதிரி தவறை...'' மீனாவின் கலங்கிய கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் வேகமாக உதிர்ந்தன.

''உன்னை எனக்குத் தெரியும் மீனா. உன் மேலே எனக்குக் கோபமும் இல்லை; வருத்தமும் இல்லை. இதுக்கு ஏன் அழறே? உட்கார்,'' என்று தன் இருக்கைக்குத் திரும்பினார் ஆசிரியை.


''டீச்சர்! அவள் அழறதுக்கு இந்த வாயாடி திவ்யாதான் காரணம்,'' என்று எழுந்து நின்று கூறினாள் வடிவழகி.

''அப்படியா? என்ன விஷயம்?'' என்று ஆசிரியை கேட்ட போது, பவித்ரா ஆசிரியையருகே வந்து ஏதோ மெதுவாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அதே நேரத்தில் வடிவழகி, ''மீனா பவித்ரா கூட அவள் காரிலே நேற்று போனாளாம். அதை வச்சி இந்தத் திவ்யா கிண்டலும் கேலியுமாப் பேசிக்கிட்டிருக்கா. மீனாவும் பவித்ராவும் பழகறதே திவ்யாவுக்குக் கொஞ்சமும் பிடிக்கலே போல,'' என்று சொன்னாள்.

மீனாவை ஆசிரியர் கவனித்தார். மீனா அப்போதும் தலையைக் கவிழ்த்துக்கொண்டுதான் இருந்தாள். திவ்யா தனக்குள் பேசிக் கொள்வதைப் போல், பக்கத்திலிருப்பவர்களைப் பார்த்து ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருப்பதையும் கவனித்தார் ஆசிரியை.

''இப்படியெல்லாம் உங்களுக்குள்ளே சச்சரவும் சஞ்சலமும் இருக்கக் கூடாதம்மா. படிக்கிற இந்தப் பருவம் மிகவும் இனிமையான பருவம். வாழ்க்கையிலே சுமையான எந்தப் பொறுப்பும் இல்லாமல், படிக்கிற சுவையான பொறுப்பு ஒன்று மட்டுமே முக்கியமா உள்ள பருவம் இது. இங்கே வளர்த்துக் கொள்ள வேண்டிய நல்ல குணங்கள் ஏராளமாயிருக்கு. அன்பு, ஒற்றுமை, சகோதரத்துவம், சமத்துவம், தன்னம்பிக்கை, விட்டுக் கொடுக்கும் தன்மை... இப்படி நிறைய இருக்கு. பாடங்களை விட இந்தப் பண்புகளைத்தானே பள்ளிகளில் அதிகமாகப் பயிற்றுகிறார்கள். பாட விஷயங்கள் புத்தகங்களிலே இருக்கு. புரியவில்லேன்னா நோட்ஸ்களும் இருக்கு. ஆனால் இந்த நல்ல குணங்கள் படிய, இந்த வகுப்புகளும், வழி நடத்திச் செல்ல ஆசிரியர்களும்



எப்போதும் உங்கள் கூடவே இருக்க முடியாது இல்லையா? இதைப் புரிந்து நடந்துக்கணும்,'' என்று பொரிந்து தள்ளினார் ஆசிரியர்.

சிறிது நேரத்தில் அந்த வகுப்பு ஒழுங்காக அணிவகுத்துச் சென்று கலை மண்டபத்தில் அமைதியாக அமர்ந்தது. மாவட்டக் கல்வி அதிகாரியைப் பாராட்டிப் பேசினார் தலைமை ஆசிரியை. தாம் பார்வை யிட்ட போது, பள்ளியில் பல வகுப்பு களில் மொத்தமாகக் கண்ட நிறை குறைகளையும், குறிப்பிட்டுச் சொல் லும்படியான அம்சங்களையும் பற்றிப் பேசி விட்டு, ஒரு பத்து நிமிஷம் அந்தப் பள்ளி மாணவியருக்குப் பய னுள்ள அறிவுரைகளை அளித்து விட்டு அமர்ந்து கொண்டார் கல்வி அதிகாரி.

''இப்போது இந்தப் பள்ளி மாண வியர் தலைவி பவித்ரா நன்றி கூறு வாள்,'' என்று தலைமை ஆசிரியை குறிப்பிட்டதும் பவித்ரா வரிசையி லிருந்து எழுந்து சென்றாள்.

அவள் மேடைக்கு ஏறும்போதே மாணவிகள், ஓர் இனிமையான பாட லுக்கு ஒழுங்காகத் தாளம் போடு வதைப் போல அழகாகக் கைதட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.




அந்த மாணவிக்கிருந்த வரவேற் பைக் கண்டு கல்வியதிகாரியே வியந்து போனார்.

''அன்புள்ள தலைமை ஆசிரியை அவர்களே! அறிவு சான்ற ஆசிரியப் பெருமக்களே! எங்கள் பள்ளிக்கு வருகை புரிந்து சிறப்பான முறையில் தணிக்கை செய்து, இப்போது எங்களுக்குச் சீரிய அறிவுரையும் நல்கிய மதிப்புமிக்க மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களே! என் நட்புக் குரிய மாணவிகளே! உங்கள் எல்லோருக்கும் என் பணிவான வணக்கங்கள் பல.

''நன்றியுரையைச் சுருக்கமாக முடிப்பதுதான் நாகரிகம். ஆனால் எனக்குக் கிடைத்துள்ள இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, நான் பேச்சாற்றலில் வல்லவள் என்று காட்டிக் கொள்ள விரும்பா மல், இங்குள்ள மாணவிகள் சார் பாக அவர்கள் தலைவி என்ற முறை யில் ஒருசில கோரிக்கைகளை அதி காரி அவர்களின் முன்னே பணி வோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

''எங்கள் பள்ளியில் ஆண்டு தோறும் புதிய புதிய நூல்களை நூலகத்துக்கென்று வாங்குகிறார்கள். நாங்கள் கட்டுகின்ற கட்டணத்தை வைத்து வாங்கப் பெற்ற அந்த நூல் கள் புது மெருகு கொஞ்சமும் குறை யாமல் பீரோக்களில் அழகாக அடுக்கி வைக்கப் பெற்றிருக்கின் றன. எங்கள் கரத்துக்கு அவை வருவதேயில்லை. காரணம் நூல் களை எங்களுக்குத் தரவும் பெறவும், தனியாக நூலகர் யாரும் இல்லை. அந்தப் பொறுப்பினை ஏற்றிருக்கும் ஆசிரியை அவர்களுக்கு, அதற்கென்று செலவழிக்க நேரமும் இல்லை. பொதுவாகச் சொல்லப்படுகின்ற குறை புத்தகங்களைக் கிழித்து விடு கிறார்கள்; தொலைத்து விடுகிறார் கள்; நூலகத்துக்கென்று தனியாக ஒருவர் இல்லை; வகுப்பு ஆசிரியை களுக்கு இதற்கெல்லாம் போதிய நேரமில்லை... இப்படிப் பல. உண்மை எதுவானாலும் பள்ளியில் எங்களுக்கு லைப்ரரி புத்தகம் படிக்



**எத்தனை எத்தனை பாரதிகள்!**

சென்னையை அடுத்த மறைமலை நகரில், குழந் தைகளை உயர்ந்த எண்ணமுடையவர்களாக்கக் கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பாடுபட்டுவரும் சிட்டுக்குருவி வானொலி சிறுவர் சங்கம் அண்மை யில் பாரதியின் 108 வது பிறந்த நாளைக் கொண்டா டியது. 108 குழந்தைகளுக்கும்மேல் பாரதி வேட மணிந்து மாறுவேடப் போட்டியில் கலந்து கொண்டது எல்லோரையும் பிரமிக்க வைத்தது. திருவாளர்கள் கூத்தபிரான், தேசபந்து, ஜெகநாதன், இராமசாமி, சுந்தர், ரவிக்குமார், குமார் ஆகியோர் பேசினர்.

கச் சுலபமாகக் கிடைத்து விடுவ தில்லை என்பதே உண்மை.

"அடுத்து, பள்ளியிலே எங்களுக் குச் சில சமயங்களில் நன்கொடைச் சீட்டுக்களை அச்சடித்துக் கொடுத்து விடுகிறார்கள். வசதியுள்ளவர்கள், பிள்ளைகளின் நச்சரிப்புத் தாங்க முடியாமல் அவர்கள் கட்டி விடு கிறார்கள். வசதியில்லாதவர்கள், வற்புறுத்தலின் காரணமாக, வீதி களிலே அலைந்து யாராவது அந்தச் சீட்டுகளை வாங்கிக் கொள்ள மாட் டார்களா என்று வேதனையோடு தேடித் திரிகிறார்கள்; படிக்கின்ற நேரம் கூட இதனால் பாழாகிறது. இது கல்வி கற்க வருகின்ற எங்களுக் குச் சுமையாக இருக்க முடியுமா, சுவையாக இருக்க முடியுமா?

"இன்னும் நிறையச் சொல்லலாம். ஆண்டுதோறும் வளர்ச்சியடைந்து வருகின்ற இந்தப் பள்ளியில் போது மான வகுப்பறைகள் இல்லை. கழிப் பிடங்கள் போதா. தண்ணீர்ப் பஞ்சம் எங்குமே உள்ளது என்றாலும் இங்கு கொஞ்சம் அதிகம். இவ்வளவு இருந்தும் எங்களுக்குள்ள ஆசிரியத் தெய்வங்களின் போதனையால் ஒவ் வோர் ஆண்டும் பள்ளியின் தேர்வு விழுக்காடு முன்னேறிக் கொண்டே யிருக்கிறது.

"நியாயமான இந்தக் கோரிக்கை களை நிச்சயமாக ஏற்று எங்கள் பள்ளியின் முன்னேற்றத்துக்கு மேலும் ஆவன செய்ய வேண்டு மென்று அதிகாரியவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக் கொண்டு அவருக்கு எங்கள் நன்றியை உரித் தாக்கி அ ம ர் கி றே ன். நன்றி வணக்கம்."

பவித்ரா முடித்ததும் முன்னை விடவும் கைதட்டல் அதிகமாகியது. ஆசிரியைகள் தங்களுக்குள் ஏதோ இரகசியமாகப் பேசிக் கொண்டார் கள். தலைமை ஆசிரியை பவித் ராவை வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். அதைக் கவனித்து விட்ட மாணவிகள் சிலர் குழப்பம் அடைந்தார்கள். அந்தப் பார்வையின் பொருள் என்னவோ?

(தொடரும்)




# இமயம் வென்ற கரிகாலன்

கதை: ஆனந்தி
படம்: விநு



மன்னர் சிரித்து...
புலவரே! உமக்கு ஏற்படும் சந்தேகம் மக்களுக்கும் ஏற்படலாம். விளக்கம் தரக் கடமைப் பட்டிருக்கிறேன்...
...என்னை மணந்து கொண்டு அரியணை ஏறும் பெண், அறிவில் சிறந்தவளாகவும் இந்த மண்ணைச் சேர்ந்தவளாகவும் இருக்க வேண்டும். தொழிலின் சிறப்பையும் எளிய மக்களின் நிறை குறைகளையும் அறிந்தவளாக இருக்க வேண்டும்......
...வெறும் அரண்மனை ஆடம்பரங்களை விரும்பி அதற்காக என்னை மணம்புரிந்து கொள்ள ஆசைப்படுகிறவளை சோழ நாட்டின் அரசியாக ஏற்க முடியாது...
ஆகா! இதுவல்லவா நாட்டுப்பற்று!
அழுந்தூர் வேள் மகளுக்கும் இளஞ்சேட் சென்னிக்கும் திருமணம்...
சோழ வம்சம் தழைக்கட்டும்!
சோழநாடு வளம் பெறட்டும்!
சிலகாலம் சென்று அமைச்சரவையில்...
அரசர் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது...
எப்பேர்ப்பட்ட வீரன்! நாட்டை ஆள ஒரு மகன் பிறக்காமல்...


சந்ததியின்றி மன்னர் இறந்தால் எதிரிகள் சோழநாட்டைச் சின்னாபின்னமாக்கி விடுவார்களே!
அரண்மனை மருத்துவர் என்ன சொல்கிறார்?
எவ்வளவு முயற்சி செய்தும் அரசரைக் காப்பாற்ற முடியும் என்று தோன்றவில்லை. ஆனால்...
ஆனால் என்ன?
ஒரு நம்பிக்கை அளிக்கும் விஷயம்.. அரசி கருவுற்றிருக்கிறார் என அறிகிறேன்!
ஆ! ஆண்மகவாகப் பிறந்தால் நல்லது!
அமைச்சர்கள் ஆலோசனை தொடர...
அரசியை முதலில் பாதுகாக்க வேண்டும். அவர் கருவுற்றிருப்பது யாருக்கும் தெரிய வேண்டாம். அவருக்குத் தீங்கு நேரக் கூடும்.
ஆம்! அரசியை அவர் சகோதரர் இருப்பிடத்துக்கு அனுப்பி விடுவோம்!
நாட்கள் சென்றன. அரசி, கருவூரில் தன் சகோதரர் இல்லத்தில் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள்...
சோழகுலக் கொழுந்தைக் காண இவன் அப்பா இல்லையே...
கவலைப்படாதே. ..ஆறுதல் நான்...


அரசியின் சகோதரர் இரும்பிடர்த் தலையார்...
...இவன் பிறக்குமுன்பே அரசனாகி விட்டவன். பெரும் புகழ் பெறுவான்... அறிஞனாகவும், வீரனாகவும் வளர்ப்போம்... ஆனால் இது வெளியே தெரிய வேண்டாம்....
சில ஆண்டுகளுக்கு மேல் ரகசியத்தைக் காப்பாற்ற முடியவில்லை... காவிரிப்பூம் பட்டினத்தில் அமைச்சர்கள் மந்திராலோசனை...
மன்னர் மகன் கருவூரில் வளர்ந்து வருகிறான்... தக்க பருவம் வந்ததும் முடிசூட்டி, செங்கோலை அவனிடம் தருவோம்...
இதை ஒட்டுக் கேட்ட ஒரு சேனாபதி...
சதி செய்தான் சேனாபதி...
இளவரசன் கருவூரில் வளர்கிறான்... அவனைத் தந்திரமாக அழைத்துச் சென்று....
இளஞ்சேட் சென்னி பிள்ளை-யில்லாமல் இறந்து போனான்... நாம் சோழ நாட்டைக் கைப்பற்றி ஆளலாம் என்று எண்ணியிருந்தேனே... ஆ! அதுதான் சரி.... யாரங்கே....
கருவூரில் இரும்பிடர்த் தலையார் தங்கையிடம்...
நான் அமைச்சர்களுடன் ஆலோசிக்கக் காவேரிப்பட்டிணம் போய் வருகிறேன்... கவனமாக இரு!
அம்மாவை நான் பார்த்துக் கொள்கிறேன், மாமா.



சில காலம் சென்று இரும்பிடர்தலையார் கருவூர் திரும்பியபோது...
ஐயோ அண்ணா! மோசம் போனேன். இன்று காலை நீராடச் சென்ற இளவரசனைக் காணவில்லை...!
ஆ!
திரும்ப வர நேரமானதால் எல்லா இடமும் சென்று தேடிப் பார்த்தேன்... பயனில்லை...
இது பகைவர் வேலைதான்... இளவரசன் இங்கு வளர்வது எப்படியோ பரவி விட்டது!
இளவலைத் தேடி இரும்பிடர்தலையார் நாலைந்து பேர்களுடன் காட்டு வழியே நடந்தார்... ஒரு விறகு வெட்டி...
அந்தப் பக்கம் சிலபேரைப் பார்த்தேனுங்க... அப்பவே சந்தேகப்பட்டேன்...
ஆ! புகை வாசனை...!
அந்தத் திக்கில் விரைந்தனர்....
அதோ ஒரு குடிசை!
பற்றி எரிகிறதே!
சீக்கிரம்!
குடிசையை நெருங்க...
அம்மா! மாமா!
ஆ! இளவரசன் குரல்தான்! கதவை உடையுங்கள்!




கதவு பிளந்து விழுந்தபோது...
செல்வனே! ஓடி வந்து விடு!
இதோ வருகிறேன், மாமா!
தமது சால்வையைச் சுற்றி நெருப்பை அணைத்தார் இரும்பிடர் தலையார்....
உடையில் தீப்பற்றியும் தீரத்துடன் நின்றாயே! நெருப்பை மிதித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தாயே! உன் வீரம் வளரட்டும்!
வீடு திரும்பி, வைத்தியம் நடந்தது...
பச்சிலை வைத்துக் கட்டியிருக்கிறேன். கால் கருகினாலும் அழுகிப்போகாது. குதிரையேறுவான்... தேர் செலுத்துவான்...
தாயும் மாமனும் விசாரித்தனர்...
என்னடா நடந்தது?
குளித்து விட்டு ஒரு கரும்பு வெட்டலாம் என்று போனேன். திடீரென்று மூன்று பேர்...
...என் மீது ஒரு கோணியைப் போட்டு, வாயைப் பொத்தி, குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டு போய் விட்டனர்... ஒரு குடிசையில் அடைத்துப் பூட்டினார்கள்... சற்று நேரத்தில் தீப்பிடித்துக் கொண்டது....


இளவரசனை மீட்கத் தம்முடன் வந்தவர்களை இரும்பிடர்த்தலையார் அழைத்து...
இளவரசனை நாம் காப்பாற்றி விட்டது வெளியே தெரிய வேண்டாம். மீண்டும் அவன் உயிருக்கு உலை வைக்கப் பார்ப்பார்கள்!
இளவரசனின் உயிரைக் காப்பதுதான் இப்போது முக்கியம். சிங்காதனம் ஏறுவது பற்றி பிறகு பார்க்கலாம்....
காவிரிப் பட்டினத்தில் அமைச்சரவை கூடி...
இளவரசரைப் பற்றி பலகாலமாகச் செய்தியில்லை... இரும்பிடர்தலை யாரும் வரவில்லை...
இளவரசர் இருந்த வீடு எரிந்து போய், அவர் இறந்து விட்டதாகக் கூடக் கேள்விப் படுகிறோம்...
அப்போது சதிகார தளபதி வந்து...
பாண்டியநாட்டு வீரர்கள் சோழ நாட்டின் எல்லைகளில் ஊடுருவி யிருக்கிறார்கள்! சேரநாட்டு ஒற்றர்கள் நாடெங்கிலும் சுற்றி வருகிறார்கள்....



...மன்னனில்லாத நாடு பிறருக்கு அடிமைப்பட வேண்டியதுதான்! உடனே ஓர் அரசனை நியமியுங்கள்...
யாரை நியமிப்பது? அதுதானே பிரச்னை!
ஏன், நானே இருக்கிறேனே? என் வீரத்துக்கு என்ன குறை? காலஞ்சென்ற மன்னருக்கு நான் ஒரு வகையில் உறவினனகூட...
அப்போது முதலமைச்சர்...
எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது... பட்டத்து யானையை அலங்கரித்து, தெய்வத் திருவருளை நம்பி, அதனிடம் மாலையைக் கொடுப்போம்!
அமைச்சரவை சம்மதிக்க அவ்வாறே செய்தனர்...
அரசரைத் தவிர வேறு யாரையும் சுமந்தறியாத நீயே, மன்னரைத் தேர்ந்தெடுத்து அழைத்து வா!
யானை வேகமாகச் சென்றது... அதற்கு வழியில் உபசாரம் நடந்தது....
இந்தா கரும்பு!
மாவீரனுக்கு மாலை போடு!



பட்டத்து யானை, கருவூருக்கு வந்து இளவரசன் வாழ்ந்த வீட்டின் வாசலில்...
ஆ! யானை நின்று விட்டது!
துதிக்கையில் மாலையை எடுத்து விட்டது!
வாசலில் அரவம் கேட்டு இளவல் வெளியே வர...
ஆகா! பட்டத்து யானை சோழ மன்னனைத் தேர்ந்தெடுத்து விட்டது!
அரசி, இரும்பிடர்த் தலையாரிடம்...
அண்ணா! குழந்தைக்கு ஆபத்து வராமலிருக்க வேண்டுமே?
கவலைப்படாதே! இது இறைவன் அருள்!
வழியெங்கும் மக்கள் ஆரவாரத்தினிடையே... காவிரிப்பூம்பட்டினம் நோக்கிச் சென்றது யானை...
கரிந்த காலுடையவனாமே நம் அரசன்?
ஆமாம்! கரிகால் சோழன் வாழ்க!
தலை நகரில் முடிசூட்டு விழா...
வெற்றி வேல்! வீர வேல்!


ஆட்சியைப் பிடிக்க எண்ணிய தளபதி ஏமாற்றமடைந்து... வேளிர் என்ற சிற்றரசர்களிடம்...
எங்கிருந்தோ வந்த சிறுவனை அரசனாக ஏற்கப் போகிறீர்களா?
வேளிர் இருவர்...
நாம் தனியே போரிடுவதைவிடச் சேர - பாண்டியர்களின் துணையையும் நாடுவது நல்லது...
அவ்விதமே திட்டம் நிறைவேற, கரிகாலனிடம் ஒற்றர் தலைவன்...
வேளிர்களுடன் சேரனும் பாண்டியனும் சேர்ந்திருக்கிறார்கள்... பெரும் படையுடன் வருகிறார்கள்....
கவலை வேண்டாம்! நானே முன்னின்று போர் நடத்துவேன்!
வெண்ணி என்ற இடத்தில் பெரிய யுத்தம் நடந்தது...
வீரவேல்! வெற்றிவேல்!



பாண்டிய மன்னன் வீர மரணம் அடைய, வெளிரி படை தோற்றுப் பின் வாங்கியது...
ஓடு! ஓடு!
சேரன் வீரத்துடன் போரிட்டான்... கரிகாலன் எய்த அம்பு...
ஆ! சேர மன்னனைக் காப்பாற்றுங்கள்!
யானைப் பாகன், யானையைத் திருப்பிக் கொண்டு போய் சேரனின் உயிர் காத்தான்...
அழுந்தூரில் வெற்றி விழா கொண்டாடினர் சோழ மக்கள்...
மாவீரர் கரிகாலர் வாழ்க!
சோழ சக்கரவர்த்தி வாழ்க!
அமைச்சரவை கூடியது....
படையெடுத்து வந்தவருக்குப் பாடம் கற்பித்தீர்கள்...
யாரும் படையெடுக்க இடம் கொடாமல் நாமே திக்விஜயம் செய்வோம்!


அவ்வாறே ஏந்பாடுகள் நடக்க... பெரும் படையுடன் வடக்கே சென்ற கரிகாலனை யாரும் எதிர்க்கவில்லை...
இமயமலைச் சாரலை அடைந்தான் கரிகாலன்...
நாம் வந்து வென்றதன் அடையாளமாக நமது புலிச் சின்னத்தை இந்த மலையில் பொறித்து வைப்போம்!
கரிகாலன் தென்னகம் திரும்பி வரும் வழியில் வச்சிர நாட்டு அரசன்...
இமயத்தை வென்றீராமே? என்னை வெற்றி கொள்ள முடியுமா?
போர் நடந்தது... தோல்வியுற்ற வச்சிர நாட்டரசன்...
தங்களுக்கு முத்துப் பந்தல் அமைத்துத்தர இசைகிறேன்...
மகத நாட்டரசனும் எதிர்த்தான்...
வெற்றிவேல்! வீரவேல்!
ஆ! ஐயோ!


தோல்வியுற்றார் மகத மன்னர்....
மாவீரரே! சோழத் தலை நகரில் புலவர் கூடி மகிழ ஒரு மண்டபம் கட்டித் தருகிறேன்...
அவந்தி நாட்டில் வரவேற்பு.....
கரிகாலரே! நமது நட்பின் அடையாளமாகக் காவிரிப் பட்டினத்துக்குத் தோரண வாயில் அமைக்கிறேன்...
மகிழ்ச்சி, அவந்தி மன்னரே!
கரிகாலன் சோழ நாடு திரும்பி, சில காலம் சென்றது....
காவிரி அடிக்கடி வெள்ளப் பெருக்கெடுத்து நாட்டைப் பாழ் படுத்துகிறது... இதன் கரையை உயர்த்தி, ஓரிடத்தில் அணை கட்டினால் நாடு செழிக்கும்...
குறுநில மன்னர்களுக்கு ஓலை அனுப்ப...
ருத்திரனைத் தவிர மற்ற அனைவரும் கரையெடுக்க ஒத்துழைப்பு தருவதாக மறு ஓலை அனுப்பியுள்ளார்கள்...
ருத்திரனின் ஓவியம் வரையச் செய்யுங்கள்.
சித்திரர்கள் தங்கள் தொழிலில் ஒரு கண் வரைந்து கொள்வது வழக்கம்...
ஓவியம் சிறப்பாக இருக்கிறது... ஒரு சிறிய மாற்றம் செய்கிறேன்...


ஓவியத்தைப் பெற்றுக் கொண்ட ருத்திரன் திடுக்கிட்டான்...
தூதனே! ஓவியத்தின் செய்தியைப் புரிந்து கொண்டேன்... காவிரிக் கரையைப் பலப்படுத்த ஒத்துழைக்கிறேன்.
காவிரிக் கரை பலப்படுத்தப் பட்டது; அணையும் கட்டப் பட்டது. (கல்லணையை இன்றும் காணலாம்)
இந்த அணை சோழ நாட்டைப் பொன் விளையும் பூமியாக்கும்.
ஒரு நாள் கரிகாலன் தனித்திருக்கும் போது இரும்பிடர் தலையார்...
இமயத்தில் புலிச் சின்னம் பொறித்தாய்; காவிரியையும் அடக்கினாய்... இனி நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும்...
ஆகட்டும் மாமா... இளவரசி வேண்டாம்! எளிய குடும்பத்தில் பிறந்த குணவதியாகப் பாருங்கள்.... அதுதான் என் தந்தை காட்டிய வழி.
சீர்காழிக்கு அருகில் நாங்கூரில் பெண்ணெடுத்தான் கரிகாலன்.
சோழ நாட்டில் பிறந்து, இந்த மண்ணையும் மக்களையும் நேசிப்பவளையே அரசியாக்க விரும்பினேன்...
அறங்கூறும் அவையில் (நீதிமன்றம்) ஒரு நாள் கரிகாலன்...
சாத்தனாரே! உங்கள் வழக்கைச் சொல்லுங்கள்...
பூதனாரிடம் சில காலம் முன் நிலம் வாங்கினேன். அதை உழுத போது புதையல் கிடைத்தது...


... நிலத்தைத் தான் நான் வாங்கினேன்; புதையல் அவருக்கே சொந்தம். அதனை அவர் பெற்றுக் கொள்ள வேண்டும்.
சாத்தனாருக்கு நான் நிலத்தை விற்ற போது, மண்ணை மட்டுமின்றி, அதில் விளைவன எல்லாவற்றையும் விற்று விட்டேன். புதையலும் அதில் அடக்கம். திரும்பப் பெற முடியாது!
கரிகாலன் யோசித்தான்...
உம்... விசித்திரமான வழக்குத்தான்... சரி... பூதனாரே, உமக்குக் குழந்தைகள் உண்டா?
திருமண வயதில் ஒரு பெண் இருக்கிறாள்...
சாத்தனாரே! உமக்கு மகன்கள் உண்டா?
மூன்றாவது மகனுக்கு மணமகள் தேடுகிறேன்.
நீங்கள் தேடும் மணமகள் கிடைத்து விட்டாள்! பூதனாரின் மகளைச் சாத்தனாரின் மகனுக்குத் திருமணம் செய்து வைத்துப் புதையலைக் கல்யாணப் பரிசாக மணமக்களுக்கு வழங்குமாறு தீர்ப்புக் கூறுகிறேன்!
புலவர்களை ஆதரித்தான் கரிகாலன்...
முடத்தாமக் கண்ணியாருக்குப் பொன்னரி மாலை சூட்டுவோம். சோழ நாட்டின் பெருமையைப் பாடியவருக்குப் பட்டாடையும் பொன்னும் பரிசளிப்போம்!



பட்டினப் பாலை என்ற நீண்ட நெடும் பாடலை உருத்திரங் கண்ணனார் அரங்கேற்றினார்...
ஆகா! காவிரிப்பூம் பட்டணத்தின் பெருமையைத் தமிழ்மொழி உள்ள அளவும் நிலை பெறச் செய்து விட்டீர்!
பட்டினப் பாலை பாடிய புலவருக்குப் பதினாறு லட்சம் பொன் பரிசளிக்கிறான்...
சோழ நாட்டில் பொன் விளை வதை இன்று நேரில் கண்டேன்!
மாவீரன், நீதிமான், புலவர்களை ஆதரிப்பவன், சோழ மண்ணை நேசிப்பவன் என்று பெரும் புகழ் பெற்றான் கரிகாலன்...
திருமாவளவன் வாழ்க!
கல்லணை எடுத்த கரிகாலன் வாழ்க!
இமயத்தில் புலி பொறித்த காளை வாழ்க!
ஆதாரம்:
கி. வா. ஜ.
எழுதிய "கரிகால் வளவன்"
என்ற நூல்.

# எத்தனை விலங்குகள் சொல்லுங்கள்!

படத்தை இரண்டு நிமிடம் நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். 'கோகுலத்தை' மூடிவிட்டு நீங்கள் பார்த்த விலங்குகளின் பெயரை எழுதிக் கொள்ளுங்கள்.

ஜோடிகளாக உள்ள விலங்குகளைத் தனியாக எழுதுங்கள்.

மொத்த எண்ணிக்கையில் பாதிக்குமேல் நீங்கள் எழுதியிருந்தால் 'பாஸ் மார்க்.'

- இதையெல்லாம் 5 நிமிடத்திற்குள் முடித்தால் மார்க் 100/100.
- 10 நிமிடத்திற்குள் என்றால் 50/100.
- 20 நிமிடத்திற்குள் என்றால் 25/100.



விடை: நாய், பன்றி, வாத்து, சிட்டு, தேரை, பெருச்சாளி, கரடி, ஆந்தை, குரங்கு, காக்கை, வண்டு, எலி, ஆமை, யானை, புலி, சிங்கம்.

ஜோடிகள் — நாய், எலி.

# இராட்சச வேட்டைக்காரன்

வெகு காலத்திற்கு முன் ஆர்தர் என்ற ராஜா கார்ன்லால் என்ற நாட்டை ஆண்டு வந்தார்.

அவர் காலத்தில் ஜாக் என்ற துணிச்சல் நிறைந்த சூட்டிகையான சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு வீரதீர சாகசக் கதைகள், ராட்சசர்களைப் பற்றிய பயங்கரமான கதைகள், தேவதைகளின் சாகசங்கள் போன்றவற்றைக் கேட்கக் கொள்ளை ஆசை.

ராஜாவின் அரண்மனையில் இந்த மாதிரிக் கதைகள் சொல்கிறவர்கள் நிறையப் பேர் வருவார்கள். அவர்கள் சொல்லும் கதைகளைக் கேட்பது ஜாக்குக்குப் பிடித்த பொழுது போக்கு.

அவர்கள் ஊரில் மைக்கேல் மலை என்று ஓர் உயரமான மலை இருந்தது. அதில் கோர்மோரன் என்ற ஒரு பெரிய ராட்சசன் வாழ்ந்து வந்தான். தினமும் உணவு வேட்டைக்காக ஊருக்குள் புகுவான் கோர்மோரன். ஓர் அரை டஜன் எருதுகள், மூன்று டஜன் ஆடுகளைக் கைப்பற்றிப் பெரிய கயிற்றில் கட்டி இழுத்துச் சென்று விடுவான். பல வருடங்களாக இது போலவே வேட்டையாடி வந்தான்.

கோர்மோரனைப் பற்றிக் கேள்விப் பட்ட ஜாக், எப்படியாவது அந்த அரக்கனை ஒழித்துவிட முடிவு செய்தான். அதற்காகப் பெரிய கடப்பாரை, கோடரி போன்ற படைக்கலங்களை எடுத்துக் கொண்டு மலை மீது பயணமானான்.

இராட்சசனின் குகையருகே ஜாக் இருபத்திரண்டு அடி ஆழமுள்ள ஒரு பெரிய பள்ளத்தைத் தோண்டினான். நிறைய இலை தழைகள் போட்டுப் பள்ளத்தை மூடினான். பிறகு, தன்னிடம் இருந்த பெரிய ஊதுகோலை எடுத்துப் பலம் கொண்ட மட்டும் ஊதினான். ஊதுகோல் சத்தம் கேட்ட இராட்சசனுக்குத் தூக்கம் கலைந்தது. ஆத்திரம் அடைந்த அவன், ''யாரடா என் தூக்கத்தைக் கெடுத்தவன்? இதோ கொன்று தின்று ஏப்பம் விட்டு விடுகிறேன் பார். எங்கேடா இருக்கிறாய்?'' என்று கத்திக் கொண்டே பாய்ந்து வெளியே வந்தான். அதோடு அந்த ராட்சசனின் கதை முடிந்தது!

இராட்சசன் மாண்டதை அறிந்த நண்பர்கள், மகிழ்ந்து ஒரு பெரிய கூரிய வாளையும் தோலினால் ஆன ஒரு பெரிய பெல்ட்டையும் வழங்கினர். பெல்ட்டில் இவன் காரேனிஷ் ஊர் வீரன். மலை போன்ற இராட்சசனை ஒழித்த 'மாவீரன்' என்று தங்க எழுத்துக்களில் பொறித்திருந்தது.

கோர்மோரனைக் கொன்றவனாம்
எங்கள் ஜாக்!
கொடுமைகளை அழித்திடுவான் எங்கள்
ஜாக்!

என்று நண்பர்கள் ஆடிப் பாடினார்கள். ஜாக்கின் பெருமை எங்கும் பரவியது.

ஜாக்கின் புகழைக் கேள்விப்பட்ட பிளன்டர்போர் என்ற மற்றொரு இராட்சசன் ஜாக்கை எப்படியாவது அடிமையாக்கிக் கொள்ள வேண்டும் என்று கறுவிக் கொண்டு இருந்தான்.

பிளன்டர்போருக்கு அழகான

மூலம்: ஓல்டு சாப்புக்



# ஜாக்

பெரிய மாளிகை இருந்தது. காட்டின் நடுவே இருந்த அதில்தான் பிளன்டர் போர் வாழ்ந்து வந்தான். ஒருநாள் ஜாக் இராட்சசனின் மாளிகையைத் தாண்டிப் போக வேண்டியிருந்தது. அவனுக்கு மிகவும் களைப்பாக இருக்கவே, அப்படியே கல்லின் மீது உட்கார்ந்து அசதியால் தூங்கி விட்டான். தற்செயலாக மாளிகையை விட்டு வெளியில் வந்த இராட்சசன் ஜாக்கைப் பார்த்து விட்டான். ஜாக்கை அப்படியே அலக்காகத் தூக்கி வந்து தன் மாளிகையில் ஒரு தனி அறையில் பூட்டி விட்டான். அந்தப் பெரிய அறையில் மனித எலும்புகளும் மண்டை ஓடுகளும் குவிந்திருந்தன.

ஜாக்கை அடைத்ததும், இராட்சசன் பிளன்டர்போர் தன் இன்னொரு சகோதரனை அழைத்து வரச் சென்றான். ஜாக்கைக் கூறு போட்டுத் தன் அண்ணனோடு சேர்ந்து தின்ன அவனுக்கு ஆசை.

இராட்சசன் நகர்ந்ததும் மயக்கம் தீர்ந்து விழித்துக் கொண்ட ஜாக் சுற்றும் முற்றும் கவனித்தான். பிளன்டர்போரும் அவனது அண்ணனும் தன்னை நோக்கி வருவதைப் பார்த்ததும் அவனுக்கு உடம்பெல்லாம் வெடவெடவென்று ஆடியது.

பிறகு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தன்னிடமிருந்த பெரிய கயிற்றை எடுத்தான். இரண்டு இராட்சசத் தலைகள் உள்ளே நுழையும் அளவுக்குக் கயிற்றில் சுருக்குப் போட்டுக் கொண்டான். கதவின் கம்பி வழியாகக் கயிற்றை விட்டான். இராட்சசர்களின் தலைகள் பக்குவமாய்ச் சுருக்கு வளையத்தில் சிக்கிக் கொள்ளும்படி வைத்து விசுக்கென்று இழுத்தான். இராட்சதர்களின் கதை அதோடு முடிந்தது!

ஜாக் தான் மேற்கொண்ட பயணத்தைத் தொடர்ந்தான்.

**வ**ழியில் ஓர் அழகான மாளிகை போன்ற வீட்டைக் கண்டான் ஜாக். அதன் அருகே போய்க் கதவைத் தட்டினான். அது ராட்சசன் ஒருவனுடைய மாளிகை. கதவைத் திறந்தவன் ஒரு இராட்சசன்தான்! ஆனால் அவன் பார்ப்பதற்கு நல்லவனாகத் தெரிந்தான்.

ஜாக் தான் ஒரு வழிப்போக்கன் என்றும் வழி தவறி வந்து விட்டதாகவும் சொன்னான். அந்த அரக்கன் அன்புடன் அவனை வரவேற்று, வீட்டின் உள்ளே அழைத்துச் சென்றான். அங்கு இளைப்பாறச் சொல்லி உபசரித்தான்.

நல்ல விருந்து கொடுத்து ஓர் அழகான படுக்கை அறையில் அவனை ஓய்வெடுக்கச் செய்தான். ஜாக் தன் உடைகளைக் களைந்து விட்டுக் கட்டிலில் ஏறிப் படுத்தான். படுத்தவனுக்குத் தூக்கம் வரவில்லை. புரண்டு கொண்டே இருந்தான். அடுத்த அறையில்தான் இராட்சசன்

தமிழில் : எஸ். சித்ரா

இருந்தான். அவன் உற்சாகமாய் ஏதோ பாடிக் கொண்டிருந்தான். என்ன பாட்டு அது? உற்றுக் கேட்டான்.

"இன்று இரவைப் பார்த்துக் கோடா
சின்னவா!
எனது குண்டாந் தடியால் உன்னைப்
பின்னவா?
இருட்டு ஒடி விடிந்து வரேன் தின்னவா?

பாட்டைக் கேட்ட ஜாக்கிற்கு அதிர்ச்சியான அதிர்ச்சி. அப்போதுதான் இராட்சசனின் தந்திரம் புரிந்தது.

இந்த ஆபத்திலிருந்து தப்பிக்க என்ன செய்யலாம்? உடனே ஒரு யோசனை தோன்றியது. தான் படுத்திருந்த கட்டிலில் பெரிய கட்டையைப் போட்டு மூடினான். அது பார்ப்பதற்கு அவன் படுத்திருப்பது போலவே இருந்தது.

இராட்சசன் கையில் குண்டாந் தடியோடு அவனை அடித்துக் கொல்ல உள்ளே நுழைந்தான். இருட்டாய் இருந்ததால் ஜாக் அங்கு ஒளிந்து கொண்டிருப்பது அவனுக்குத் தெரியவில்லை. ஜாக்தான் கட்டிலில் தூங்குகிறான் என்று நினைத்த அரக்கன் அந்தக் கட்டையைப் போட்டுக் குண்டாந்தடியால் ஓங்கி ஓங்கி அடித்தான்.

ஒழிந்தான் ஜாக் என்று எக்காளமிட்டுக் காலை உணவுக்குத் தீனியானான் என்று சந்தோஷத்தோடு வெளியே வந்தான் இராட்சசன்.




அடுத்த நாள் காலை விடிந்தது. ஜாக், தான் போய் வருவதாகச் சொல்லிக் கொண்டு இராட்சசன் முன் போய் நின்றான்.

இராட்சசனுக்கோ ஆச்சரியம் தாங்கவில்லை. 'அடி அடியென்று தடியால் அடித்துக் கொன்று போட்டோமே நேற்று! இன்று நம் முன்னே எந்தச் சேதமும் இல்லாமல் நிற்கிறானே! என்ன அதிசயம்!' என்று நினைத்துக் குழம்பித் தவித்தான்.

தன் திகைப்பை வெளிக்காட்டாமல் சமாளித்துக் கொண்டு, "ஓ என் நண்பனே, வா வா. நேற்று நன்றாகத் தூங்கினாயா? எதுவும் தொல்லை தரக்கூடிய விஷயம் நடந்ததா?" என்று கேட்டான் ஜாக்கிடம்.

"எனக்கு நல்ல தூக்கம். திடீரென்று ஏதோ எலி ஒன்று தன் வாலால் என்னைப் போட்டு அடித்தது போல் இருந்தது. அதைப் பற்றி நான் லட்சியம் செய்யாமல் நன்றாகத் தூங்கி விட்டேன். காலையில் கண் விழித்ததும் உங்களிடம் நன்றி கூறி விட்டுக் கிளம்பலாம் என்று வந்தேன்."

இராட்சசனுக்கு அதிசயம் இன்னும் அதிகமாகியது. 'குண்டாந்தடி அடி, பையனுக்கு எலி வால் அடிப் போல இருக்கிறதா? அவ்வளவு



பலசாலியா இவன்! இவனைக் கடைசி வரை பார்த்து விட வேண்டும்' என்று மனதுக்குள் முடிவு செய்து கொண்டான்.

"என்னுடன் காலை உணவு சாப்பிட்டு விட்டுப் புறப்படலாமே தம்பி," என்று மேலுக்கு அழைத்து உபசரித்தான்.

ஜாக் சரியென்று சொன்னான்.

காலை உணவு வந்தது. பெரிய பெரிய பாத்திரங்களில் நிறைய ரொட்டியும் பாலும் வந்தது.

ஜாக் தன் காலரில் பெரிய ஓட்டை போட்டு வைத்திருந்தான்.

இராட்சசன் கொஞ்சம் அசந்திருக்கும் நேரம் பார்த்து எல்லா ரொட்டியையும் காலருக்குள் போட்டுத் தள்ளி மூடினான்.

பிறகு இராட்சசனைப் பார்த்து, "நான் ஒரு வேடிக்கை காட்டுகிறேன். உன்னால் அது போல் செய்ய முடியுமா? கத்தியை எடுத்து என் கழுத்தை அறுத்துக் கொள்வேன். பிறகு தானாகக் காயம் நிமிடத்தில் ஆறி விடும், பார்க்கிறாயா?" என்று கத்தியை எடுத்துக் கழுத்திலிருக்கும் ரொட்டியை அறுத்தான். பிறகு கழுத்து அப்படியே இருப்பதைக் காட்டினான்.

அதைக் கண்டதும் இராட்சசனுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. சின்னப் பையன் இது போல வித்தை செய்வதா? நாம் என்ன அவ்வளவு மட்டமா? ஆஹாஹா! என்று ஆங்காரப்பட்டு, தன்னுடைய கத்தியை எடுத்தான். ஜாக்கைப் பார்த்து, "இதோ நானும் கத்தியால் குத்திக் கொண்டு உயிரோடு இருப்பேன் பார்," என்று குத்திக் கொண்டு மாய்ந்தான்.

வெற்றிகரமாக இப்படி மூன்று இராட்சசர்களையும் ஒழித்துக் கட்டிய ஜாக் வீரநடை போட்டான்.

ஊருக்குத் திரும்பி வந்து, தனக்கென்று ஒரு குதிரை, புத்தி சொல்லும் ஒரு தொப்பி, ஒரு கூர்மையான கத்தி, பறக்க வைக்கும் காலணி, மறையச் செய்யும் கோட்டு எல்லாம் திரட்டிக் கொண்டான். அவற்றைக் கொண்டு பெரிய பெரிய சாகசங்களைச் செய்யத் தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

பெரிய மலை ஒன்றைக் கடந்து போய், மூன்று நாட்கள் பயணத்திற்குப் பிறகு ஓர் அடர்ந்த பெரிய காட்டை அடைந்தான்.

காட்டை அடைந்ததும் ஆசுவாசப் படுத்திக் கொள்ள ஒரு மரத்தினருகே வந்தான். அங்கே ஒரு பிரும்மாண்ட அரக்கனைப் பார்த்தான். அவன் ஓர் அழகான பெண்ணையும், ஒரு வீரனையும் தலைமுடியைப் பிடித்துத் தரதர

வென்று இழுத்துக் கொண்டுச் சென்றான். இருவரையும் காப்பாற்ற வேண்டுமென்று உடனே தன்னுடைய மறையச் செய்யும் கோட்டை மாட்டிக் கொண்டு மறைந்தான். கையில் கூர்மையான கத்தியோடு இராட்சசனை நெருங்கினான், பின்புறமாகப் போய் ஓங்கிக் குத்தினான்.

கத்தி மட்டுமே தன் மேல் பாய்வதாய் நினைத்து இராட்சசன் திகைத்துப் போனான். அவன் திகைப்படங்கு முன் அவனைக் கத்தியால் குத்திக் கிழித்துச் சாகடித்தான் ஜாக்!

ஜாக்கினால் காப்பாற்றப்பட்ட இருவரும் வீரனிடம், ''ஜாக், எங்கள் உயிரைக் காத்த உத்தமரே! எங்கள் வீட்டிற்கு வர வேண்டும்,'' என்று அழைத்தார்கள்.


ஜாக், ''எனக்கு இன்னும் நிறைய வேலை பாக்கியிருக்கிறது. உங்களை விடுவித்தது போலவே இன்னும் மற்றவர்களையும் கோர இராட்சசர்களிடமிருந்து காக்க வேண்டும். அதற்காகத்தான் நான் இந்தப் பயணத்தையே மேற்கொண்டேன். நான் அவசியம் இன்னொரு சந்தர்ப்பத்தில் வருகிறேன், இப்பொழுது எனக்கு விடைகொடுங்கள்,'' என்று புறப்பட்டான்.

குதிரை மேலே ஏறிப் போய்க் கொண்டேயிருந்த ஜாக், மலையடிவாரத்தில் இருந்த ஒரு பெரிய வீட்டைத் தட்டினான். கதவைத் திறந்து வரவேற்றவன் ஒரு கிழவன். பார்க்க சாமியார் போல் இருந்தான்.

சாமியார்க் கிழவன் ஜாக்கின் பயண அனுபவத்தையும் அவன் குறிக்கோளையும் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

பிறகு அவனைப் பார்த்து, ''தம்பி ஜாக், நீ நல்ல காரியத்தில்தான் இறங்கியிருக்கிறாய். இங்கு நீ வந்ததும் நல்லதாயிற்று. உன் குறிக்கோளுக்கு இங்கே நிறைய வேலையிருக்கிறது. இந்த மலையின் உச்சியில் ஓர் அகோர அரக்கன் இருக்கிறான். அவன் பெயர் காலிக்கொண்டான். மாய மந்திரம் அறிந்த இராட்சசன். அவன் இந்த ஊரின் இளவரசியை மானாக மாற்றிச் சிறைபிடித்து வைத்திருக்கிறான். நீதான் அவனைக் கொன்று, இளவரசியை மீட்க வேண்டும். என்ன, செய்வாயா?'' என்று கேட்டார்.

ஜாக் அடுத்த நாள் காலையில் முயற்சிப்பதாக வாக்குக் கொடுத்



தான்.

காலை மலை மீது ஏறி அரக்கனின் மாளிகையை அடைந்தான். வாசலில் போய் நின்று மாயக் கோட்டை அணிந்து கொண்டான். யாருக்கும் கண்ணில் படாமல் கதவருகே போனான். மாளிகைக் கதவின் மேல் ஊதுகொம்பு — தங்கத்தால் செய்யப்பட்டது தொங்கவிடப் பட்டிருந்தது. அதன் கீழே ஏதோ எழுதப்பட்டிருந்தது. ஜாக் படித்தான்.

***அவசரமாய்க் கொம்பெடுத்து***
***ஊதுங்கள்!***
***அரக்கனுயிர் பறக்குமதைப் பாருங்கள்!'***

ஜாக் ஊது கொம்பை எடுத்து பலம் கொண்ட மட்டும் ஊதினான்.

சத்தம் கேட்டுத் தரை அதிர ஓடி வந்த அரக்கன் கதவைப் பரக்கத் திறந்தான். அந்த மாளிகையே அதிர்ச்சியால் கிடுகிடுவென்று நடுங்கியது.

இராட்சசன் தனக்கு முடிவு நெருங்கி விட்டதை உணர்ந்தான். பயத்தால் உடம்பு வெடவெட வென்று நடுங்கியது.

"யார் ஊதினார்கள்? எங்கிருக்கிறார்கள்?" பயத்தால் உரக்கக் கூவினான்.

ஜாக்தான் மாயக் கோட்டு அணிந்து யார் கண்ணுக்கும் தெரியாமல் இருக்கிறானே! தன் கூரிய வாளால் அந்த இராட்சசனைக் குத்திக் கிழித்தான்.

மாய அரக்கன் ஒழிந்தான். அவன் மந்திர சக்தியால் மானாக மாறிய இளவரசி சுயரூபம் பெற்றாள். அவளைப் போலவே அங்கிருந்த மற்றவர்களும் சுயரூபம் அடைந்து விடுதலை பெற்றனர்.


அகோர அரக்கனின் முடிவு அனைவருக்கும் விடிவு!


ஜாக்கை எல்லோரும் சேர்ந்து பாராட்டினார்கள். அன்றிரவு அனைவரும் சாமியார் தாத்தாவின் மாளிகையில் விருந்தினராகத் தங்கினார்கள். நன்றாக ஓய்வெடுத்து அடுத்த நாள் பயணப்பட்டார்கள்.

ஜாக்கின புகழ் அந்த ஊர் முழுக்கப் பரவியது. மாவீரன் ஜாக்தான் எல்லோரையும் விடுவித்தான் என்று கோஷமிட்டு மகிழ்ந்தார்கள்.


ராஜாவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. மகளை விடுவித்த ஜாக்கிற்கே அவளைத் திருமணம் செய்து கொடுத்தார்.

ஜாக் இளவரசியை மணந்து அந்த நாட்டிலேயே அவனுக்காகக் கொடுக்கப்பட்டிருந்த மாளிகையில் சந்தோஷமாகப் பல காலம் வாழ்ந்தான்.




காத்திருந்த நேரம்
BUS STOP
என்னடா இவ்வளவு நேரமாகியும் பஸ்ஸைக் காணோம் ஸ்கூலுக்கு டயமாச்சே
பேசாமல் நடையைக் கட்டிடலாமா..?
சின்ன சி
இருடா வர்றேன்!
சின்ன சின்ன மோட்டார் பெரிய பெரிய மோட்டார் நாலு சக்கர மோட்டார் வேட்டாய் வர மோட்டார்!
வாடா போகலாம்
சூப்பர்டா
மாலா—

# கரடியை விரட்டிய கடிகாரம்!




அவமானம்! அவமானம்!! நாந்தாவின் வீரச் சின்னத்தை இப்படி அவமானப் படுத்தி விட்டாளே திமிர் பிடித்த இளவரசி! என்ன செய்வது? உம் யாரங்கே?!.. அந்தக் கடிகாரக் கருடியாரை உடனே போய் அழைத்து வாருங்கள். போங்கள்!
உத்தரவு மகாராஜா
வணக்கம் மகாராஜா. அழைத்தீர்களாமே?
உடனே நாந்தாவின் கடிகாரத்தை ரிப்பேர் பண்ணி கொடுக்கணும்
மன்னிக்கணும் மகாராஜா! இனிமேல் அதில் ரிப்பேர் செய்ய எதுவுமே இல்லை போன நூற்றாண்டு கடிகாரம் அது!
அதெல்லாம் எனக்குத் தெரியாது! இரண்டு நாளில் அது ஓடலை, உன் தலை உருண்டு ஓடி விடும்
தவணை தாருங்க மகாராஜா
உத்தரவு
தவணை தாரேன் கடிகாரத்தை எடுத்துக் கொண்டுபோ!
ரிப்பேர் செய்ய முடியாத அளவுக்குக் கடிகாரம் இருக்க வேறு வழியில்லாது உயிர் தப்ப கருடியார் குடும்பத்துடன் காட்டை விட்டே வெளியேற எண்ணிக் கிளம்பினார்!


மூட்டை முடிச்சுடன் கிளம்பிச் செல்லும் தாடியாரை அவரது நண்பர் குரங்கு பார்த்து விடுகிறது
என்ன நண்பரே மூட்டை முடிச்சோடு எங்கேயோ பயணம், என்னிடம் சொல்லவே இல்லையே?
தாடி நண்பனிடம் விவரத்தைக் கூறியது
தாடியாரே கூடாரத்திலும் என்ன கோளாறு!?
சாவி கொடுத்தா வாங்குற ஸ்பிரிங் இப்போ எங்கும் கிடைப்பதில்லை அதுமட்டும் இருந்தா கூடாரம் சரியா ஆகும்
சாவிக்குப் பதில் பேட்டரில ஓடற மாதிரி மாத்திப் பாருங்களேன் நான் வேணா பேட்டரி தரேன்


மகாராஜா இனிமே, இது சரியா ஓடும், மணியடிக்கும்!
டாண் டாண்
டாண் டாண்
டாண்
டாண்
டாண்
அட தாத்தா காலத்துக் கடிகாரம் நேரம் சரியாக் காட்டுதே! மணி கூடச் சரியா அடிக்குதே!
இந்தப் பாட்டு பிரமாதம், நல்லாப் பாடுங்க! எனக்கு ரொம்ப ரொம்பப் பெருமையா இருக்கு!!!



# அசுவகோஷருக்கு அமைதி கிட்டுமா?

மன்னர் தேவசேனன் அந்த இளைஞனை அவநம்பிக்கையோடு நோக்கினார்.

அரசரின் மன ஓட்டத்தை அறிந்து கொண்டவர் போல் அமைச்சர், ''அரசே, தோற்றத்தைப் பார்த்து எடை போடாதீர்கள். இவன் பறவை, விலங்குகளின் மொழியை நன்கு அறிந்தவன். அவைகளோடு பேசவும் வல்லவன். சொந்தப் பெயர் மதுர வாக்யன். உலகத்தில் உள்ள எல்லா ஜீவராசிகளின் மொழியையும் அறிந்தவன் என்பதால் மக்கள் இவனை 'ஜீவ பாஷா ஞிரேயன்' என்று அழைக்கிறார்கள்'' என்று கிசுகிசுத்தார்.

அதற்கு மேல் அரசர் தயங்கவில்லை.

'மதுரவாக்யரே, அரசியார் பூஜை செய்யும் பசு பத்து நாட்களாகத் தீனி எடுப்பதில்லை. அடிக்கடி தீனமாகக் கத்துகிறது. அரண்மனை வைத்தியர்கள் அதற்கு உடம்புக்கு ஒன்றுமில்லை என்கிறார்கள். நாங்கள் மன அமைதி இன்றித் தவிக்கிறோம். உங்களால் ஏதாவது உதவ முடியுமா?'' என்று கேட்டார்.

அமைச்சர் பின்தொடர அரசர் மதுரவாக்யரை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு நடந்தார். மாட்டுக் கொட்டிலை நெருங்கும்போதே பசுவின் தீனமான குரல் கேட்டது. இளைஞன் அங்கேயே நின்று பசுவின் குரலைக் கூர்ந்து பலமுறை கேட்டான். அரசரை நோக்கினான்.

''இது மிகவும் உயர்ந்த ஜாதிப் பசு. இதற்குச் சில நாட்களாக மயானத்தில் வளர்ந்த புல்லைத் தீவனமாகக் கொடுக்கிறார்களாம். அதன் வாடை தனக்கும் பிடிக்கவில்லை என்பதோடு தன்னுடைய பாலிலும் வாடை வருவதால் கன்றும் கூடத் தன்னிடம் பால் குடிப்பதில்லை என்று பசு முறையிடுகிறது. அதற்கு என்ன பதிலளிக்க விரும்புகிறீர்கள் அரசே?''

பசுவை நேரில் கூடப் பார்க்காது அதன் குரலை கேட்டே குறையை அறிந்து கொண்டு விட்ட அந்த அதிசய இளைஞனை அரசர் இப்பொழுது பணிவு கலந்த அச்சத்துடன் நோக்கினார்.

''இனி நானே கவனித்து நல்ல சுத்தமான இடத்தில் வளர்ந்த புல்லையே தீனியாகக் கொடுப்பதாகப் பசுவுக்கு உறுதி கூறுங்கள் மதுர வாக்யரே!''

இளைஞன் அருகில் இருந்த பூவரச மரத்தில் ஏறி அதன் பம்பரக் காய் ஒன்றைப் பறித்து வாயில் போட்டுக் கொண்டு கைகளைக் குவித்துக் குரல் எழுப்பினான். உடனே இளைஞனின் தொண்டையிலிருந்து பசுவின் குரல் கேட்டது! கொட்டிலில் இருந்து பசுவின் பதில் குரல் கேட்டது. ஏற்றம், இறக்கம், நீளம், குறுக்கம் என்று பல ஒலிகள்! மதுரவாக்யன் பசுவின் மொழியில் கொட்டிலில் இருக்கும் பசுவோடு பேசி முடித்துக் கொட்டையைத் துப்பி விட்டு அரசரை வணங்

ஹாரிஸ்

னான்.

இன்று முதல், அரண்மனையில் உள்ள பசு, எருது, யானை, ஒட்டகம், குதிரை ஆகியவைகளை மேற்பார்வையிடும் பொறுப்பு உங்களுடையது. அதோடு உங்களுக்குப் பரிசாக இந்த முத்து மாலையையும் அளிக்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள்," என்று மாலையை நீட்டினார் அரசர்.

இளைஞன் பின்னடைந்து அரசரை வணங்கினான்.

"மன்னியுங்கள் அரசே, சொந்த இலாபம் தேட, இந்த வித்தையைப் பயன்படுத்துவதில்லை என்று என் ஆசானுக்குச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன். நான் இப்பொழுது அரண்மனைப் பொக்கிஷத்தைக் காவல் காக்கும் பணியில் இருக்கிறேன். இதில் கிடைக்கும் சம்பளம் எனக்கும் என் தாய்க்கும் போதுமானது. என்னை வசதி மிக்கவனாக்கிக் கொள்ள விரும்பவில்லை. மன்னியுங்கள் அரசே!"

விலை மிக்க முத்து மாலையையும் நல்ல செல்வாக்கு மிக்க பதவியையும் மறுத்துச் செல்லும் அந்த அதிசயப் பிறவியைப் பார்த்து மலைத்துப் போய் நின்றார் அரசர் தேவசேனர்.

நாட்கள் ஓடின. ஒருநாள் இரவு. அந்த நட்ட நடு நிசியில் மதுரவாக்யரின் குடிசைக் கதவைத் தட்டினர் அரசரும் அமைச்சரும்.

"மதுரவாக்யரே, நம் நகருக்குப் பெரிய ஆபத்து வந்துள்ளது. பகையரசன் பெரிய படையோடு எதிர்க் கரையில் வந்து தங்கியிருக்கிறான். கங்கையில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. அது சற்றுக் குறைந்ததும் தாக்குவதாகத் திட்டம்."

"பாடலிபுரத்தின் வலிமை அதன் குதிரைப் படைதான். மூன்று மாதங்களுக்கு முன்புதான் கொள்ளை நோய் வந்த போது நமது குதிரைகளில் பாதிக்கு மேல் இறந்து விட்டன. மிஞ்சியுள்ளவை எலும்பும் தோலுமாக இளைத்துக் கிடக்கின்றன. புதிதாகக் குதிரைகளை அனுப்புமாறு பாரசீகத்திற்குத் தகவல் அனுப்பியிருக்கிறோம். அவை வந்து விட்டால் விரோதியை ஒரு கை பார்க்கலாம். ஆனால், அதற்குள்



இப்படி ஒரு நிலை...."

அரசரும் அமைச்சரும் மாறி மாறிக் கூறியதை மதுரவாக்யர் கவனமாகக் கேட்டார்.

"நான் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுங்கள்"

"உங்களுடைய அற்புதமான வித்தையைக் கொண்டு நமது முகாமில் பல நூறு குதிரைகள் இருப்பது போன்ற ஒரு பிரமையை விரோதிக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்."

"கண்டிப்பாகச் செய்கிறேன் அரசே," என்று அமைதியாகக் கூறிய மதுரவாக்யர் "நம்மிடம் உள்ள குதிரைகளைத் தயார் செய்து களி மண்ணைக் குழைத்து அவற்றின் முதுகில் பூசி நான் வரும் வரை காய விடாது நீர் தெளித்து வைக்க ஏற்பாடு செய்யுங்கள். அதோடு எனக்கு நூறு பூவரச இலைகள், மலர்கள், தாமரைத் தண்டுகள், ஒரு மரச் சட்டம் தேவை" என்றார்.

பூவரசு இலைகளால் ஊதல் தயாரிக்கப்பட்டு மலர்களில் சொருகப் பட்டு, காம்புகளுக்குக் கீழே தாமரைத் தண்டோடு பொருத்தப்பட்டன. மலர்களில் நீர் விடப்பட்டது. தண்டின் நுனிகள் ஒன்றாகத் திரட்டப் பட்டு, சட்டத்தோடு பொருத்தப்பட்டன. மதுரவாக்யர் அவற்றைக் கொண்டு குதிரையாகக் கனைக்கத் தயாரானார்!



களிமண் பூசப்பட்ட குதிரைகள் களிமண் காயக் காய உடலின் மேலுள்ள உரோமத்தை இழுக்க இழுக்க ஒன்றாகச் சேர்ந்து கனைக்கத் தொடங்கின. மதுரவாக்யர் எழுப்பிய கனைப்பொலி, உண்மைக் குதிரைகள் எழுப்பிய கனைப்பொலியோடு சேர்ந்து நூற்றுக்கணக்கான குதிரைகள் ஒன்று திரண்டு குரலெழுப்புவதைப் போன்ற ஒரு பிரமையைத் தோற்றுவித்தது!

பாடலிபுரத்தில் குதிரைப் படை இல்லை என்ற துணிவில் படையெடுத்து வந்திருந்த விரோதி அரசன் திக்பிரமையடைந்து இரவோடு இரவாகத் தன் படைகளைத் திருப்பிக் கொண்டு தன் நாட்டுக்குத் திரும்ப உத்தரவிட்டான்.

அரச சபை கூடியிருந்தது. காவலாளிக் கோலத்தில் இருந்த மதுரவாக்யரைக் கட்டாயப்படுத்தி அமைச்சர் அழைத்து வந்தார். அவரைக் கண்டதும் அரியணையிலிருந்து இறங்கி வந்து வரவேற்ற அரசர், 'பாடலிபுரம் பிழைத்தது உங்களால் தான். இல்லாத குதிரைகளுக்காக இப்படி நீங்கள் ஒரு அசுவகோஷத்தை எழுப்பிக் காட்டவில்லை என்றால், இந்த நகரத்தின் தலைவிதியே மாறியிருக்கும். இனி நீங்கள் சாதாரண மதுரவாக்யரோ இல்லை ஜீவ பாஷா சிரயரோ அல்ல. இனி நீங்கள் அசுவகோஷர். நீங்கள் எதைக் கேட்டாலும் தரத் தயாராக இருக்கிறேன். கேட்டு வாங்கிக் கொண்டு எங்களைப் பெருமைப்படுத்துங்கள்." என்று வேண்டிக் கொண்டார்.

''நீங்கள், நான் எதைக் கேட்டாலும் அனுமதிப்பீர்களா?''

''கண்டிப்பாக அசுவகோஷரே. கேளுங்கள்...?''


''நான் புத்தசன்யாசியாக விரும்புகிறேன். ஏற்கெனவே துறவு மனப்பான்மை உள்ளவன் நான். என் தாயும் இரண்டு மாதங்களுக்கு முன்பு காலமாகி விட்டாள். அரண்மனைப் பணியிலிருந்து என்னை விலக்கிக் கொள்ள அனுமதியுங்கள் அரசே.''

''என்னை ஏமாற்றி விட்டீர்களே அசுவகோஷரே...'' என்று விம்மினார் அரசர்.

காத்திருந்த பெருமைகளையெல்லாம் துரும்பாக மதித்து உதறி விட்டு அசுவகோஷர் துறவியாகி பாரத நாட்டின் வரலாற்றில் அழியாத இடம் பெற்றார். நாலாந்தா பல்கலைக் கழகத்தின் ஐந்து பஞ்ச மணிச் செல்வங்களில் அவர் இரண்டாவது இடத்தைப் பெற்றார். இருப்பினும் அவரிடம் இருந்த விலை மதிப்பில்லா வித்தையே அவரது மன அமைதியைக் குலைக்கும் பகைவனாக இருந்தது. அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள மன்னர்கள் நடத்திய போர், மாண்ட மக்கள் தொகை அவரை விரக்தி கொள்ள வைத்தது. தனது வித்தையைப் பற்றி அவர் எழுதிய குறிப்புக்கள் கொண்ட 'ஜீவ பாஷா சூத்ரம்' என்ற அரிய நூலை அவர் தானே தன் கையால் அழித்தார். மன அமைதியை நாடி மாறுவேடமணிந்து பிறர் அறியா வண்ணம் சீன நாட்டுக்குச் சென்றார். அங்கேயாவது அவருக்கு மன அமைதி கிடைத்ததோ என்னவோ தெரியவில்லை.

இன்றும் அரிதாக மக்களிடையே காணப்படும் 'கௌளி சாஸ்த்ரம்', கருட சாஸ்த்ரம் என்ற அரிய வித்தைகளெல்லாம் அவரது 'ஜீவ பாஷா சூத்ரத்தின் அழியாத சில பகுதிகளே!

# பிருந்தாவனக்



## தாமரை

சின்னக் குழந்தைகள் வாருங்கள்
சிறிய குளத்தைப் பாருங்கள்
வண்ண வண்ணத் தாமரைகள்
வியப்பீர் எல்லாம் என்மக்கள்!

செந்தமிழ்ச் செல்வி கலைவாணி
சிறப்பாய் இருப்பது என்மேனி
செல்வம் அளிக்கும் ஸ்ரீதேவி
சிரித்து அமர்வது என்மேனி.

பைந்தமிழ்ப் புலவர் பாட்டினிலே
பாவையர் முகமாய் நானிருப்பேன்.
வள்ளல் கரங்களை ஒப்பிடவே
வண்ணத் தாமரை நானிருப்பேன்.

நீருள் கிடக்கும் தண்டைப்போல்
நீங்களும் அன்பில் மூழ்குங்கள்.
நீரை விலக்கும் இலைபோல
நீங்களும் தீமையை விலக்குங்கள்!

— சீர்காழி ஆர். சுமதி.

## உருகி மழையைத் தந்திடாய்!

நீல நிற வானத்தில்
மேகக் கூட்டம் இல்லையே!
மேகக் கூட்டம் இன்மையால்
மண்ணில் மழை இல்லையே!

எங்கு மண்ணில் தோண்டினும்,
ஏனோ தண்ணீர் இல்லையே!
பொங்கி ஓடும் நதியிலும்,
பொட்டு நீரும் இல்லையே.

ஆடு மாடு கோழியும்
அல்லல் பட்டுத் துடிப்பதால்
ஓடி வந்து மேகமே
உருகி மழையைத் தந்திடாய்!

— டி. ஆர். பார்த்தசாரதி,
சென்னை — 78.

## சின்னக் கண்ணா





சின்னக் கண்ணா
சிரிப்பைக் காண
சித்தம் துடிக்கிறேன்!

கன்னம் தொட்டு
கிள்ளிக் கொஞ்ச
குழந்தை துடிக்கிறேன்!

புல்லாங் குழலின்
பாட்டைக் கேட்க
பாலன் ஏங்குறேன்!


மயில் இறகை
மெதுவாய்த் தொடவே
மனசு ஏங்குறேன்!

சலங்கை குலுங்கும் .
சத்தம் கேட்கச்
சிறுவன் ஏங்குறேன்!

— இரா. இரகுபதி, திருச்சி — 17.

# கவியரங்கம்

## வட்ட வட்ட அம்புலி



வட்ட வட்ட அம்புலி
  வானம் தன்னில் அம்புலி;
எட்ட மிக எட்டவே
  எங்கோ இருக்கும் அம்புலி.



சுட்ட அப்பளம் போலவே
  தோன்றுகின்ற அம்புலி;
பட்டு நீலப் பரப்பிலே
  பவனி வரும் அம்புலி.

நல்ல நல்ல அம்புலி;
  நகர்ந்து செல்லும் அம்புலி;
கொல்லை யிலே பூத்தாலும்
  கொய்ய வரா அம்புலி.

சொல்ல மிக இனித்திடும்;
  சொக்கத் தங்க அம்புலி;
செல்லச் செல்ல நாளுமே
  தேய்ந்து வளரும் அம்புலி.

ஈச னாரின் தலையிலே;
  இருக்கும் பிறை அம்புலி;
வாசம் கமழும் பூக்களே
  வருக என்னும் அம்புலி.

தேச தேசம் யாவையும்
  சென்று காணும் அம்புலி;
தூக தும்பு இன்றியே
  துலங்கும் புது அம்புலி.

— இளம்பாரி, விழுப்புரம்.

## இணையுண்டோ!



பத்து மாதம் சுமந்தனள்;
சுமந்து என்னை ஈன்றனள்;
ஈன்று என்னை வளர்த்தனள்;
வளர்த்துக் கல்வி கொடுத்தனள்;
கொடுத்துப் பண்பை ஊட்டினள்;
ஊட்டி என்னை உயர்த்தினள்;
உயர்த்தி உள்ளத்தில் மகிழ்ந்தனள்;
மகிழ்ந்து என்னை வாழ்த்தினள்;
வாழ்த்தி என்னுள் நிறைந்தனள்;
நிறைந்த அன்னை அன்பினுக்கு
நீங்கள் சொல்வீர் இணையுண்டோ?

— வில்லி ராமதுரை,
கோயில்பட்டி.

## கல்வி கற்றிடுவேன்

— புவனை கலைச்செழியன்

கல்வியைக் கற்றிடுவேன் — அறிவுச்
செல்வமும் பெற்றிடுவேன்.

தூங்கிடாமல் கற்றிடுவேன்
  தூய தமிழைக் கற்றிடுவேன்.
ஆங்கில பாடம் கற்றிடுவேன்;
  அறிவியல் நூலைக் கற்றிடுவேன்.


கல்வியைக் கற்றிடுவேன் — அறிவுச்
செல்வமும் பெற்றிடுவேன்.

கருத்துடன் கணக்கைக் கற்றிடுவேன்.
  சரித்திரம், நிலநூல் கற்றிடுவேன்.
உடலின் கல்வியைக் கற்றிடுவேன்.
  திடமும் நலமும் பெற்றிடுவேன்.

கல்வியைக் கற்றிடுவேன் — அறிவுச்
செல்வமும் பெற்றிடுவேன்.

பாடல் பாடக் கற்றிடுவேன்.
  பல கதை புனையக் கற்றிடுவேன்.
மேடையில் பேசக் கற்றிடுவேன்.
  மேவிய புகழைப் பெற்றிடுவேன்.

கல்வியைக் கற்றிடுவேன் — அறிவுச்
செல்வமும் பெற்றிடுவேன்.





# எங்கப்பா பொல்லாதவர்

அப்பாவை எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனால், அவருக்குத்தான் என்னைப் பிடிக்காது; என் பேச்சுப் பிடிக்காது; என் விளையாட்டுப் பிடிக்காது. .... ஏன் என் அப்பா மட்டும் என்னைப் பிடிக்காமல் நடந்துக்கிறார்?

பரீட்சை ரிசல்ட் வந்த சமயம். வகுப்பில் ஒரு மார்க் வித்தியாசத்தில் முதல் ராங்க்கை நழுவ விட்டதைத் தெரிவிக்கப் போனபோது அப்பாவின் கோபம் உச்சாணிக்கிளையில்!

''ஏண்டா! துரைக்குப் படிக்கப் பிடிக்கலியோ? வாடா! வரதனோட மாட்டுத் தொழுவத்தில், வரட்டி தட்டற வேலை காலியாம். நாளை முதல் சேர்த்து விடறேன். உனக்கு ஏத்த எளிதான வேலை!''

''அப்பா! ஒரே ஒரு மார்க்கில் தான் தோற்றுவிட்டேன்.... கிட்டத்தட்ட நானும் முதல் ராங்க்தான்,'' என்று சொல்லணும் போல இருந்தது. அப்பாவின் கோபத்தைப் பார்த்ததும் பொசுக்கென்று நாக்கு உலர்ந்து போனது. பேச முடியவில்லை.

பள்ளிக்கூட டீமுக்கு நான் நான் கேப்டன். இன்னொரு பள்ளிக்கூடத்துடன் ஒரு மாட்ச் இருந்தது.

''ஆமாம்! பெரிய சுனில் காவஸ்கர்! புஸ்தகத்தைப் பார்த்து ஒழுங்காப் படிக்கற வழியப்பாரு, மட்டையைத் தூக்கினியோ, அந்த மட்டையாலயே மடேர்னு போட்டுடுவேன்,'' என்று அப்பா 'ஆசீர்வாதம்' கொடுத்தார்.

அம்மா முந்தானையில் ஒளிந்து கொண்டு கொஞ்சம் போராட்டம் நடத்தியபின், ''சரி ஒழி! சொல்றதைச் சொல்லிட்டேன். எக்கேடு கெட்டுப்போ,'' என்று பேப்பரை விட்

100



டெறிந்து விட்டு இடம் பெயர்ந்தார் அப்பா.

அந்த மாட்ச்சில் எங்கள் டீம்தான் ஜெயித்தது. ''அப்பா! நாங்க வின் பண்ணினோம்கிறதுக்காக டிராஃபி கெடச்சிருக்குப்பா.''

'ம்.....,' என்ற உறுமலைத் தவிர என் அப்பா பாராட்டாகவோ, மகிழ்ச்சியாகவோ ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை!

''அப்பா என்.சி.சி. கேம்ப் போகணும். குடியரசு தின பரேட் டில்லியில். எங்க பட்டாலியன்லயே நானும் இன்னொரு பையனும்தான் செலக்ஷன் ஆகியிருக்கோம்.''

ஆர்வம் வார்த்தைகளை அடைக்க, மகிழ்ச்சி கண்களைத் துளைத்துக் கொண்டு வெளியில் வந்து திளைக்க, அப்பாவின் சொரூபத்தைக் கண்டதும் எல்லாம் 'கப்சிப்' ஆயின.

''பள்ளிக்கூடம் எத்தனை நாள் லீவு?''

''பத்து நாள்.''

''ஐயாவுக்குக் கேம்ப் எத்தனை நாளு?''

''ஒரு மாதம்... அப்புறம் 'பேனர்' வின் பண்ணினா இன்னும் பத்துப் பதினைஞ்சு நாள் ஆகலாம்,'' என்று

**என். சந்திரசேகரன்**

தயங்கினேன்.

''ஏற்கெனவே ஜெனரல் ஐயா ரெண்டாம் ரேங்கிலேயே ஒட்டிக்கிட்டு இருக்கீங்க. ஐயா ஒண்ணரை மாசம் டூர்ல இருந்தீங்கன்னா என்னாகும்? போடா போ! உருப்படாத வேலைன்னா முதல்ல நிப்பான்,'' என்று மெஷின்கன் ஆனார் அப்பா.

அம்மாவைக் கெஞ்சிக் கூத்தாடி, நானும் குடியரசுதின பரேடுக்குப் போய் விட்டு, பேனருடன் திரும்பினதெல்லாம் நெடுங் கதை.

அன்று இரவு வீட்டுக்குள் நுழையும் போது வெளியிலேயே எச்சரிக்கையாக இரைச்சல் சத்தம் கேட்டது.

''யாரைக் கேட்டுட்டுப் போனான்? படிப்பு என்ன பாழாய்ப் போகுதா? வெட்டிப்பயல்,'' என்றார் அப்பா.

''ஆமாம்! நீங்க எதைக் கேட்டாலும் உடனே அம்பியை உதாசீனப் படுத்தறீங்க. அவன் என்ன தப்புக் காரியமா பண்றான்?'' என்று வரிந்து கட்டிக் கொண்டு அம்மா அப்பா



விடம் எனக்காகப் பரிந்து, பொரிந்து கொண்டிருந்தாள்.

விஷயம் இதுதான்: பள்ளிக் கூடத்திலிருந்து இரண்டு பேரைத் தொலைக் காட்சி நிலையத்தில் வினா விடை நிகழ்ச்சிக்காக அனுப்பச் சொல்லியிருந்தார்கள். என்னையும் சுரேஷையும் பள்ளிக்கூடத்தில் அனுப்பி வைத்தார்கள். இதை அப்பாவிடம் சொல்லவில்லை.

நிகழ்ச்சி ஒளிபரப்பான அன்று அப்பா அதைப் பார்த்து, (நான் முதல் பரிசு பெறுவதையும் சேர்த்துத்தான்) ஒரே ரணகளம்தான்!

அப்பாவின் 'கேள்வி — பதில்' நிகழ்ச்சி முடிந்த பின் நிதானமாக வீட்டில் நுழைந்தேன்.

என்னதான் இருந்தாலும் எனக்கு இந்த அப்பாவின் போக்கு என்னவென்றே புரியாத புதிராக இருந்தது. மனசிலும் சின்ன நெருடல் — சாக்சுக்குள் புகுந்த கல் போன்று. அப்பா என் உயர்வைக் கண்டு பொறாமைப்படுகிறாரோ?

ஒருமுறையாவது ம ன தா ரப் பாராட்டக் கூட வேண்டாம். சொட்டை சொல்லி மனதைப் புண் படுத்தாமலாவது இருக்க மாட்டாரா?

அப்பாவின் நண்பர் லாரன்ஸ், டெல்லியில் மத்திய அரசில் பெரிய பதவியிலிருந்தார். அவர் சென்னை வருவதாக ஏற்பாடாகியிருந்தது.


பெரிய பொறுப்பில் இருப்பவர் என்று பார்த்ததுமே தெரிந்தது. என்னை அவருக்கு ரொம்பவும் பிடித்தது. நான் விரும்பிய இடங்களுக்கெல்லாம் அழைத்துக் கொண்டு போனார். குறிப்பறிந்து நான் விரும்பியவற்றை வாங்கிக் கொடுத்துத் திகைக்கச் செய்தார்.

லாரன்ஸ் ஊர் கிளம்புவதற்கு முந்தின நாள் அப்பாவும் அவரும் பேசிக் கொண்டிருந்தனர். நான் அரைத் தூக்கத்திலிருந்தேன்.

"ஆமாம், உன் பையனைப் பற்றி நீ என்னதான் எணணிக் கொண்டிருக்கிறாய்? எதையுமே நீ கண்டுக்காம ஒதுங்கியே இருக்கியே?" என்று கேட்டார் லாரன்ஸ்.

"அவன் ஒரு வைரம் லாரன்ஸ் தனித்தும் ஒளிவிடுவான். தங்கக் குவியலிலும் ஒளிவிடுவான்," என்றார் அப்பா.

இடையே அங்கே வந்த அம்மா, "ஆமாம்! பையனை நேரிலே கண்டா கரிச்சுக் கொட்டறீங்க. இப்ப சினேகிதர் கேட்டதும் அவனைத் தங்கம், வைரம் அப்படி இப்படின்னு ஒரேயடியாப் புகழறீங்க. அவன் எப்படி மனமுடைந்து போகிறான் தெரியுமா?" என்றாள் அப்பாவிடம்.



"நீ என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. என் மகனை எனக்கு நன்றாகத் தெரியும் — உன்னை விட. ஒரு சின்ன வெற்றியைப் பெற்றுக் கொண்டு வாழ்நாள் பூரா அதையே நினைத்துக் கொண்டு பெருமைப்படற அம்பி, வேண்டாம். வெற்றிமேல் வெற்றி பெற்று, அதை விடப் பெரிய வெற்றியைத் தேடிப் போற அம்பிதான் எனக்கு வேணும்," என்றார் அப்பா.

எனக்கு ஒரே திகைப்பாக இருந்தது.

"அதுக்காக ஏன் அவனை இன்சல்ட் செய்யணும்?"


"அது இன்சல்ட் இல்லை அம்மா," என்று தொடங்கிய லாரன்ஸ், "எப்போதும் பையனை அவனுக்கு எதிரிலேயே, ரொம்பவும் புகழ்ந்து கொஞ்சினால், மேல் வெற்றிக்கு ஆசைப்படமாட்டான். ஆனால், அவனுக்கு நேராக ரொம்பவும் சுவாரஸ்யமில்லாமல் காண்பித்தால் மேன்மேலும் புதிய வெற்றிகளை நோக்கி அவனுடைய கவனம் திரும்பும். இது குழந்தைகள் சைக்காலஜி," என்றார்.

"அதுமட்டுமில்லை, குழந்தை, விளையாட்டிலோ, என்.சி.சி.யிலோ சேர்ந்து படிப்பைக் கோட்டை விடக்கூடாதல்லவா? அதனால்தான் அவ்வப்போது அம்பியிடம் நான் படிப்பு விஷயத்தையும் நினைவு படுத்துகிறேன். அவன் இரண்டிலும் நன்றாகத்தானே செய்கிறான்?" என்று நிறுத்தினார் அப்பா.

"அப்போ அவன் ஆல்ரவுண்ட் வெற்றிக்கு மறைமுகமாக நீங்கள் தான் காரணமா?" என்று அம்மா பலமாக ஜோக் அடித்தாள்.

எல்லாரும் சிரித்தார்கள். எனக்கு மனசு இலேசானது. பொல்லாத அப்பா, புதிரான அப்பா, இப்போது எனக்குப் புதியதாய்த் தோன்றினார். என் வளர்ச்சியைப் பார்த்துத் தனக்குள்ளேயே பெருமைப் பட்டுக் கொண்டு என் நல்லனையும் காப்பாற்றும் அப்பா சொக்கத்தங்கம். என் தலையணை கண்ணீரால் நனைந்தது. மனம் மகிழ்ச்சியில் சிறகடித்துப் பறந்தது.

## நீங்களும் வரையலாம்



சொல்லித் தருவது: ராமு ஓவியர் பள்ளி

கடலூர் பொன்னுராஜ்

# பிருந்தாவனம்



பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த கோபு கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி 9.20. அம்மா சொன்னதை நினைத்துக் கொண்டான்.

''கோபு, நீ முதன் முதலா இண்டர்வியூக்குப் போற, சீக்கிரம் கிளம்புடா.''

''போம்மா, இதோ பக்கத்துல பத்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் அலுவலகத்திற்கு எதுக்காகச் சீக்கிரம் போகணும்? நம்ம ஊரிலிருந்து நிமிஷத்துக்கு ஒரு பஸ் போகுமே!'' என்று அம்மாவுக்குப் பதில் சொன்னதும் நினைவுக்கு வந்தது.

கடிகாரத்தின் நிமிஷ முள் நகர்ந்து கொண்டிருந்ததே ஒழிய பஸ் வருவதாகக் காணோம்.

கோபு கடந்த வருடம்தான் பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தான். மேற்கொண்டு படிப்பைத் தொடர அவனது குடும்பப் பொருளாதாரம் இடம்கொடுக்கவில்லை. குடும்பத்தைக் காப்பாற்ற வேலை தேடத் தொடங்கினான். ஒரு தனியார் கம்பெனியிலிருந்து வேலைக்கு 'இண்டர்வியூ' வந்திருந்தது. அங்கு போவதற்குத்தான் பஸ்ஸை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்.

மணி 9.35. பஸ் வருவதாகக் காணோம். கோபு தான் கொண்டு வந்திருந்த சான்றிதழ்களைப் புரட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுதுதான் மதிப்பெண் சான்றிதழை வீட்டில் வைத்து வந்து விட்டோம் என்பதை அறிந்தான். அவனுக்குப் 'பகீர்' என்று இருந்தது. உடனே வில்லிலிருந்து விடுபட்ட அம்பைப் போலப் பாய்ந்தோடி வீட்டிற்குச் சென்றான்.

''ஏண்டா இப்படி மூச்சிறைக்க ஓடி வருகிறாய்?''

''அம்மா, மதிப்பெண் பட்டியலை விட்டு விட்டுப் போயிட்டேம்மா.''

''நான் அப்போதே கேட்டேனே, எல்லாவற்றையும் ஒழுங்காக எடுத்து வைத்துக் கொண்டாயான்னு...''

''சும்மா தொண தொணக்காதேம்மா! பஸ் வரும் நேரமாச்சு. சரியாகப் பத்து மணிக்கு அலுவலகத்தில் இருக்கணும்'' என்று மதிப்பெண் பட்டியலை எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாகப் பஸ் நிறுத்தத்திற்கு வந்த போது மணி 9.40ஐ நெருங்கிக் கொண்டிருந்தது. பஸ் ஏதும் வரும் வழியாக இல்லை. சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தவர்கள் பேசினது கோபுவின் காதில் விழுந்தது.

''சாலை ஓரத்தில் இருந்த பெரிய ஆலமரம் சாய்ந்து விட்டது. இன்னும் ஒரு மணி நேரம் வரை பஸ் வராது.''

கோபுவுக்கு பஸ் வராததற்குரிய காரணம் அப்போதுதான் புரிந்தது. என்ன செய்வதென்றே அவனுக்குத் தெரியவில்லை. இனிமேல் அந்த 'இண்டர்வியூ' நடக்கிற அலுவலகத்திற்கு நடந்து செல்வதானால் குறைந்தது அரை மணி நேரமாவது வேண்டும். அதற்குள் 'இண்டர்வியூ' நேரம் முடிந்து விடும். அங்கே போவதை விட வீடு செல்வதே மேல் என்று நினைத்தான். சோர்ந்த முகத்துடன் திரும்பி வந்தான்.

வாட்டமுற்ற மகனின் முகத்தைப் பார்த்த அம்மா, ''கோபு, இண்டர்வியூல ஏதாவது கஷ்டமான கேள்வி கேட்டாங்களா?'' என்று கேட்டாள்.

''போம்மா, நான் இன்னும் இண்டர்வியூ நடக்கிற இடத்திற்குக் கூடப் போகவில்லை.''

''என்னடா ஆச்சு உனக்கு?'' என்று கோபத்துடன் கேட்டாள் அந்தத் தாய்.

கோபு, பஸ் வராததற்குரிய காரணத்தைச் சொன்னான்.

''கோபு, நான் புறப்படச் சொன்ன

# கதையரங்கம்



நேரத்திற்கே நீ கிளம்பியிருந்தால் இந்நேரம் நடந்தே சென்றிருக்கலாம். எங்கேடா என் பேச்சைக் கேட்கிறே?''

''அம்மா, என்னை மன்னிச்சிடு,'' என்று தழுதழுத்த குரலில் கூறினான் கோபு.

''இதோ பாருடா கோபு, பொன்னை விட உயர்ந்தது காலம். அந்தக் காலம் யாருக்காகவும் நிற்காது. நாம்தான் அதன் வழியில் நடக்கணும். வாழ்க்கையில் எந்தச் செல்வத்தை இழந்தாலும் மீண்டும் பெற்று விடலாம். ஆனால் இழந்த காலத்தை மீண்டும் பெற முடியாது. காலத்தை அலட்சியம் படுத்துபவனைக் காலம் தானும் அலட்சியம் செய்து விடும். இது மட்டும் உறுதி.''

''அம்மா, இனிமேல் காலத்தை அலட்சியப்படுத்த மாட்டேன்,'' என்று உறுதியான குரலில் கூறினான் கோபு.

அப்போது தற்செயலாக அங்கு வந்தார் கோபுவின் மாமா. நடந்ததைக் கேட்டதும் கோபுவைத் தனது மிதிவண்டியில் ஏற்றிக் கொண்டு 'இண்டர்வியூ' நடக்கிற இடத்திற்கு விரைந்தார்.

— ஆறு. அண்ணாதுரை,
பாஞ்சலிங்கபுரம்.

## மைபுட்டி மன்னிக்குமா?

முருகனுக்குத் தியாகராஜர் காலனியில் வீடு. தினமும் சைக்கிளில் இரண்டு கிலோ மீட்டர் போய் டவுனில் உள்ள பள்ளியில் படித்து வருகிறான்.

அன்று முருகன் டவுனில் நோட்டுப் புத்தகம் விற்கும் கடையில் மைப்பாட்டில் ஒன்று வாங்கினான். வீட்டிற்கு வந்து பேனாவில் ஊற்றி எழுதிப் பார்த்தான். சரியாக எழுதவில்லை. மிகவும் பழைய மைப் பாட்டிலைக் கொடுத்துக் கடைக்காரர் ஏமாற்றி விட்டார்! நாளைக்குத் திரும்பக் கொண்டு போய்க் கொடுத்தால் அந்தக் கடைக்காரர் வாங்கிக் கொள்வாரா? குழம்பியவாறு இருந்தான்.

திடீரென்று கெட்ட யோசனை ஒன்று அவனுக்கு உதயமானது. இந்தப் பாட்டிலை இங்கேயே காலனியில் இருக்கும் கடையில் கொடுத்து, 'நேற்று இங்கு வாங்கியது,' தான் என்று சொல்லிப் பார்த்தால் என்ன?

சைக்கிளை எடுத்தான். காலனி கடை நோக்கி விரைந்தான். கடைக்காரரிடம் மைப் பாட்டிலைக் கொடுத்தான். ''நேற்று இங்குதான் வாங்கினேன். மை நல்லா இல்லை; வேறு கொடுங்கள்,'' என்றான்.

கடைக்காரரும் அவன் சொன்னதை நம்பி வேறு நல்ல பாட்டிலை அவனிடம் கொடுத்தார்.

முருகன், மைப்பாட்டிலை வாங்கிக் கொண்டு சைக்கிளில் பறந்தான். பரீட்சையில் பாஸ் செய்து விட்டது போன்ற மகிழ்ச்சியில் சைக்கிளை வேகமாக அழுத்தினான். திருப்பத்தில் வந்து கொண்டிருந்த ரிக்ஷாவை அவன் கவனிக்கவில்லை. கண்ணிமைக்கும் நேரத்தில் அந்தச் சம்பவம் நடந்தது. ஆம், வந்த ரிக்ஷா மீது மோத கையில் இருந்த பாட்டில் ரோட்டில் விழுந்து சிதறியது. முருகனுக்கும் கால் கைகளில் லேசான சிராய்ப்புகள். 'ஏமாற்றியதற்கு நல்ல தண்டனை,' என்று எண்ணிக் கொண்டான்.

— பொன் திருவரங்கன், தூத்துக்குடி.

## முல்லாவும் முழுச்சமாதியும்!

தனது கடைசிக் காலத்தைப் பற்றி முல்லாவுக்கு ஒரு யோசனை! தான் இறந்த பிறகு உடலை அடக்கம் செய்வதற்கான ஓர்



அழகான சமாதியை முன்னதாகக் கட்டி வைத்து விட வேண்டும் என்பதுதான் அது!

ஊரில் மிகச் சிறந்த கொத்தனாரை அழைத்து, "கொத்தனாரே, நான் மறைந்த பிறகு எனது உடலை அடக்கம் செய்வதற்காக ஓர் அழகான சமாதியைக் கட்டி வைத்து விட வேண்டும் என எண்ணியுள்ளேன். ஆகவே, நீர் ஒரு அழகிய சமாதியை அமைத்துத் தர வேண்டும்," என்று முல்லா கேட்டுக் கொண்டார்.

"முல்லா அவர்களே, தங்கள் விருப்பம் போல் சமாதியை நான் சிறப்பாகவே அமைப்பேன். உங்களுக்குச் சந்தேகமாக இருந்தால் முன்னதாக எனக்குக் கூலி தர வேண்டாம். சமாதி முழுமை அடைந்த பிறகு கூலி கொடுத்தால் போதும்," என்று கொத்தனார் கூறினார்.

"மிகவும் மகிழ்ச்சி, வேலையே உடனே ஆரம்பித்து விடுங்கள். நீங்கள் சொன்னது போல சமாதி முழுமை அடைந்த உடனேயே உங்கள் கூலிக்கு ஏற்பாடு செய்து விடு கிறேன்," என்று முல்லா வாக்குறுதி அளித்தார்.

மறுநாளே கொத்தனார் தமது வேலையைத் தொடங்க, மிகக் குறுகிய காலத்திலேயே சமாதியை மிகவும் நேர்த்தியாகக் கட்டி முடித்து விட்டு முல்லாவை அழைத்து வந்து சமாதியைக் காண்பித்தார்.

"சமாதி மிகவும் நன்றாகவே அமைந்திருக்கிறது," என்று முல்லா பாராட்டி விட்டு, "இனி நீங்கள் சென்று வரலாம்," என்றார்.

திடுக்கிட்ட கொத்தனார், "முல்லா அவர்களே! எனக்குரிய கூலியை இன்னும் தாங்கள் கொடுக்கவில்லையே!" என்றார்.

"அதெப்படி கூலியைக் கொடுக்க முடியும்? சமாதிதான் இன்னும் முழுமையடையவில்லையே!" என்றார் முல்லா.

"சமாதியைத்தான் நான் கட்டி முடித்து விட்டேனே. இது முழுமையாகி விட்டதாகத் தானே அர்த்தம்?" என்றார் கொத்தனார்.

"கொத்தனாரே, நீர் விஷயம் விளங்காமல் பேசுகிறீர். இந்தச் சமாதி முழுமை அடைவது என்றால் என்ன பொருள்? நான் இறந்த பிறகு என்னுடைய உடல் இந்த சமாதிக்குள் அடக்கம் செய்யப்பட்டால்தான் இந்தச் சமாதி முழுமை அடைந்து விட்டதாகப் பொருள். நீர் கேட்டுக் கொண்ட மாதிரி சமாதி முழுமையடைந்த பிறகு உமக்குச் சேர வேண்டிய கூலியை வாங்கிச் செல்லும்," என்று அமைதியாகக் கூறினார் முல்லா!

— எஸ். ஹரிமா ஸயிதியா, திருச்சி.

# என் ஆடு பேசுமே!

**வே**லை வெட்டி இல்லாமல் சுப்பன் ஊர் சுற்றிக் கொண்டிருந்தான். திடீரென்று அவனது ஊரில் ஒரு சர்க்கஸ் கம்பெனி வந்து டேரா போட்டது.

சுப்பனுக்கு உடனே ஓர் எண்ணம் தோன்றியது. தனது ஆட்டுக் குட்டியை அழைத்துக் கொண்டு அந்தச் சர்க்கஸ் கம்பெனிக்கு ஓடினான்.

சர்க்கஸ் முதலாளியைப் பார்த்து, "சார், என் ஆடு நல்லா பேசும் சார். தயவு செய்து எனக்கும் என் ஆட்டுக்கும் இங்கேயே வேலை போட்டுக் கொடுங்க சார்!" என்றான் சுப்பன்.

"எங்கே உன் ஆட்டைப் பேசச் சொல்லு," என்றார் முதலாளி.

உடனே சுப்பன் தன் ஆட்டைப் பார்த்து, "ஏப்ரலுக்கு அடுத்தது என்ன மாசம்?" என்றான்.



ஆடு, "மே," என்றது.

தொடர்ந்து சுப்பன், "ஜூனுக்கு முந்தின மாசம் எது?" என்றான்.

அதற்கும் ஆடு, "மே," என்றது.

சர்க்கஸ் முதலாளிக்குச் சந்தேகம் வந்தது. "ஏய் ஆடே, பொங்கல் எந்த மாசம் வரும்?" என்றார்.


அதற்கும் அந்த ஆடு, "மே," என்றது.

முதலாளிக்குக் கோபம் வந்து விட்டது. "டேய் அறிவு இல்லாத பையா! ஆடு எதுக்கெடுத்தாலும் 'மே'ன்னு தாண்டா கத்தும். யார்கிட்டே ஏமாத்தறே? இது பேசத் தெரிஞ்ச ஆடா? போடா வெளியே," என்று துரத்தினார்.

சுப்பன் சோகமாக வெளியே வந்து அமர்ந்தான். அவனது சோகத்தைப் பார்த்த ஆடு, மெதுவாக சுப்பனை முட்டி விட்டு, "ரொம்ப ஸாரி. பொங்கல் ஜனவரியிலே வரும் இல்லே? அது எனக்கு மறந்தே போச்சு," என்றது!

— கார்த்திக்

# யானை என்ன யானை!



குட்டி யானை, அம்மாவை ஏக்கத்தோடு பார்த்தது.

"குடிக்கக்கூட நீரில்லாமல் இனி மேல் எவ்வளவு நாள் தான் கஷ்டப் படறது?" என்றது.

"ஒரு மழை பெய்தால் கூடப் போதும். ஆற்றில் தண்ணீர் கரை புரண்டு வந்து விடும்."

மலைப் பாதையில் ஏதோ வாகனம் வரும் சத்தம் கேட்டது. "நாம போய் ஒளிஞ்சுக்குவோம்," என்று குட்டியையும் அழைத்துக் கொண்டு அடர்ந்த மரங்களுக்கு இடையே மறைந்து கொண்டது பெரிய யானை.

மலைப் பாதையில் வந்த வேனின் மேல் தண்ணீர் தொட்டி இருப்பதையும், அதிலிருந்து நீர் தளும்பிச் சிந்துவதையும் பெரிய யானை கவனித்தது.

"இந்த வேன்ல தண்ணீர் இருக்கு. வாவா."

பெரிய யானையைத் தொடர்ந்து குட்டி யானையும் வேனுக்குப் பின்னால் விரைந்தது.

தங்கள் வேனை இரு யானைகள் துரத்துவதை வேனில் இருந்தவர்கள் கவனித்து விட்டனர்.

"அண்ணே, போனவாரம் இங்கே நான் குடும்பத்தோடு வந்திருந்தேன். என் பையன் விளையாட்டாக ஒரு மத்தாப்புக் குச்சியைக் கிழித்து யானை மேல் போட்டான். நல்ல வேளை, கார் இருந்ததால் பிழைத்துக் கொண்டோம். ஆனாலும் யானைகள் வஞ்சம் தீர்த்துக் கொள்வதில் தீவிரமானவை. ஒரு யானைக்குத் தீங்கு செய்தால் மற்ற யானைகளுக்குத் தெரிவித்து விடும். தீங்கு செய்த ஆளின் அடையாளங்களைக் கூட ஒன்று விடாமல் சொல்லி விடுமாம். கொஞ்சம் கவனமாகவே இருங்க. காட்டுப் பக்கம் ஒரு ஆறு மாதமாவது போவாதீங்கன்னு என் மனைவி எச்சரிக்கை செய்திருந்தாள். நான்தான் அவளுக்குத் தெரியாமல் வேனை எடுத்துக் கொண்டு வந்தேன். பாருங்களேன், போன மாதம் நடந்த நிகழ்ச்சிக்காக அந்த பாதிக்கப்பட்ட யானையின் சார்பில் இந்தப் பெரிய யானை வஞ்சம் தீர்க்கத் துரத்துகிறதே!" என்று அந்த நிலையிலும் கூட வியந்து கொண்டார் தொப்பிக்காரர்.

வேன் காற்றாகப் பறந்தது.

இருவரும் பேசிக் கொண்டது பெரிய யானைக்கு நன்றாகக் கேட்டது. 'அடி முட்டாளுங்க. பாதிக்கப்பட்ட ஏதோ ஒரு யானை சொல்லிக் கொடுத்து நான் துப்பறிந்து இவனைப் பழிவாங்கத் துரத்துவதாக அந்தத் தொப்பிக்காரன் சொல்லிக் கொண்டிருக்கிறான். நாம்ப இவங்களைத் துரத்துவது குடி நீருக்காக என்பதை இந்த முட்டாள்கள் அறியவில்லையே!' என்று குட்டியிடம் கூறியது பெரிய யானை.

"அந்த வேன் கண்ணுக்கே தெரியலையே! நம்மால் அதைப் பிடிக்க முடியுமா?" என்று சந்தேகத்துடன் கேட்டது குட்டி யானை.

"கண்டிப்பாக முடியும். ஐந்தாவது

ரேவதி

சரிவில் ஒரு பெரிய மரம் சாலையின் குறுக்கே விழுந்து கிடக்கிறது. அதைத் தாண்டி வேனால் போக முடியாது வேகமாக வா,'' — பெரிய யானை.

ஐந்தாவது சரிவில் பாதையின் குறுக்கே மரம் விழுந்து கிடந்த இடத்தில் வேன் நின்றது.

தொப்பிக்காரரை தாடிக்காரர் இழுத்துக் கொண்டு அடர்ந்த மரங் களுக்கு இடையே ஓடினார்.

அடுத்த சில நிமிடங்களுக்குள் யானைகள் இரண்டும் அங்கே வந்து விட்டன. பெரிய யானை சுற்றுமுற் றும் பார்த்துவிட்டுச் சிரித்தது.

''எதுக்குச் சிரிக்கிறே?''

''வேனில் வந்த புத்திசாலிகள் இருவரும் இங்கேதான் அருகில் ஒளிந்திருக்கிறார்கள். மோப்பத்தால் என்னால் உணர முடிகிறது. நம்மை ஏமாற்றி விட்டதாக அவர்கள் பேசிக் கொள்கிறார்கள். நாம் வந்தது குடி நீருக்காக, பாவம் அவர்களைத் துரத்த வேண்டாம்,'' என்றது பெரிசு.

''நல்ல வேளை, அந்தப பெரிய யானை நம்மைக் கண்டுபிடிக்க வில்லை,'' என்று நிம்மதிப் பெரு மூச்சு விட்டார் தாடிக்காரர்.

''என்னது! தண்ணீர்த் தொட்டி உயரத்துல இருக்கே. என்னால் எப் படி ஏறிக் குடிக்க முடியும்?'' என்று குறைபட்டுக் கொண்டது குட்டி யானை.

''நான் காலை மடக்கி மண்டி யிட்டுக் கொள்கிறேன். நீ என்மேல் ஏறிக்கொள். தொட்டி எட்டும். எனக்குப் பாதி வைத்து விட்டு மீதியை நீ குடித்துக் கொள்,'' என்று மண்டியிட்டது பெரிய யானை.

குட்டி குடித்துவிட்டு இறங்கியதும் தொட்டியைக் காலி செய்தது பெரிய யானை.

வேனின் கண்ணாடியில் மிகப் பெரிதாக மாட்டப் பட்டிருந்த ஒரு யானையின் வண்ணப் படத்தை அதி சயத்தோடு பார்த்தது குட்டி யானை.

''இத பார்!, இந்த யானைக்குக் காலில் மூன்று நகம்தான் இருக்கு.



அதோட இதன் துதிக்கை நுனியை யும் பாரேன். பிளவுபடாமல் இருக்கு!' என்று வியந்து கொண்டது குட்டி.

பெரிசும் அருகே வந்து பார்த்து விட்டுச் சொன்னது: ''யானையைப் பற்றி எதுவுமே தெரியாத அடிமுட் டாள் எழுதிய படம். நல்ல வேளை, துதிக்கையையாவது விட்டு விடாமல் போட்டு வைச்சானே!'' என்று கூறிவிட்டுப் பாதையோரத்தில் கிடந்த ஒரு கல்லைத் துதிக்கையில் எடுத்து வீசியது.

யானைக்குப் படிக்கத் தெரிந் திருந்தால் படத்தின் கீழே 'ஆப்பி ரிக்க யானை' என்று எழுதியிருந்த தைப் படித்திருக்கும்.

''பாரேன் யானையின் வஞ்சத்தை! அந்தக் கண்ணாடிக் கதவில் யானை யின் படத்திற்குக் கீழே என்னுடைய புகைப்படம் ஒன்றை ஒட்டி வைத் திருந்தேன். என்மேல் உள்ள வஞ் சத்தை அது எப்படிக் காட்டியிருக் கிறது!'' மெதுவாகக் கூறினான் தொப்பிக்காரன்.


''அண்ணே, இத பார்த்தியா, நாலைஞ்சு கட்டெறும்பை பிடிச்சிருக் கேன். இதை அப்படியே எடுத்துக் கிட்டுப் போய் அந்த யானைகளுக்கு முன்னால் பொட்டலத்தோடு வீசிட லாமா? யானைகளுக்குத்தான் எறும்பு என்றால் குலை நடுக்கமாமே வேனில் இருக்கும் மற்றப் பொருள் களாவது சேதப்படாமல் தப்புமே?'' என்று கேட்டான் தாடிக்காரன்.

''நல்ல யோசனை. யானைங்க சதா காதுகளை அசைத்துக் கொண் டிருப்பது இந்த மாதிரி எறும்புகளை விரட்டத்தானாம்,'' என்று அந்த யோசனைக்கு ஆதரவு தெரிவித்தார் தொப்பிக்காரர்.

சற்றுத் தூரத்தில் தாடிக்காரர் மறைந்திருந்து எறும்புப் பொட்ட லத்தை வீசினார். பெரிய யானை கோபத்தோடு ஓடிவந்தது. அந்த நேரத்தில் காட்டு எலி ஒன்று குறுக்கே பாய்ந்து ஓடியது. பெரிய யானை கலவரப்பட்டுப் பின்னடைந்தது. ஓடிப் போன எலி மீண்டும் குறுக்கே ஓடியது. பெரிய யானை பின்னா லேயே நகர்ந்து ஓடத் தொடங்கியது. குட்டி யானையும் பின் தொடர்ந்தது.

''துப்பாக்கிக் குண்டுக்குக் கூட அஞ்சாத யானை, அற்ப எறும்புக்கு இப்படி அஞ்சி ஓடறதே!'' என்று வியந்து கொண்டார் தொப்பிக்காரர்.

''அடுத்த முறை காட்டுக்கு வரும் போது ஒரு டப்பா நிறையக் கட் டெறும்பைப் பிடிச்சுக் கொண்டு வர வேண்டியதுதான்,'' என்று சிரித்தார் தாடிக்காரர்.



### அறிவியல் உண்மை:

தீங்கிழைத்த மனிதனை அடை யாளம் வைத்து வஞ்சம் தீர்க்கும் அளவுக்கு யானைகள் அறிவு பெற் றவை அல்ல. ஆப்பிரிக்க யானைக ளுக்கும் இந்திய யானைகளுக்கும் துதிக் கையிலும் கால் நகங்களிலும் வேறு பாடுகள் உண்டு. எறும்பைக் கண் டால் யானைக்குப் பயம் என்பது உண்மையல்ல. அவை காதுகளைச் சதா அசைத்துக் கொண்டிருப்பது அனிச்சைச் செயலே. எலி முயல் போன்ற சிறு விலங்குகளைக் கண் டால் யானைகள் கலவரமடையும். அது கூட அவை எங்கே கால்களுக்கிடையில் சிக்கிக் கூழாகிவிடுமோ என்ற அச்சத் தால்தான்!




தேனீக்கள் சேகரிக்கும் தேன் அனைத்துமே இனிக்கும் என்பது பெரும் தவறு. சில வகைத் தேனீக்கள் சேகரிக்கும் தேன் உப்புக் கரிக்கும். பிரேசில் நாட்டில் கோயாஸ் மாநிலத்தில் இத்தகைய தேனீக்கள் அதிகமாக இருக்கின்றன. இவை உப்புச் சுவையுடைய தேனையே சேகரிக்கின்றன. இந்தத் தேனீக்கள் யாரையும் கொட்டுவதில்லை.

* மான்களுக்குக்கொம்பு இருப்பதைப்பார்த்திருப்பீர்கள். இந்தக் கொம்புகள் ஒவ்வோர் ஆண்டும் வளரும். காட்டு மான்களுக்குத் தினமும் ஒரு செ. மீ. நீளம் கொம்பு வளரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அலாஸ்கா நாட்டில் பிடிபட்ட ஒரு மானின் கொம்பு மட்டும் 40 கிலோ எடை இருந்தது.

* நீங்கள் இதைப் படித்துக் கொண்டிருக்கும் போது பூமியின் சுற்றுப் பாதையில் சுமார் மணிக்கு 1600 கி. மீ. வேகத்தில் பயணம் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதே சமயம் பூமியுடன் சேர்ந்து சூரியனைச் சுற்றி மணிக்கு 1,06,000 (ஒரு லட்சத்து ஆறாயிரம்) கி. மீ. வேகத்தில் பயணம் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஒரு வருடத்திற்கு 40 கோடி கி. மீ. பூமி என்ற மிகப் பெரிய விண்வெளிக் கலத்தில் பயணம் செய்யும் பயணிகள்தாம் நாம்.




* திபெத் நாட்டில் பள்ளிக்கூடங்கள் இல்லை. பணக்காரர்கள் மட்டும் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கத் தனியாக ஆசிரியரை அமர்த்துகிறார்கள். வெட்ட வெளியில்தான் பாடங்களை நடத்துகின்றனர்.

* உலகின் மிகப் பெரிய விலங்கு நீலத் திமிங்கலம். நீளம் 100 அடிக்கும் மேல். அகலம் 214 அடி. நிறை 125 டன். இது பசிபிக் கடலிலும் ஆர்க்டிக் பெருங்கடலிலும் காணப்படும்.

* ருஷ்ய நாட்டுச் சிற்றூரிலுள்ள எல்லாச் சிறுவர்களும் ஆளுக்கொரு குதிரை வளர்க்கிறார்கள். அதோடு, உயரம் தாண்டுதல் மற்றும் குதிரை தொடர்பான அனைத்து விளையாட்டுக்களையும் கட்டாயமாகக் கற்றுக் கொள்கின்றனர்.

* அரிஸ்டாட்டில், மோசஸ், ஈசோப், டார்வின் சர்ச்சில், சாமர்செட்மாம், ஆறாம் ஜார்ஜ் ஆகியோர் திக்குவாயர்கள் என்பது நம்ப முடியாத மிகப் பெரிய உண்மையாகும்.

— சா. இரா. மணி, வந்தவாசி.

இடி இடிக்கும் போது வாயைத் திறந்து கொள்ள வேண்டும். ஏன் தெரியுமா? இடியின் ஒலி அலைகள் மிக வேகமாக வந்து செவிப்பறையில் மோதும். அதனால் செவிப்பறை கிழிந்து காது செவிடாகி விட ஏதுவாகும். இதைத் தவிர்க்க நாம் வாயைத் திறந்து வைத்துக் கொண்டோமானால் வாய் வழியாக வெளிக்காற்று உட்சென்று செவிப்பறையின் மறுபக்கம் மோதும். அப்போது அவ் வெளிக்காற்று செவிப்பறையின் அதிக அதிர்வை வாங்கிக் கொண்டு செவிப்பறை பாதிக்கப்படாமல் பாதுகாக்கும். இக் கருத்தை மையமாகக் கொண்டுதான் முன்னோர்கள் இடி இடித்தால் ''அர்ச்சுனா'' ''அர்ச்சுனா'' என்று கூற வேண்டும் என்றார்கள். அர்ச்சுனா என்று கூறும் போது வாயைத் திறந்து விடுகிறோம் அல்லவா!




— ஆர். சரவணன், பரமத்தி.



## வேம்பை விரும்பும் மக்கள்

இந்தியாவிலேயே அதிகமாக வேப்ப மரம் வளர்ப்பவர்கள் குஜராத்தி மக்கள் தான் அவர்கள் வேப்பமரம் வளர்ப்பதில் தனி ஆர்வம் காட்டுகின்றனர். அதை அவர்கள் பெரும்பாலும் ஒரு தொழிலாகவும், தாங்கள் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையாகவும் நினைத்து வளர்க்கின்றனர். இயற்கையாகவே எல்லா மரங்களின் தென்றல் காற்றை விட வேப்ப மரத்தின் காற்று உடலுக்கு நல்லது என்றும் அவர்கள் நம்புகின்றனர். இங்கு 200 – 300 ஆண்டுகள் வயதுடைய வேப்ப மரங்கள் கூட உள்ளன.

— அ. வெற்றிவேல், ஆகமதாபாத் – 26.

## வேக எழுத்தாளர்கள்!



உலகிலேயே மிக வேகமாக நாவல் எழுதிய எழுத்தாளர் ஏர்ல் ஸ்டேன்லி கார்டனர் (1889 – 1970). ஒரு நாளைக்குச் சுமார் பத்தாயிரம் வார்த்தைகளை டிக்டேட் செய்தார். 140 தலைப்புகளில் நாவல்களை எழுதியிருக்கிறார்.

பிரிட்டிஷ் நாவலாசிரியர் ஜான்க்ரீசி ஆண்டொன்றுக்கு சராசரி 20 நாவல்களை எழுதியவர். இவர் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரே வாரத்தில் இரண்டு நாவல்களைக் கூட எழுதியுள்ளார்.

— எல். முத்து, ஊத்தங்கரை.

## SCHOOL!

பள்ளிக்கூடத்தை நாம் 'ஸ்கூல் (School)' என்று அழைக்கிறோம். இந்த 'ஸ்கூல் (School)' என்பதற்கு அழகிய பொருள் உண்டு. அது என்ன தெரியுமா?

S – **SINCERITY** – நேர்மை.
C – **CAPACITY** – திறமை.
H – **HONESTY** – உண்மை பேசும் குணம்.
O – **OBEDIENCE** – மரியாதை.
O – **ORDERLINESS** – ஒழுக்கம்.
L – **LEARNING** – கல்வி அறிவு.

இத்தனை பண்புகளையும் போதிக்கும் இடம் பள்ளிக்கூடம் என்பதை விளக்குவதே "SCHOOL" என்பதாகும்.

— சிவ. மதிவாணன், எடையூர்.




## நம்ப முடிகிறதா?

கூடல் நீரைக் கொண்டு ஐஸ் செய்தால் ஐஸ் உப்பாக இருக்காது. உறையும் பொழுது நீர் மட்டுமே ஐஸாக மாறும். உப்பு, தனியாகப் பிரிந்து விடும்.

* வண்டின் ரீங்காரம் அதன் மெல்லிய இறகுகள் மிக விரைவாக அசைக்கப்படுவதால் ஏற்படுகிறது.

* வெட்டுக்கிளியின் இரத்தம் வெண்மை நிறமுடையது.

— எஸ். குருமூர்த்தி, காட்டாங்கொளத்தூர்




ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி. இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இவர் எந்த பைபிளின் மீது கை வைத்துச் சத்தியப் பிரமாணம் எடுத்தாரோ அதே பைபிளின் மீதுதான் எல்லா அமெரிக்க ஜனாதிபதிகளும் உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றனர்.

— வி. எஸ். பொன்னம்மாள்,
வந்தவாசி.

## சார் தபால்

## கதைத் தலைப்பே கதை தான்

*   மார்ச் கோகுலம் புதுப் பொலிவு பெற்று ஜம்மென்று இருக்கிறது. தலையங்கம் பகுதியில் குழந்தைக் கவிஞரின் படம். இரண்டாம் பக்கத்திலேயே பொருளடக்கம். குழந்தைக் கவிஞர் பற்றிய கதை, கவிதைகள் அழகாக இருக்கின்றன. கதைத் தலைப்புகளே கூடக் கதை சொல்கின்றன.

முத்துராமலிங்கபுரம்,
மு. பாலசுப்பிரமணி.

* பெயர் பிறந்த கதை: குழந்தைக் கவிஞர் அவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களைப் படித்ததும் உடல் சிலிர்த்தது. அவரின் வாழ்க்கையில் இப்படிப்பட்ட சம்பவமா நடைபெற்றது? நம்பவே முடியவில்லை. மிக மிக ஆச்சரியமாக இருந்தது!

சிதம்பரம்,   எஸ். சிவகுமார்.

*   அழ. வள்ளியப்பாவின் பெயர் பிறந்த கதை சூப்பர். அவர் நினைவு நாளான மார்ச் 16 ஆம் தேதிதான் என் பிறந்த நாள் வருகிறது. நான் இந்தத் தடவை கடவுளிடம் பிரார்த்திப்பதோடு மட்டுமல்லாமல், அவருக்காக அன்று கண்ணீர் அஞ்சலி செலுத்துவேன்.

சென்னை — 39,   அ. க. கிருட்டிணன்.

*   பிரபல குழந்தை எழுத்தாளர் ரேவதி அவர்கள் துணை ஆசிரியராகக் கோகுலத்தில் சேர்ந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

சென்னை — 40,   எச். கிருஷ்ணமூர்த்தி

*   டூத் பிரஷைக் கண்டுபிடித்த விதம் தெரியாமல் டூத் பிரஷைப் பயன்படுத்தி வரும் என்னைப் போன்றவர்களுக்கு 'டூத் பிரஷ் தெரியுமா?' பகுதி பயனுள்ள பகுதி.

செஞ்சி,   நா. ரசூல்.

*   சிறந்த குழந்தை எழுத்தாளரான டாக்டர் பூவண்ணன் அவர்கட்கு இந்திய சிறுவர் கழகப் பரிசு கிடைத்திருப்பதைக் கோகுலம் இதழ் மூலமாக அறிந்தேன். அவருக்கு எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

பூந்தோட்டம்,   து. பாண்டியன்.

*   டாக்டர் பக்கத்தில் காலராவைப் பற்றித் தெளிவாகச் சிறுவர்கள் நாங்களாகவே புரிந்து கொள்ள முடிந்தது. சுகாதார முறையும் தடுப்பு ஊசி முறையும் நாம் ஒழுங்காகப் பின்பற்றினால் காலரா மட்டுமல்ல; எந்த நோயுமே நம் அருகில் வர அஞ்சுமே!

ஈரோடு,   டி. சந்திரன்.

*   அரசன் என்பவன் பிரஜைகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், எதிரிகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பனவற்றை எளிய முறையில் விளக்கியது 'சிங்கராஜா' சித்திரக் கதை.

மயிலாடுதுறை,   ஆர். முரளி.

*   புதையல் பூமி சிறுகதை படிக்க விறுவிறுப்புடன் நல்ல முடிவாயும் அமைந்தது பாராட்டுக்குரியது.

களியக்காவிளை,   கே. புஷ்பராஜ்.

*   மாட்டுக்காரன் பாடிய மகாபாரதம் மிகவும் அருமை. ஹாரிஸ் அவர்களுக்குப் பாராட்டுக்கள். ஒரு மரத்துப் பறவைகள் மிகவும் விறுவிறுப்பாகச் செல்கிறது.

ஈரோடு,   சி. சுமதி.

*   பரிசுப் போட்டியின் வாசனை தெரியாத எங்களுக்கு அதன் வாசனையை அறியச் செய்து விட்டீர்கள். பேஷ் பேஷ்! வர வர கோகுலம் நல்லாவே இருக்கு.

செஞ்சி,   தா. ஷேக்உசேன்.

*   சிறப்பான கருத்துச் செறிவு மிக்க செய்திகளையும், அரிய பல கட்டுரைகளையும், அறிவியல் புதுமைகளையும், மருத்துவப் பகுதியையும், சிறுகதைகள், தொடர் கதைகள், இன்னபிற செய்திகளடங்கிய 'கோகுலம்' சிறுவர், சிறுமியருக்கு மட்டுமின்றி, பெரியவர்களும் படித்துப் பயன்பெறும் வண்ணம் சிறப்பாக உள்ளது.

புன்செய்ப்புளியம்பட்டி,   பி. எல். கிரிஜா.


*   கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களின் பணி பாராட்டும்படியாக அமைய எனது அன்பான வாழ்த்துக்கள்.

பரங்கிப்பேட்டை,   சாரதா.

*   பள்ளிச் சிறுமி பரதம் பயிலலாமா என்ற நாருபேரின் பேட்டி நன்றாயிருந்தது. பரதக் கலைகளில் ஆர்வம் உள்ளோர் படிப்பிலும் படுசுட்டியாக இருப்பதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஜூனியர் இந்தியா நடத்துனர் — கோகுலம் என்ற பொக்கிஷத்தை அறிமுகப்படுத்தி ஊக்கப்படுத்தி வரும் விதம் எங்களை முன்னேற்ற உதவும் முதல்படி என்பதை உணர்கிறோம்.

பள்ளிக்கரணை,   என். ரேணுகா தேவி.




**நீங்களே செய்யும் எலெக்ட்ரானிக் கிட்!**

ஒரே 'சிப்' மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகள்!

''சிப்-சாப்'' நீங்களே செய்யும் எஜுகேஷனல் கிட் நூற்றுக்கும் மேற்பட்ட பகட்டான பரிசோதனைகள் கொண்டது. வித்தையை விளையாட்டாய் கற்பிக்கவென்றே திட்டமிடப்பட்டது!

உங்கள் குழந்தை நாளைய உலகில் வெற்றியடைய வழிசெய்யுங்கள்!

எலெக்ட்ரானிக் யுகத்தின் சவால்களை சமாளிக்கத் தகுதியான சாதனம் ''சிப்-சாப்''!

அம்சங்கள்: பாட்டரியால் இயங்கக் கூடியது - பாதுகாப்பானது • எளிதில் எடுத்துச் செல்லக் கூடியது • ஸால்டரிங் இல்லை – கனெக்ஷனுக்கு ''பேட்டெண்டுடன்'' கூடிய விசை • கையாள எளிது.

பரிசோதனைகள்: • மியூஸிகல் ஆர்கன்* ஷூட்டிங் விளையாட்டு • ஃபயர் அலாரம்* ஒயர்லெஸ் பீப்பர் * ஸிக்னல் டிரான்ஸ்மிட்டர்* லைட் ஆபரேடட் அலாரம் இன்னும் பலப் பல.

ரூ. 350/- மட்டும் - வரிகள், அனுப்பும் செலவு தனி.

**''எலக்ட்ரானிக்ஸ் எல்லோருக்கும்''**

# எஜூடெக்

187, முதல் மாடி, வீரபிள்ளை தெரு,
பெங்களூர் – 560 001. இந்தியா.
போன்: 578801.

எனக்குத் தேவை ''சிப்-சாப்'', கிட் ஒன்றுக்கு ரூ. 400/- வரியும், அனுப்பும் செலவும் சேர்த்து. தயவு செய்து .........கிட்//கிட்கள் அனுப்பவும். இத்துடன் 'கிராஸ்' செய்யப்பட்ட டி.டி./ போஸ்டல் ஆர்டர் (ஒரு கிட் ரூ. 50/- என்ற கணக்கில்) முன்பணமாக அனுப்புகிறேன். மீதித்தொகையை வி.பி.பி. வந்து சேர்ந்தவுடன் அனுப்புவதாக உறுதியளிக்கிறேன்.

பெயர் ..............................

விலாசம் ..............................

பள்ளி ☐ கல்லூரி ☐

Climb ads/Chip-Chap/890]

# எதிர்காலம்


சேரநம்பி

**செ**கஸ்லோவாகியஎழுத்தாளர் கரேல் ச்சேபக், 'ரோசம்ஸ் யூனிவர்சல் ரோபோட்ஸ்' என்ற நாடகத்தை அரங்கேற்றினார். இந்த நாடகக் கதையில் விஞ்ஞானி ஒருவர், மனித வேலைகளைச் செய்யும் அறிவுத் திறமை மிக்க இயந்திர மனிதனை—'ரோபோ' வை உருவாக்குகிறார். அபபடிச் சில ரோபோக்களும் சேர்ந்து தொழிற்சாலையை நடத்துவதும், அதைத் தொடரும் சிக்கல்களும்தான் கதை. இந்தக் கற்பனை 1923 — ஆம் ஆண்டு உருவாயிற்று.

இயந்திர மனிதனுக்கு முதன் முதலாக 'ரோபோ' என்று பெயரிடப் பட்டது இந்த நாடகத்தில்தான். இதைத் தொடர்ந்து 'ரோபோ'வைக் கதாநாயகனாக அல்லது வில்லனாக வைத்துப் பல கற்பனை நாடகங்களும் நாவல்களும் படைக்கப் பட்டன.

'ரோபோ' என்பதற்கு, மனிதன் தன் உடல் வலிமையால் செய்யும் வேலைகளைச் செய்யக் கூடிய இயந்திரம் என்பது பொருள். 'ரோபோ' திடீரென்று உருவானதா, இல்லை, இதற்கு ஏதாவது முன்னோடி அமைப்பு இருந்ததா?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கிரேக்கர்களும், ரோமானியர்களும் மனித வேலைகளைச் செய்யக் கூடிய இயந்திர பொம்மைகளை உருவாக்கியிருந்தார்கள் என்று கலைக் களஞ்சியங்கள் குறிப்பிடுகின்றன. ஹோமரது 'இலியத்தில்' வெண்கலத்தால் ஆன மனித வேலை செய்யும் பொம்மைகளைப் பற்றிய குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. கிரேக்கர்களது புகழ்மிக்க நகரங்களின் கோட்டை வாயில்களைத் திறந்துமூட இயந்திர மனிதர்கள் இருந்தனர். உலகப் புகழ் மிக்க ஓவியர் லியனார்டோ டாவின்சி (1452 — 1519) தனது இரசிகர்களை மகிழ்விக்க உலோகத்தால் ஆன சிங்கப் பொம்மை ஒன்றை வைத்திருந்தார். இது நடந்தது; கர்ஜித்தது. இதே போல் திருப்பு விசையில் இயங்கும் புலி ஒன்றைத் திப்பு சுல்தான் வைத்திருந்தார். இவையெல்லாம் ரோபோவுக்கு முன்னோடிகள் என்கின்றன கலைக்களஞ்சியங்கள்.



**ம**னிதனின் வேலைகளில் பங்கேற்க வல்ல இயந்திரங்கள் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகே கண்டுபிடிக்கப்பட்டன. இவை கண்டுபிடிக்கப் படவேண்டும் என்பதில் மனிதனுக்கிருந்த ஆவலை 1923 — ஆம் ஆண்டில் அரங்கேற்றமான நாடகங்கள் வெளிப்படுத்தின. அதன் தாக்கமே, இத்துறையில் விஞ்ஞானிகளை மேலும் தீவிரமாக ஈடுபட வைத்தது.

தொடக்க கால 'ரோபோ' தொழிற்சாலைப் பணிகளுக்காகவே உருவாக்கப்பட்டது. இது, என்ன வேலைக்காகச் செய்யப்பட்டதோ அதை மட்டுமே செய்யும் — அதுவும் மனித மேற்பார்வையில். உதாரணமாக, சுவருக்கு வர்ணம் பூசுவதற்காகச் செய்யப்பட்ட 'ரோபோ'

# ரோபோ கைபுழல்!

மாதிரிச் செய்ய வேண்டும் என்பதைக் கட்டளை வடிவில் கம்ப்யூட்டரில் புரோக்ராமாகப் பதிய வைக்கப்படு கின்றன. இந்தக் கட்டளைப்படிதான் ரோபோ இயங்கும்.

ரோபோவின் உயிர்ப் பகுதி 'கம்ப் யூட்டர்'தான். அதை அதன் இதயம் என்றுகூடக்கூறலாம். இடும்கட்டளை களை மின் சமிக்ஞைகளாகக் கம்ப் யூட்டர்கள் மாற்றிக் கொடுக்கின் றன. இந்த சமிக்ஞைகள்தான் கம்ப் யூட்டரின் மொழி. சமிக்ஞைகள் மின் தூண்டலாக மாற்றப்பட்டு ரோபோ வைச் செயல்பட வைக்கின்றன. கட்டளைகளைத் தொகுத்துச் சேர்த்து வைத்துக்கொள்ளும்எலக்டிரானிக்ஸ் நினைவுப் பகுதியும் கம்ப்யூட்டரில் உண்டு. அவற்றை நினைவுபடுத்தி ரோபோக்கள் இயக்கப்படுகின்றன.



• தொடக்க கால ரோபோ

கதிர் வீச்சு நிறைந்த இடங்கள், நச்சு வாயு வெளிப்படும் ரசாயனப் பரிசோதனைச் சாலைகள், மனித னால் நெருங்கக்கூட இயலாத வெப்ப உலைக் களங்கள் ஆகியவற்றில் ரோபோ செய்யும் பணிகள் மகத்தா னவை. பாதாளச் சாக்கடைகளைச் சுத்தம் செய்யும் ரோபோ இன்று அயல் நாடுகளில் சர்வ சாதாரணம்.


மனிதனின் சாதாரணக் கண்களால் காண முடியாத பல நுண்ணிய காட்சி களை ரோபோ கண்டு, பதிவு செய்து அனுப்பி, ஆராய்ச்சிகளில் வெகு விரைவாக முடிவுகளைக் காண உதவுகின்றது.

ராட்சச வேலைகளுக்கு மட்டுமல் லாமல் நுண்ணிய வேலைகளுக்கும் ரோபோ பயன்படுகிறது. தரையில் விழுந்துவிட்ட ஒரு குண்டூசி, மயிர்ச் சுருள் போன்றவற்றைக் கூடத் துல்லிய மாக எடுக்கும் வகையில் இவை புராக் கிராம் செய்யப்படுகின்றன.

வரவேற்பு அறையை நிர்வகிக்க, வீட்டைக் காவல் காக்க, வங்கிகளின் கருவூலங்களைப் பாதுகாக்க, வீட்டில் குழந்தைகளுக்கு உணவு தயாரித்துக்

வர்ணம் பூசுவதைத் தவிர வேறு வேலை எதையும் செய்யாது. இயக்கி விட்டால் சுவர் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, தன் பாட் டுக்குத் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கும். இதன் இயக் கத்தை நிறுத்த மனிதர்கள் யாராவது வந்து விசையை அணைக்க வேண் டும். இதற்குப் பிறகு உருவாக்கப் பட்ட 'ரோபோ,' தங்கள் பணியை ஒரு குறிப்பிட்ட நேரம் வரை செய்து தானாகவே இயக்கத்தை நிறுத்திக் கொள்ளும்.

கம்ப்யூட்டர் வந்த பிறகு, உலகெங் கும் உள்ள வளர்ந்த நாடுகள் எல் லாம் 'ரோபோ'வை உருவாக்குவதில் தீவிரமாகப் போட்டி போட்டன. அவை எவ்விதப் பணிகளை, எந்த



• ரோபோ ஆர். ஜெட்டன்

கொடுக்க, கதை கூறித் தூங்க வைக்க, கதவைத் திறந்து விட, புது மனிதர் வந்தால் அபாய எச்சரிக்கை கொடுத்து அறிவிக்க என்று பல் வேறு வேலைகளுக்கும் 'ரோபோ' வந்துவிட்டது.

ஆபரேஷன் தியேட்டரில் டாக்டருக்குச் சிக்கலான அறுவைச் சிகிச்சைக்கு உதவத் தயாராக இருக்கும் ரோபோவின் பெயர் 'ஓல். டாங்க் ஆகவும், ஜெட் விமானமாகவும் பயன் படக்கூடிய ரோபோவின் பெயர் 'ஆர். ஜட்டன்.'

'மென்னி' என்ற ரோபோவுக்கு மனித உடல் போன்ற தோல், வாய், மூக்கு, காது எல்லாம் உண்டு. மனிதனைப் போலவே சுவாசிக்கிறது. இது தவழும்; கால்மேல் கால்போட்டு அமரும்; குனியும்; நடக்கும்; மாடிப் படி ஏறும்!

மனிதன் தன்னால் புக முடியாத பல ஆபத்தான இடங்களில் ரோபோவைப் புகுத்துகிறான். இதன் காரணமாக மனிதகுல மேம்பாட்டுப் பணிகளுக்கு ரோபோ பெரும் தொண்டாற்றி வருகிறது.

சென்னை கல்பாக்கத்தில் உள்ள அணுமின் நிலையத்தின் தேவைக்கென உள்ளே கொண்டு வரப்படும் கடல்நீர்க் குழாயில் கடல்நீருடன் கலந்து கடல்வாழ் உயிரினங்களும் வந்துவிடுகின்றன, ஏராளமாக. இதன் காரணமாகப் போதிய நீர் வருவது தடைப்படுகிறது. இக்குழாய்க்குள் இறங்கிச் சோதிப்பது மனிதனால் இயலாது. இந்த உயிரினங்களை எப்படி அழிக்கலாம் என்பதைச் சோதித்துப் பார்க்க வண்டு வடிவில் ஒரு ரோபோ உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் 'ஃபாண்டம் 500'. இது குழாய்க்குள் சென்று பல சோதனைகளை நடத்தி முடிவை அறிவிக்கப் போகிறது!

1985 ஜூன் 23 — ஆம் தேதி, அயர்லாந்துக்கருகே உள்ள அட்லாண்டிக் கடலில் ஏர் இந்தியாவின் ஜெட் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி விழுந்தது. வெடித்துச் சிதறிய விமானத்தின் பாகங்கள் கடல் நீருக்கடியில் 6700 அடி ஆழத்தில் சென்று விட்டன. பல பரிசோதனைகளுக்காக இவை மிகவும் தேவைப்பட்டன. அந்த ஆழத்தில் நீரின் அழுத்தம் மிக அதிகம். அதை மனிதனால் தாங்க முடியாது. அதோடு இருட்டு வேறு. ஆனால் 'ஸ்காராப்' என்ற ரோபோ கடலில் இறங்கி, சுற்றுமுற்றும் அலைந்து, விமானத்தின் சிதறிய பாகங்களைத் திரட்டிக் கொண்டு வந்து விட்டது! அதோடு, விமானத்தின் நடவடிக்கைகளைப் பதிவு செய்திருக்கும் 'கறுப்புப் பெட்டியையும் இது எடுத்து வந்து விபத்திற்கான காரணத்தை ஆராயும் நிபுணர்களுக்குப் பேருதவி புரிந்தது!

எதிர்காலத்தில் ரோபோ மருத்துவமனைகளில் தீவிர கவனம் தேவைப்படும் நோயாளிகளைக் கவனிக்கப் போகிறது. ரயில், விமானம், கப்பல் எல்லாவற்றையும் ஓட்டப் போகிறது. இன்னும் மனித வாழ்வை மேம்படுத்தவும் மனித குலத்தின் துயர் துடைக்கவும் இது என்னவெல்லாம் செய்யப் போகிறது என்பதை யாராலும் ஊகிக்க முடியாது!

டாக்டர் பக்கம்



# வாய்ப்பூட்டு நோய்

டாக்டர். கு. கணேசன்

**வ**ந்தனா, என் நண்பரின் மகள். எங்கள் ஊர் லிட்டில் ஏஞ்ஜல்ஸில் ஏழாம் வகுப்பில் படிக்கிறாள். படிப்பில் சமர்த்து. எல்லோரிடமும் கலகலப்பாகப் பேசுவாள். எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பாள். பல சமயங்களில் என்னைச் சந்திக்க வந்திருக்கிறாள். இப்போது வந்திருப்பது என்ன விஷயமாகவோ?

வந்தனா: உங்கள் மருத்துவமனையில் என் தோழி ஒருத்தி அட்மிட் ஆகியிருக்கிறாள். அவளைப் பார்க்க வந்தேன், மாமா.

நான்: யார், ஆறாம் நம்பர் அறையில் இருக்கும் அகிலாவைப் பார்க்கவா?

வந்தனா: ஆமாம், மாமா. அகிலாவுக்கு என்ன செய்கிறது? எப்படியிருக்கிறாள்?

நான்: அகிலா தெய்வாதீனமாகக் குணமடைந்து வருகிறாள். அவளுக்கு 'வாய்ப்பூட்டு நோய்.'

வந்தனா: என்ன, வாய்ப்பூட்டு நோயா? அப்படியொரு நோய் இருக்கிறதா, மாமா? இதுவரைக்கும் நான் கேள்விப்பட்டதில்லையே!

நான்: சொல்கிறேன். வாய்ப்பூட்டு நோய் என்பது 'கிளாஸ்ட்ரிடியம் டெட்டனை' (Clostridium Tetani) என்ப்படும் பாக்டீரியா கிருமிகளின் தாக்குதலால் வரக்கூடிய ஒரு வகைத் தொற்று நோய். இந்நோய்க்கு இசிவு நோய், வில்வாத ஜன்னி, இரணவாத ஜன்னி என்று பல பெயர்கள் உண்டு. ஆங்கிலத்தில் இதை 'டெட்டனஸ்' (Tetanus) என்று அழைப்பார்கள்.

வந்தனா: இந்த நோய்க் கிருமிகள் எல்லாம் எங்கிருந்து வரும, மாமா?

நான்: டெட்டனஸ் கிருமிகள் மனிதர்களின் மலத்திலும், பிராணிகளின் மலத்திலும் இருக்கும். இவை மண்ணில் கலந்து பரவும். நம் உடம்பில் ஏற்படும் காயங்கள், சிராய்ப்புகள், புண்கள் மூலம் இக்கிருமிகள் உடம்பினுள் நுழைந்து விடும். பின்பு அவை நச்சுப் பொருட்களை உற்பத்தி செய்து நம் இரத்தத்தில் கலக்கும். இதனால், நம் உடம்பில் உள்ள நரம்பு செல்கள் பாதிக்கப்பட்டு; வாய்ப்பூட்டு நோய் வரும்.

வந்தனா: வாய்ப்பூட்டு நோயை எவ்வாறு தெரிந்து கொள்வது?

நான்: வாய்ப்பூட்டு நோய் வந்தவர்களுக்கு வாயைத் திறக்க இயலாது. பற்கள் கிட்டிக் கொள்ளும். உணவை விழுங்க இயலாது. கழுத்துத் தசைகள் விறைத்துக் கொள்வதால் கழுத்தை அசைக்க முடியாது. வயிறு கல் மாதிரி இறுகிக் கொள்ளும். முதுகு பின்பக்கமாக வில் போல் வளையும். பாதிக்கப்பட்டவரின் உடம்பின் மேல் வெளிச்சம் பட்டாலோ அல்லது அருகில் உள்ளவர்கள் சத்தம் எழுப்பினாலோ நோயாளிக்கு வலிப்பு வரும். இந்த வலிப்பு ஆரம்பத்தில் லேசாகவும், போகப் போகத் தீவிரமாகவும் வரக்கூடும். பொதுவாக வாய்ப்பூட்டு நோயை ஆரம்பத்திலேயே முறையாகக் கவனித்தால் உயிர் பிழைக்க வாய்ப்புண்டு. இல்லையேல் அவர்களுக்கு மரணம் நிச்சயம்!

வந்தனா: கேட்கவே பயங்கரமாக இருக்கிறதே! இந்த நோய் எல்லோ

ருக்கும் வருமா, மாமா?


நான்: இல்லை, வந்தனா! அசுத்தம் நிறைந்த இடங்களில் வசிப்பவர்களிடத்திலும் சுகாதாரம் தெரியாத குழந்தைகளிடத்தில் வாய்ப்பூட்டு நோய் அதிகமாக வரும். விவசாயிகளிடத்திலும் தோட்டங்களில் — மாட்டுப் பண்ணைகளில் வேலை செய்பவர்களிடத்திலும் இந்நோய் வருவதற்கு அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன.

வந்தனா: ஏன் மாமா, என் தோழி அகிலாவுக்குக் காலில் முள் குத்தியதைக் கவனிக்காமல் விட்டதால் இந்நோய் வந்துள்ளதாகக் கூறினார்களே, அது உண்மையா?

நான்: உண்மைதான், வந்தனா. கால்களில் முள், ஆணி, கம்பி, பீங்கான் போன்றவை குத்தும்போது வாய்ப்பூட்டு நோய் வருகிறது. இதற்குக் காரணம் முள்ளுடன் வாய்ப்பூட்டு நோய்க் கிருமிகளும் நம் உடம்பினுள் நுழைந்து விடுகின்றன. குத்திய ஆணி துருப்பிடித்திருந்தால் புண் ஆறுவதில்லை. அதோடு அம்மாதிரி உண்டாகும் புண்களில் வாய்ப்பூட்டு நோய்க் கிருமிகள் வளர்வதற்கான சூழ்நிலை உண்டாகிறது. இம்மாதிரியே குழந்தைகளுக்குக் காதில் சீழ் வடியும் போதும், வெகு நாட்களாக ஆறாத புண்கள் இருக்கும் போதும் வாய்ப்பூட்டு நோய்க் கிருமிகள் எளிதில் நம் உடம்புக்குள் நுழைந்து நோயை உண்டாக்கும்!

வந்தனா: சிலர் உடம்பில் காயமேற்படும்போது மணல், சாணி போன்றவற்றைப் போட்டு இரத்தப் போக்கை நிறுத்துகிறார்களே! இதனால் வாய்ப்பூட்டு நோய் வருமா, மாமா?





நான்: நல்ல கேள்வி! நீ சொன்ன மாதிரி நம்மிடையே நிலவி வரும் சில தவறான பழக்கங்களினாலும் வாய்ப்பூட்டு நோய் வருகிறது. அதைப் பற்றிய சில விவரங்களையும் உனக்குச் சொல்கிறேன். காயங்களின் மேல் மணலையோ, சாணியையோ அப்புவது கண்டிக்கப்பட வேண்டிய பழக்கம். இதனால்தான் பெரும்பாலோருக்கு வாய்ப்பூட்டு நோய் வருகிறது. மணலிலும், சாணியிலும் உள்ள கிருமிகள் அக்காயத்தின் வழியாக உடம்பினுள் நுழைந்து விடுமல்லவா? இம்மாதிரியே கிராமங்களில் பிரசவம் பார்க்கும் போது பிறந்த குழந்தையின் தொப்புள் கொடியைத் துருப்பிடித்த கத்தியால் அறுப்பதும் தொப்புளின் மேல் சாணியை வைத்து மூடுவதும் தவறான வழக்கங்கள். இம்மாதிரியான பழக்கங்களால்தான் வியாதியை விலை கொடுத்து வாங்கிக் கொள்கிற துர்பாக்கியம் ஏற்படுகிறது!

வந்தனா: சரி மாமா, வாய்ப்பூட்டு நோயை எவ்வாறு தடுப்பது? அதற்கான வழிகளை எனக்குச் சொல்லுங்கள், முதலில்!

நான்: வாய்ப்பூட்டு நோயைத் தடுக்கப் பல வழிகள் உள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானது தடுப்பு ஊசி போட்டுக் கொள்வது. 'முத்தடுப்பு ஊசி' (Triple Antigen) என்ற தடுப்பு ஊசியைக் குழந்தை பிறந்த 3, 4, 5 மாதங்களில் மாதம் ஒரு

முறையும், பின்பு, 1½ வயது, 3 வயது, 5 வயதுகளில் ஒரு முறையும், போட்டுக்கொள்ள வேண்டும். பின்பு 'டெட்டனஸ் டாக்சாய்டு' (Tetanus Toxoid) என்ற தடுப்பு ஊசியை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையும் போட்டுக் கொள்ள வேண்டும்.

மேற்சொன்ன முறையைப் பின்பற்றத் தவறியவர்கள் உடம்பில் காயமேற்படும் போதோ அல்லது முள், ஆணி, கம்பி, பீங்கான் போன்றவை குத்தும் போதோ 'டெட்டனஸ் டாக்சாய்டு' தடுப்பு ஊசியை மாதம் ஒரு முறை மூன்று மாதங்களுக்குத் தொடர்ந்து போட்டுக் கொண்டால் வாய்ப்பூட்டு நோய் வருவதில்லை.


இதுதவிர, உடம்பில் காயமேற்படும் போது அதைச் சுத்தமாகப் பராமரிப்பதும் வாய்ப்பூட்டு நோயை வரவிடாமல் தடுக்க ஒரு சிறந்த வழி. புண்களையும் காயங்களையும் சோப்புப் போட்டுக் கழுவித் துடைத்துச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். மருத்துவர் ஆலோசனையின் பேரில் 'ஆன்டிபயாடிக்' மருந்துகளைப் புண்களின் மேல் தடவிக் கட்டுப் போட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் புண்களில் சீழ்பிடிக்க விடக் கூடாது.

சிறு காயமாக இருந்தாலும் அலட்சியமாக விட்டுவிடாமல் ஆரம்பத்திலேயே தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.

நான் ஏற்கெனவே சொன்ன மாதிரிப் புண்களில் சாணி, மண், கொடி, போன்றவற்றைப் போடக் கூடாது.

வாய்ப்பூட்டு நோய் வந்தவரை உடனுக்குடன் தனிமைப்படுத்தி, மருத்துவமனையில் சேர்த்து மருத்துவம் செய்தால் நோயாளிக்கும் நல்லது; மற்றவர்களுக்கும் நோய் பரவுவது தடுக்கப்படும்!

வந்தனா: நல்லது, மாமா. வாய்ப்பூட்டு நோயைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். நான் இப்போதே வீட்டிற்குச் சென்று நீங்கள் சொன்ன தடுப்பு ஊசிகளையெல்லாம் முறையாகப் போட்டிருக்கிறேனா என்பதை அம்மாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன். நீங்கள் அகிலாவை நல்ல முறையில் குணமாக்கி அனுப்புங்கள். வருகிறேன், மாமா! குட்பை!



"தம்பி! பேட்டைக்கு இப்ப டிக்கெட் ரூ. 1.25. இன்னும் 25 பைசா கொடு."

கண்டக்டரின் குரல் பலத்து ஒலித்தது. எல்லோருடைய பார்வையும் அங்கு சென்றது.

"என்னிடம் வேறு காசு இல்லை. ஒரு ரூபாய்க்கு எதுவரை போக முடியுமோ அதுவரை எனக்கு டிக்கெட் கொடுங்க, போதும். அங்கிருந்து நடந்து போயிடறேன்." அந்த ஏழைச் சிறுவன் பரிதாபமாகக் கேட்டான்.

"கோட்டையில் இறங்கிடணும்," கண்டக்டர் அவனிடம் டிக்கெட்டைக் கொடுத்துவிட்டு மற்றவர்களைக் கவனிக்கச் சென்று விட்டார்.

அந்தச் சிறுவனுக்குப் பக்கத்தில் இருந்த பெரிய தனவந்தர் ஒருவர் ஏழைச் சிறுவனை ஏளனப் பார்வை பார்த்துவிட்டு, அவன் தன் பக்கத்தில் உட்கார்ந்ததை ஏற்றுக் கொள்ள முடியாமலும், அதற்காக எழுந்து நின்று மரியாதையைக் குறைத்துக் கொள்ளக் கூடாது என்ற முடிவிலும் சீட்டின் ஓரத்திற்கு வந்து உட்கார்ந்து கொண்டு பார்வையை வெளியில் செலுத்தினார்.

கோட்டை நெருங்கிப் போவதை அறிந்து சிறுவன் இறங்குவதற்காக எழுந்தான். இதற்குள் ஒருவர் வேகமாக அவனைத் தள்ளிக் கொண்டு இறங்கிச் சென்றார். சிறுவனைத் தள்ளிக் கொண்டு இறங்கிய அவரிடமிருந்து கனத்த பர்ஸ் ஒன்று கீழே விழுந்தது. சிறுவன் அதைக் கையில் எடுத்து அவரிடம் சேர்க்க நிமிருவதற்குள் அவரும் தரையில் இறங்க, பஸ்ஸும் வெகுதூரம் நகர்ந்து விட்டது. பர்ஸுக்குரியவர் பார்வையிலிருந்து மறைந்து விட்டார்.

ஏழைச் சிறுவன் அருகிலிருந்த தனவந்தர் திடுதிப்பென்று கத்தினார். "இது என் பர்ஸ். இவன் பிக்பாக்கெட் அடித்துவிட்டான்!" பர்ஸை அவன் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டார் அந்தத் தனவந்தர்.

"இது இவருடையது இல்லை. ஒருவர் வேகமாக இறங்கிப் போய் விட்டார். அவரிடமிருந்து கீழே விழுந்ததுதான் இது!" சிறுவன் முறையிட்டான்.

"இல்லை. அவரிடம் இதைத் தரப் போவதாக உங்களை நம்ப வைத்து, இவனே எடுத்துக் கொள்ளத் திட்டம் போட்டிருக்கான். நம்பாதீங்க. உண்மையில் இது என் பர்ஸ்தான்!"

"டேய் தம்பி! அது உன்னோட பர்ஸா?" கண்டக்டர் நீதிபதியானார்.

"இல்லீங்க."

"சரி, நீ இறங்கிப் போ. கோட்டை வந்துட்டது."

"ஆனா இது நிச்சயமா இவரோட பர்ஸ் இல்லீங்க."

பஸ்ஸில் பெரும்பாலும் தனவந்தருக்கு ஆதரவாகவும் ஓரிருவர் மட்டும் சிறுவனுக்கு ஆதரவாகவும் பேச ஆரம்பித்தனர்.

போலீஸ் ஸ்டேஷன் போவதாக முடிவாயிற்று. சிறுவனையும் பஸ்ஸில் ஏறிக் கொள்ளும்படி ஒருவர் கூறினார்.

"நான் கோட்டை வரைதான் டிக்கெட் வாங்கினேன். இனி மேல் பயணம் செய்ய எனக்கு உரிமையில்லை. நான் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரே ஓட்டமாக ஓடி வந்துவிடுகிறேன். நீங்கள் போங்கள்," என்று சொல்லிக் கொண்டே ஓட ஆரம்பித்

க. இராமலிங்கம்



# பணக்கார ஏழை!

தான்.

இன்ஸ்பெக்டர், தனவந்தரிடம், "பர்ஸ் உங்களுடையது என்கிறீர்கள். அதில் என்ன இருக்கிறது என்று உங்களால் சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

"நிறைய ரூபாய் வைத்திருக்கிறேன். எவ்வளவு என்று கணக்குப் பண்ணி அதில் வைக்கவில்லை."

"வேறு ஏதாவது தடயம் இருக்கிறதா? உங்கள் போட்டோ, முகவரி அல்லது வேறு யாருடைய முகவரியாவது... இரசீதுகள், ஏதாவது...?"

"என்னுடைய பர்சைத் தருவதற்கு என்னிடமே கேள்விமேல் கேள்வியாகக் கேட்கிறீர்களே, தர மறுத்தால் நான் என் வக்கீல் மூலம் நடவடிக்கை எடுக்க நேரிடும்," என்று தனவந்தர் கோபமாகக் குதிக்க ஆரம்பித்தார்.

வெளியில் மோட்டார் சைக்கிள் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. ஒருவர் விரைந்து உள்ளே வந்து இன்ஸ்பெக்டரிடம், "சார், என் பர்சைப் பஸ்ஸில் தொலைத்துவிட்டேன். அது உங்களிடம் இருப்பதாகக் கேள்விப்பட்டு வாங்கிச் செல்ல வந்தேன்," என்றார்.

"பர்ஸ் உங்களுடையது என்பதை நிரூபிக்க முடியுமா?"

"அதில் என் முகவரி அட்டை இருக்கும். நான் ஒரு ஒப்பந்தக்காரர். ஆயிரம் ரூபாய்க்குத் தேசிய சேமிப்புப் பத்திரம் இப்போதுதான் டவுனில் என் பெயருக்கு வாங்கி அதில் வைத்திருக்கிறேன். எட்டு நூறு ரூபாய்த் தாள்கள் மற்றும் சில்லறை கொஞ்சம் இருக்கும். மூன்று மணிக்குள் நான் ஒப்பந்த விண்ணப்பம் ஒன்று போட வேண்டும். அதில் வைப்பதற்காகத் தேசியச் சேமிப்புப் பத்திரத்தைத் தேடும் போதுதான் பர்ஸ் தொலைந்தது தெரிந்தது. உடனே என் நண்பரின் மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொண்டு விசாரித்துக் கொண்டே வந்தேன். நான் சொல்வது யாவும் உண்மை. நீங்கள் பர்ஸைத் திறந்து சோதித்துப் பார்க்கலாம்."

இன்ஸ்பெக்டர் பர்ஸை எல்லோர் முன்னிலையிலும் திறந்து பார்த்தார். ஒப்பந்தக்காரர் சொன்னபடி யாவும் சரியாக இருந்தன. பணக்காரர் நைசாக நழுவ ஆரம்பித்தார். அருகில் இருந்தவர் அவரைப் பிடித்து நிறுத்தினார்.

அந்த ஏழைச் சிறுவனை எல்லோரும் மனதாரப் பாராட்டினர். தனவந்தர் தலைகவிழ்ந்து நின்றார்.

"நிறையப் பணம் இருந்தும் மனத்தால் தனவந்தர் ஏழையாயிருக்கிறார். மிகவும் ஏழையாக இருந்தும் — மற்றவர்களின் பொருளுக்கு ஆசைப்படாததோடு உரியவரின் பொருளை உரியவரிடம் சேர்க்க வேண்டும் என்ற குறிக்கோளோடு இருக்கும் அந்தச் சிறுவனோ மனத்தால் பணக்காரனாக இருக்கிறான்," என்றார் இன்ஸ்பெக்டர்.

பிள்ளைச் செல்வம் இல்லாத ஒப்பந்தக்காரர் அந்த அனாதை ஏழைச் சிறுவனைத் தத்து எடுத்துக்கொள்ளத் தன் விருப்பத்தை இன்ஸ்பெக்டரிடம் சொன்னார்.

# 2½ வயதில் ஆரம்பித்தான்



**லா**யிட்ஸ் காலனி அருகே உள்ள 'வள்ளலார் அபார்ட்மெண்ட்ஸ்' கட்டிடங்களில் ஏ—6 ப்ளாட்டின் கதவைத் தட்டியதும், சட்டென்று திறக்கப்பட்டவுடன் நம் கண்களில் படுவது —

2½' × 2' அளவுள்ள விநாயகர் படம். வண்ணப்படம். கம்பீரமானது. கீழே 'விஜய் ஆனந்த்' என்ற ஆங்கிலக் கையெழுத்து. ''நான்தான் ஸார் வரைந்தேன்,'' என்று பெருமையுடன் சொன்ன சிறுவனைத் திரும்பிப் பார்த்தேன்.

நம் புருவங்கள் மேலேற ஒரு பிரமிப்பு. சுமார் 4 அடி உயரம். வாரப்படாத தலை. அலைபாயும் துறுதுறுக்கும் கண்கள். பளீரென்ற பல் வரிசை.

''இரண்டரை வயதாகும் போதே இவன் இப்படித்தான்,'' என்று ஆரம்பித்தார் தாய் தாட்சாயினி ராதாகிருஷ்ணன்.

''என் அம்மா இவனை மாடிப்படிக் கட்டில் உட்கார வைத்திருந்தாள். வாசலில் கை வண்டியில் வெங்காய வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. இவன், அந்த வண்டிக்காரரையும் வண்டியையும் பார்த்துக் கொண்டேயிருந்தவன், சட்டென்று உள்ளே ஓடினான். மேசை மீதிருந்த பேப்பர், பென்சிலை எடுத்து வந்தான். தரையில் பரப்பி வைத்து. சட்சட்டென்று வெங்காய வண்டி, வியாபாரம் செய்பவர் என்று படங்கள் வரைந்து விட்டான். வீட்டில் எல்லோரும் அசந்து விட்டோம்!''

இந் நிகழ்ச்சியைக் கேட்கும் போது விஜய் ஆனந்துக்குச் சிரிப்பும், வெட்கமும் போட்டி போடுகின்றன.

''அசோக் லே லாண்டில் பணிபுரியும் இவன் தந்தை புகைப்படக் கலைஞரும் கூட. மகனுக்கு அதிக செல்லம் கொடுப்பார். நிறைய வர்ணங்கள், வரையும் உபகரணங்கள் எல்லாம் வாங்கிக் கொடுத்துள்ளார்...'' தாய் சொல்லிக் கொண்டே போனார்.

''சரி.. தம்பி, நீ ஸ்கூலிலே பரிசு வாங்கியிருக்கியா?''

''ஓ! பள்ளியில் படம் வரையும் 'ட்ராயிங்' படிப்பில் பரிசு வாங்கியிருக்கேன். சில சமயம் ட்ராயிங் மாஸ்டர் வெளியே போனால், நானே மாஸ்ட்டராக இருந்து, என் நண்பர்களுக்குப் படம் போடச் சொல்லிக் கொடுப்பேன்...''

''உனக்கு எந்தப் படம் வரைய ரொம்ப ஆசை?''

''மிருகங்கள், பறவைகள், அதற்குப் பிறகு சாமி படங்கள். விநாயகர், ஆஞ்சநேயர் படங்கள்...''

''அடேடே! வாழ்த்து அட்டைகள் கூடப் போடுவியா?''

''ஓ! ஒரு சமயம் புத்தாண்டு வாழ்த்துக்குப் படம் போட்டுத் தந்தேன்...'' பேசும் போது அவன் இமைகள் படபடக்கக் கால், கைகள் ஆட்டிக் கொண்டே பேசும் சுபாவம் நம்மை ஈர்க்கிறது.

''படம் வரைந்து விட்டால் போதுமா? மற்றப் பாடங்கள் எப்படி?''

''நல்லாவே படிக்கிறான். கிங் ஆதர்ஷ் ஹையர் செகண்டரி பள்ளியில் நல்ல ராங்க் வாங்குகிறான்...'' தாயின் பேச்சினூடே புகுந்து செல்கிறாள் சகோதரி.

''இவன் 'கீதோபதேசம்' படம் அற்புதமா வரைகிறான். இப்ப பாருங்களேன், பேட்டியின் போதே இவ்வளவு படங்கள் வரைந்து விட்டான்,'' என்றார்.

உண்மைதான். சுமார் 45 நிமிடங்களில் இவ்வளவு படங்களை வரைந்து தள்ளி விட்டான் இந்தப் பன்னிரண்டு வயதுப் பையன்!

நன்றாக ஆங்கிலம், இந்தி பேசுகிறான்.

''இவன் ஓவியத் திறமையை வளர்த்து, படம் வரையச் சொல்லித் தரும் ஸ்கூல் ஆஃப் ஆர்ட்ஸில் இவனைச் சேர்த்துப் பெரிய ஓவியனாக ஆக்க விரும்புகிறேன்,'' என்றார் தாய்.

இறைவன் அருளால் பிரபலமான ஓவியனாக வளரட்டுமே!

பேட்டி: **'சின்ன முருகன்.'**

படம்: **பிரபுசங்கர்.**

அட்டை வண்ணப்படம்: **யோகா.**

**பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.**

**நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.**

**ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.**

**ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—**


படுத்துக்கொண்டு தூங்கேண்டா!
தூங்கிற பூச்சாண்டி வர மாதிரி இருக்கு தாத்தா!
பின்னே முழிச்சுண்டே இரு!
முழிச்சுண்டிருந்தா நீ பூச்சாண்டி மாதிரி இருக்கியே தாத்தா!
மாலா

REGISTERED NO. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka




ஓடி விளையாடும் போது,
பாடி மகிழும் போது...

# மகிழ்ச்சி மேலும் பெருகவே
# ஃபன்பைட் கையில் இருக்குதே.




காம்ப்கோ வழங்கும்
ஃபன்பைட்.

க்ரீம் நிறைந்த, அருமையான
சாக்கலேட். இதன் உள்ளே
மொறுமொறுவென வேஃபர்.
அதைச் சுற்றிலும் சுவையான
சாக்கலேட்.

குதூகலமும் கொண்டாட்டமும்
மேலும் சிறக்க.

இந்தியாவின் மிகப் பெரிய, அதிநவீன ஆலை அளிப்பது

காம்ப்கோ லிமிடெட், மங்களூர்

Other Campco chocolates: Milk | White | Treat | TURBO | Belairs | Megabite | Playtime | RUBIES | TOFFEE | Campco beverages: WINNER | COCOA

R K SWAMY/CL/7804